(ALL RIGHTS RESERVED.)
இந்தப் பத்ரிகைக்குரிய விஷயங்களை அனுமதியின்றி ஒருவரும் ப்ரசுரிக்கக்கூடாது.

# பிழைக்கும் வழி

வித்யா விஹாரிணியும் சேர்ந்தது.

# PRACTICAL LIFE.

WITH WHICH IS INCORPORATED THE VIDYA VIHARINI.

ஜி. எ. வைத்யராமன், பி.எ., பத்ராதிபர்.
G. A. VaidyaRaman, B.A., EDITOR.

புஸ்தகம் 5. Vol. 5. ப்ரமாதீச௵ புரட்டாசிமீ—SEPTEMBER 1913. ஸஞ்சிகை 9. No. 9.

பொருளடக்கம்.

| | பக்கம். |
|---|---|
| யாஸங்களுக்கு வேதுமதிகள் | ... 450 |
| விசேஷ வ்யாஸங்கள்.— | |
| ஆகஸ்டுமாஸத்து வ்யாஸப்போட்டி விஷயம் | ... 450 |
| க்ராம உபாத்யாயர்கள் பொது ஜனங்களுக்கு உதவிசெய்வதெப்படி? —ஆர். நாராயணஸ்வாமி அய்யர் | ... 451 |
| ரு —முத்துவைய பிள்ளை | ... 454 |
| எண்ணெய் வித்துக்களின் ஏற்றுமதி | ... 455 |
| நிலஸ்வான்களே, விழித்துக்கொள்ளுங்கள்! —பத்ராதிபர் | ... 458 |
| தையும் ஜீவ்ய சரித்ரமும்.— | |
| க்ருஷ்ண தாஸ் பால். —எம். வி. ஈச்வர அய்யர் | ... 462 |
| விசேஷத்திரட்டு.— | |
| செங்கற்களும் ஓடுகளும் | ... 465 |
| எருக்களும் உரங்களும் | ... 467 |
| மண்ணீரத்தின் ப்ரயோஜனம் | ... 469 |
| தஞ்சைஜில்லா கான்பரென்ஸ் | ... 471 |
| த்ரிகை ஆராய்ச்சி. | ... 473 |
| பையன்கள் பகுதி. | ... 477 |
| த்ரீகள் பகுதி. | ... 479 |
| குதிக்குறிப்புகள்.— | |
| விவஸாயம்—வ்யாபாரம்--கைத்தொழில்--பொருளாதாரம் — கோவாபரேஷன்—பாங்கி வ்யாபாரம் — இன்ஷ்யூரென்ஸ்—வித்யாவிஷயம்—விலையுள்ளபொருள்கள்--வ்யாபார முறைகள்—சாஸ்த்ரமும், யந்த்ரங்களும், நூதன கற்பிதமும்—சட்டம்—வைத்யம்—வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்—விநோதங்கள்—யுக்திகளும் முறைகளும்—தமிழ்க் கல்வி | ...481—498 |
| ாஸ வர்த்தமானம். | ... 499 |
| ாலஸ்திதி. | ... 503 |
| ஞ்சாங்கம். | ... 504 |

CONTENTS.

| | PAGE. |
|---|---|
| **Prize Essay Competition** | ... 450 |
| **Special Articles—** | |
| THE AUGUST PRIZE ESSAY COMPETITION | ... 450 |
| HOW CAN VILLAGE SCHOOL MASTERS HELP THE GENERAL PUBLIC? —R. Narayanaswami Aiyar | ... 451 |
| MANURE —K. Muthuvayya Pillai | ... 454 |
| EXPORT TRADE IN OIL SEEDS | ... 455 |
| WAKE UP, LANDHOLDERS! —The Editor | ... 458 |
| **Story and Biography—** | |
| KRISTO DAS PAL —Mr. M. V. Ishwara Aiyar | ... 462 |
| **Selections—** | |
| Bricks and Tiles | ... 465 |
| Manures and Fertilisers | ... 467 |
| Use of Soil Moisture | ... 469 |
| Tanjore District Conperence | ... 471 |
| **Review of the Press** | ... 473 |
| **Boys' Section** | ... 477 |
| **Ladies' Section** | ... 479 |
| **Departmental Notes—** | |
| Agriculture ... ... ... | ... 481 |
| Commerce ... ... ... | ... 483 |
| Industry ... ... ... | ... 484 |
| Economics ... ... ... | ... 485 |
| Co-operation ... ... | ... 486 |
| Banking ... ... ... | ... 487 |
| Insurance ... ... ... | ... 488 |
| Education ... ... ... | ... 489 |
| Economic Products ... ... | ... 490 |
| Business Methods ... ... | ... 491 |
| Science, Machinery and Invention | ... 492 |
| Law ... ... ... | ... 493 |
| Medicine ... ... ... | ... 494 |
| Fun and Anecdote ... ... | ... 495 |
| Curiosities ... ... ... | ... 496 |
| Hints and Recipes ... ... | ... 497 |
| Tamil Literature ... ... | ... 498 |
| **Diary of the Month** ... ... ... | ... 499 |
| **Season** ... ... ... | ... 503 |
| **Calendar** ... ... ... | ... 504 |

G. A. VaidyaRaman & Co., 3 & 4, S


SUPREME CONTENTMENT
AND satisfaction are assured the purchaser of Lalimli Blankets.
You will be needing warm blankets now for these colder nights. What brand will you buy? Will you purchase ordinary blankets excessively heavy but barely protective or will you buy Lalimli, pure wool, medium weight blankets that keep you perfectly warm without over-heating?
The superiority of Lalimli Blankets is due to the purity and quality of the wools, which are free from all mixtures, and which wear better and wash better than any other blankets sold. Write for samples and prices sent free on application.
LALIMLI BLANKETS
CAWNPORE WOOLLEN MILLS CO., LD.
CAWNPORE.



**KRISTO DAS PAL.**

க்ருஷ்ண தாஸ் பால்.

# பிழைக்கும் வழி

வித்யா விஹாரிணியும் சேர்ந்தது.

## PRACTICAL LIFE.

WITH WHICH IS INCORPORATED THE VIDYA VIHARINI.

ஜி. எ. வைத்யராமன், பி. எ., பத்ராதிபர்

G. A. VaidyaRaman, B.A., EDITOR.

புஸ்தகம் 5. Vol. 5. } ப்ரமாதீசஹு புரட்டாசிமீ, SEPTEMBER 1913. { ஸஞ்சிகை 9. No. 9.


## Practical Life.

A popular illustrated Tamil monthly magazine of general information and instruction devoted largely to agriculture, trade, industry, economics, story, biography, citizenship, and popular, scientific and technical education.

'Practical Life' is subscribed for by Government for use in the agricultural stations and by several Local Boards and Municipalities for the use of the teachers and pupils in the schools under their control.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | *Inland.* Rs. A. P. | | *Foreign.* Rs. A. P. |
|---|---|---|---|
| Per annum ... | 4 0 0 | ... ... | 6 0 0 |
| Single copy ... | 0 6 0 | ... ... | 0 8 0 |
| Sample copy ... | 0 2 0 | ... ... | 0 3 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | |
|---|---|---|
| 1 Page | ... 5 0 0 | per month. |
| ½ do | ... 2 8 0 | do |
| ¼ do | ... 1 4 0 | do |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors**:—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. Accepted articles will be paid for on publication. It will be understood that the publishers may at their discretion republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. Vaidya Raman & Co., 3 & 4, Sunkurama Chetty Street, Georgetown, Madras.

## பிழைக்கும் வழி.

முக்யமாய் விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில், பொருளாதாரம், கதை, ஜீவ்ய சரித்ரம், ப்ரஜா லக்ஷணம், வித்யா விஷயங்கள் அடங்கிய ஸகலருக்கும் உபயோகமான ஒரு மாஸாந்தரத் தமிழ்ப்பத்ரிகை.

விவஸாயப் பண்ணைகளின் உபயோகத்துக்காக கவர்ன்மெண்டாரும், ஸ்கூல்களில் உபாத்யாயர்கள், மாணாக்கர்கள், இவர்களுடைய உபயோகத்துக்காக பல லோகல் போர்டுகளும் முனிஸிபாலிட்டிகளும் 'பிழைக்கும் வழி'யை வாங்கிவருகிறார்கள்.

தபால் சார்ஜ் உள்பட சந்தா விவரம்.

| | உள் நாடு. | | அந்ய நாடு. |
|---|---|---|---|
| வருஷம் 1 க்கு ... | 4 0 0 | ... | 6 0 0 |
| தனிப்ரதி ... | 0 6 0 | ... | 0 8 0 |
| மாதிரி காபி ... | 0 2 0 | ... | 0 3 0 |

சந்தாப்பணத்தை ஒரு எஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

| | | |
|---|---|---|
| 1 பக்கத்திற்கு | மாஸம் ஒன்றுக்கு | 5 0 0 |
| ½ பக்கத்திற்கு | ,, ,, | 2 8 0 |
| ¼ பக்கத்திற்கு | ,, ,, | 1 4 0 |

வ்யாஸம்எழுதுகிறவர்கள்கவனிக்கவேண்டியவை

விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வ்யாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் ப்ரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனைசெய்யப்படும். ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

ஸம்பாவனை செய்திருக்கும் வ்யாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேணுமானாலும் மறுபடி ப்ரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை கிருபநேயர்கள் அறியவேணும்.

ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3, & 4, சுங்குராம செட்டித் தெருவு, ஜார்ஜ் டவுன்,
மதராஸ்.

## PRIZE ESSAY COMPETITION
### வ்யாஸங்களுக்கு வெகுமதிகள்.

1913-ம் வருஷம் ஜுலைமாஸம் முதல் நமது பத்ரிகையில் ஒரு வ்யாஸப் போட்டி நடத்தப்பட்டு வருகிறது. எந்த விஷயத்தைப் பற்றி வ்யாஸம் எழுதவேண்டும் என்பதை ஒவ்வொரு ஸஞ்சிகையிலும் குறிப்பிடுவோம். சந்தாதாரர்கள் மட்டும் இந்தப் போட்டியில் சேரலாம். வ்யாஸங்களை ஸுலபமானதும் தெளிவானதுமான தமிழ் நடையில் எழுத வேண்டும்.

ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாசியின் ஒரே பக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். ஒவ்வொரு வ்யாஸமும், நமது பத்ரிகையில் 2½-பக்கம் அதாவது 4000 எழுத்துகளுக்கு மேல் போகக் கூடாது. ஒப்புக்கொள்ளப்பட்ட வ்யாஸங்களில் முதல்தரமானதை எழுதியவருக்கு ஐந்து ரூபாய் பரிசு கொடுக்கப்படும்,

ஒப்புக்கொள்ளப்பட்ட மற்ற வ்யாஸங்களில் எவைகளையாவது ப்ரசுரிக்கும் பக்ஷத்தில் அவைகளுக்கும் நமது பத்ரிகையில் வெளியாகும் மற்ற வ்யாஸங்களைப்போல் வழக்கப்படி பக்கம் ஒன்றுக்கு ஒரு ரூபாயாக ஸம்பாவனை செய்யப்படும். வ்யாஸங்களைத் தராதரம் பார்ப்பதில் பத்ராதிபருடைய தீர்மானம் முடிவானது.

நவம்பர் மாஸத்துக்கு வ்யாஸம் எழுதுவதற்கு விஷயம்:—

"கக்ஷி ப்ரதிகக்ஷி உள்ள க்ராமங்களில் எல்லாரையும் எப்படி ஒன்ருய்ச் சேர்க்கலாம்?"

வ்யாஸங்களை நவம்பர்மீ 30உக்குள் அனுப்பிவிடவேண்டும். அந்தத் தேதிக்குப் பின் அனுப்பப்படும் வ்யாஸங்கள் வ்யாஸப் போட்டிக்கு அங்கீகரிக்கப்படமாட்டா.

பத்ராதிபர்,

## SPECIAL ARTICLES.
### விசேஷ வ்யாஸங்கள்.

### THE AUGUST PRIZE ESSAY COMPETITION

ஆகஸ்டு மாஸத்து வ்யாஸப் போட்டி விஷயம்.

சென்ற ஆனி மாஸத்து ஸஞ்சிகையில் ஆகஸ்ட் மாஸத்துப்போட்டிக்காக, "க்ராமாந்தரப் பள்ளிக்கூட உபாத்யாயர்கள் பொது ஜனங்களுக்கு எந்த விதங்களில் ஸுலபமாய் உதவி செய்யலாம்?" என்னும் விஷயத்தைப் பற்றி எழுத வேண்டு மென்று குறிப்பிட்டிருந்தோம். அந்த விஷயத்தைப்பற்றி எழுதியனுப்பப்பட்ட வ்யாஸங்களில், ஸைதாப்பேட்டை, கவர்ன்மெண்ட் ட்ரெய்னிங் ஸ்கூல், டெம்பரரி அஸிஸ்டண்டாகிய மிஸ்டர் ஆர். நாராயணஸ்வாமி அய்யர் எழுதிய வ்யாஸமே மற்றவைகளைக் காட்டிலும் மிகச் சிறந்ததாயிருக்கிறதால் மிஸ்டர் நாராயணஸ்வாமி அய்யருக்கு 5-ரூபாய் வெகுமதியளிக்கப்பட்டிருக்கிறது.

திருச்சினப்பள்ளி கவர்ன்மெண்டிலுள்ள ஆர். ஸி. ட்ரெய்னிங் ஸ்கூலைச் சேர்ந்த மிஸ்டர் வேணுகோபால் நாயுடு எழுதிய வ்யாஸம் அதற்கடுத்தபடி ரொம்ப சிறந்ததாயிருக்கிறது. இவருடைய வ்யாஸத்தை இன்னெரு ஸஞ்சிகையில் ப்ரசுரிப்போம். ப்ரசுரித்தபின் ஸம்பாவனை அனுப்பப்படும்.

மிஸ்டர் டி. ஸி. வி. ரமணய்யர் எழுதிய வ்யாஸத்தில் அவர் பின்வருவன க்ராமந்தரப்பள்ளிக்கூட உபாத்யாயர்கள் பொதுஜனங்

களுக்கு செய்யக்கூடிய நன்மைகள் என்கிறார் :—உபாத்யாயர் தாமே நல்ல நடத்தையோடு நடந்து காட்டுதல்; பத்ரிகை வரவழைக்கும்படி தூண்டி பத்ரிகைகள் வரவழைக்க ஒரு பொது பண்டு ஸ்தாபித்தல்; ஸுகாதாரம், விவஸாயக்கல்வி, பஞ்சாயத்து முதலியவைகளைப்பற்றி ஜனங்களுக்கு போதித்தல்.

வ்யாஸம் எழுதியனுப்பினவர்களில் பெரும்பாலார் பத்ரிகைகள் வரவழைத்து வாசிக்கும்படி உபாத்யாயர்கள் தூண்ட வேண்டுமென்று சொல்லுகிறார்கள். ஆனால் மிஸ்டர் கே. எஸ். ஸுப்ரமண்ய அய்யர் பத்ரிகைகள் வாங்குவதற்காக உபாத்யாயர்கள் க்ராமவாஸிகளை முதலில் பணம் கேட்டால் கொடார்கள் என்றும், தாமே முதலில் பத்ரிகை வரவழைத்து ஜனங்களுக்கு வாசிக்கக் கொடுத்து, அவர்களுக்கு பத்ரிகைகள் வாசிப்பதில் ஆவலுண்டாகும்படி செய்து, பிறகு அவர்களிடம் பத்ரிகையின் சந்தாவில் ஒரு விகிதம் கொடுக்கும்படி கேட்டால் கொடுத்துவிடுவார்கள் என்றும் சொல்லுகிறார். இந்த யோசனை யாவரும் கவனிக்கத்தக்கது. மற்ற வ்யாஸங்களில் விசேஷமான யோசனைகளும் கருத்துக்களும் இல்லாததால் அவைகளைக் குறிப்பிடவில்லை. ப்ரசுரிக்காத வ்யாஸங்களைத் திரும்பப்பெற வேண்டுவோர் அரை அணா ஸ்டாம்ப் அனுப்பினால் வ்யாஸங்கள் அனுப்பப்படும்.

---

## HOW CAN VILLAGE SCHOOL MASTERS HELP THE GENERAL PUBLIC ?

BY

Mr. R. NARAYANASWAMI AIYAR.

### க்ராம உபாத்யாயர்கள் பொது ஜனங்களுக்கு உதவி செய்வதெப்படி?

"க்ராமாந்தப் பள்ளிக்கூட உபாத்யாயர்கள் பொது ஜனங்களுக்கு எந்த விதங்களில் ஸுலபமாய் உதவி செய்யலாம்."

---

ஒரு க்ராமம் அபிவ்ருத்தியாவது, அதிலுள்ளவர்களாகிய பொது ஜனங்கள், குழந்தைகள், உபாத்யாயர்கள் ஆகிய இவர்கள் அவரவர்கள் தங்கள் கடமைகளை ஸரிவரச் செய்வதனால்தான்.

ஸாதாரணமாய், ஆதாரப்படிப்பு அதிகமில்லாதவர்களாயும் ஆசார்யபக்தியுள்ளவர்களாயுமிருக்கப்பட்ட க்ராமவாஸிகளும் பேதமையான குழந்தைகளும் தங்கள் அறிவுக்கும் சக்திக்கும் இயன்ற மட்டில் தங்களுக்குரிய கடமைகளை குறைவின்றிச் செய்து வருகிறார்கள்.

ஆனால் உபாத்யாயர்கள் தங்கள் தொழில்களைப் பூர்த்தியாய்ச் செய்து வருகிறதாகச் சொல்ல முடியாது. ஏதோ பிள்ளைகளுக்கு பரீக்ஷைக்கு வேண்டிய படிப்பு சொல்லிக் கொடுத்துவிட்டால் போதும் என்றே அநேகர் நினைத்து, பொது ஜனங்களுக்கு விசேஷமாக உபகாரம் செய்கிறதில்லை. பட்டணங்களில் குருபக்தி குறைந்திருக்குமளவு குறைவுபடாத இந்த க்ராமத்தில் உள்ளவராயும், எல்லாம் தெரிந்தவர் என்று மதிக்கப்பட்டவராயும், ஒத்தாசைக்கு எதிர்பார்க்கப்பட்டவராயுமிருக்கப்பட்ட உபாத்யாயர் அந்த குரு விச்வாஸிகளாகிய தன் க்ராமத்தார்களுக்கு இப்பொழுது செய்துவரும் உதவி அவர் அறிவுக்கும் சக்திக்கும் ஏற்றபடி செய்யப்பட்டதாக நினைக்கப்படமாட்டாது. க்ராமம் செழிக்காமலிருந்துவருகிறதற்கு உபாத்யாயர் தன் கடமையைப் பூர்த்தியாகசெய்யாமலிருப்பது ஒரு முக்ய காரணமாகச் சொல்லலாம். இது பரிதபிக்கத்தக்க விஷயம்.

மேலும் குரு அல்லது 'டீசர்' என்றால் அஞ்ஞானத்தைப் போக்குகின்றவர் என்று கருத்து. குரு என்றால் ராஜாவுக்கும் பெயருண்டு. ஆகையால் பரோபகார சிந்தையுள்ள உபாத்யாயரை ஓர் அரசருக்கு ஒப்பிடலாம். இப்படி

உபகாரம் செய்யாத உபாத்யாயரை 'டீசர்' என்று சொல்ல ந்யாயமில்லை.

ஆயினும் ச்ரத்தையுள்ள "டீசர்" லகுவாய் மூன்று விதமாக தன்வேலைகளைச் செய்துவரலாம். அவையாவன; — 1. தன்னை சுத்தனாக வைத்துக்கொள்ளுதல்; 2. பிள்ளைகளின் அபிவ்ருத்தியை கவனித்தல்; 3. க்ராமத்தார்களுக்கு தான் நேரில் உபகாரம் செய்தல்.

1. "டீசர்" நல்ல நடவடிக்கை உள்ளவராக இருந்தால்தான் இவரிடத்தில் ஜனங்களும் குழந்தைகளும் வைத்திருக்கும் குரு விச்வாஸம் அதிகரிக்கும். தவிர, இவருடைய ஒழுக்கத்தை ப்ரியத்தோடு மாதிரியாக அனுஷ்டித்தும், இவர் உபதேசத்தை நம்புதலுடனும் கவனத்துடனும் கேட்டும் முழுப்பலனை அடைவார்கள். ஆகையால் க்ராமவாஸிகள் ஏமாறுமலிருக்கும்படிக்கு தன்னை உபாத்தியாயர் அடிக்கடி ஆராய்ந்து பார்த்து சீர்திருத்திக் கொள்ளவேண்டும்.

2. இன்னும், மாணுக்கர்களின் மனோசக்தி, சரீர ஸௌக்யம், நற்குணம், தெய்வபக்தி, இவைகளை அவர்களுடைய ஸ்வபாவத்தை யறிந்து அன்போடு ஸரியான முறையில் பயிற்சி பண்ணி வருவதாலும், தகுந்த கைத்தொழிலில் அவர்களை பழக்கம் செய்ய உதவிபுரிவதாலும், அந்தப் பிள்ளைகளை தங்கள் பெற்றோர்களுக்கு குடும்பக் கைத்தொழிலில் ஒத்தாசையாக வேலை செய்து வரும்படிக்கும், தங்களுக்கும், பெற்றோர்களுக்கும், க்ராமத்தார்களுக்கும், ப்ராணிகளுக்கும் அவர்கள் செய்ய வேண்டிய கடமைகளை நன்றாகச் செய்து வரும்படிக்கும் உபாத்யாயர் உதவி செய்யலாம்.

3. மேலே சொல்லியபடி, ஜனங்களுக்கு நேரில்செய்யாத உதவிகளைத்தவிர, நேரிலேயே உபாத்யாயர் பொதுவாய் இரண்டு விதத்தில் ஒத்தாசை செய்யலாம். அவையாவன.—(i) ராத்ரி பள்ளிக்கூடம் வைத்தல், (ii) க்ராம ஸங்கங்கள் ஏற்படுத்துதல்.

ராத்ரி பாடசாலை.

(i) சம்பளம் பெற்றுக்கொண்டாவது அல்லது தர்மத்துக்காகவாவது ராத்ரியில் கொஞ்சகாலம் க்ராமத்தொழிலாளிகளுக்கு முக்யமாய் வாசித்தல், எழுதுதல், கணக்கு முதலியவைகளைக் கற்றுக்கொடுத்து க்ராம வாஸிகளில் அநேகர் கையெழுத்துப்போடத் தெரியாதவர்கள், கிறல் போடுகிற பேர்வழிகள் என்னும் கல்மஷச்சொல்லை ஒழிக்க யத்னம் செய்யலாம். அத்துடன், ஸாவகாச முண்டானல் அத்யாவச்யமான சில பொதுஜன விஷயங்களைப்பற்றி அங்கேயே அறிவிக்கலாம். த்ருஷ்டாந்தமாக, "கைத்தொழிலின் மேன்மை" யைப்பற்றிச் சொல்லலாம். அதாவது, இதுவரையில் நிலத்தில் இருந்து பாடுபட்டு லாபங்கண்ட மனிதர்களில்கூட சிலர் இப்பொழுது அப்படி நேரில் உழைக்காமல் நிலத்தைக் குத்தகைக்கு விட்டு, லாப மடையாமல் மோசம் போனவர்களாயிருக்கிறார்கள். அன்றியும், அநேகர் ஆங்கிலேய பாஷையில் நன்றாய் கல்விபயின்றும், அநேகர் சோம்பேறிகளாய் நமக்கு பிழைப்பு எப்படி என்று ஏக்கங் கொண்டிருப்பதைப் பார்க்க அதிக விஸனமாக விருக்கிறது. ஆனல் விவஸாயம், கைத்தொழில், வர்த்தகம் முதலியவற்றில் ஆங்கிலேயர்கள் விசேஷமாய்ப் பயிற்சி செய்து வருகிறபடியால் அவர்களுடைய தேசம் அபிவ்ருத்தி யடைந்திருக்கிறது. ஆகையால் நமது ஜனங்கள் ஆங்கிலேயர்களைப்போல் பெரும்பாலும் கைத்தொழிலில் பழகி நாளாவட்டத்தில் ஒருவாறாக ஸுகஜீகளாக ஆகலாம். அவர்களிடமிருக்கும் இப்படிப்பட்ட நல்விஷயங்களை நன்கறிந்து அவைகளை அப்யஸித்து ஸபலத்தை அடையவேணும். இந்த சூடான நாடுகளில், குளிர்தேசத்து ஜனங்

களாகிய வெள்ளைக்காரர்கள் உடை தரிப்பது போல நாம் உடுத்துவது நமக்கு தேக அஸௌக்யத்தை உண்டு பண்ணும் என்பதைத் தெரிந்துகொள்ள வேணும். இப்படி உபதேசிப்பதனால் நாளுக்கு நாள் க்ராமக்கைத்தொழில் சீர் குலைந்து போவதை நிறுத்த ஒருவாறு முயலுவதற்கு ஜனங்களை உத்ஸாகப் படுத்தலாம்.

ஸங்கங்கள்.

(ii) இன்னம், இவர் ஆதுரராக விருந்து ஒரு க்ராமஸபை ஏற்படுத்தி, தன்னையே அதற்கு காரியதரிசியாக அமைத்துக் கொண்டு, உபயோகமுள்ள பத்ரிகைகளை வரவழைத்து ஸபையின் மெம்பர்கள் தற்காலத்தில் உலகமெங்கும் நடந்தேறி வரும் விஷயங்களை வாசித்துத் தெரிந்து கொள்ளும்படி உதவி செய்வதினாலும்; 'பஞ்சம் வராமல் தடுப்பது,' 'க்ராம விளையாட்டு,' 'தோட்டம்,' 'கண்காக்ஷி,' 'பள்ளிக்கூடம்,' 'கைத்தொழில்,' 'வ்யாபாரம்,' 'கள்ளுக் குடித்தல்,' 'ஒன்று கூடி வாழ்தல்,' 'நாணயமாயிருத்தல்,' 'தெய்வபக்தி' 'பெண் கல்வி,' 'பிள்ளைகளை வளர்க்கும் விதம்,' 'ராஜாங்கத்தார் செய்யும் விவஸாய உதவி,' 'ராஜாங்கத்துக்குச் செய்ய வேண்டிய கடமை,' 'வரி செலுத்துவதின் காரணம்,' முதலிய தெரிந்து கொள்ள வேண்டிய விஷயங்களை தெரிந்தவர்களை வரவழைத்து ஸபையில் ஊரிலுள்ள ஸகல ஜனங்களுக்கும் ப்ரஸங்கம் செய்விப்பதினாலோ, அல்லது தானே ப்ரஸங்கம் பண்ணு வதனாலோ பொது ஜனங்களின் அறிவை வ்ருத்தி யாக்கி அவர்களை ஒழுக்கத்திற் சிறந்தவர்களாக்க ச்ரத்தை எடுக்கலாம். விவேகமில்லாத ஸாதாரண ஜனங்கள் வேலை செய்வதைக் காட்டிலும், எப்படியும் கல்வித் தேர்ச்சியினால் அறிவு விளக்கம்பெற்றவர்கள்வேலைசெய்யத்தலைப்படுவார்களாகில் அவர்களுக்கும் அவர்கள் க்ராமத்தாருக்கும் தேசத்தாருக்கும் பெருத்த நன்மைவிளையும் என்பதற்கு ஸந்தேகமில்லை,

மேற் சொல்லிய விதம், தாம் நேரில் உதவி செய்வதனால் ஜனங்கள் தங்கள் பொருள்களை பயன்படும்படி வினியோகப்படுத்த வேண்டிய ஸௌகர்யம் செய்யக்கூடும். அதாவது, வேண்டிய பதார்த்தங்களை நல்லதாயும் மலிவாயும் பெறுவதற்கான 'வாங்கும் ஐக்ய ஸங்கம்' ஒன்று; தங்கள் நாணயம் கெட்டுப்போகாமலிருப்பதற்கு, க்ராம வ்யாபாரத்துக்கு ஹானி செய்துவரும் நடுமனிதர்களை ஒழித்து நேரிலேயே மொத்தமாக வாங்கும் பெரிய வ்யாபாரிகளோடு வ்யாபாரம் செய்ய 'விற்பனை ஸங்கம்' ஒன்று ; க்ராம விளைபொருள்களை வ்ருத்திபண்ணுவதற்கு சாச்வத்தான ஸங்கம் ஒன்று; க்ராமக் கைத்தொழில் ஸங்கம் ஒன்று; க்ராம பாங்கி முதலிய ஸங்கங்களை ஏற்படுத்த லகுவாய்த் தூண்டியும்; அந்த ஸங்கங்களை ஸ்தாபிக்க தனக்கு அனுபோக மில்லாதிருந்த போதிலும் புஸ்தகங்களில் படித்தும், இன்னும் பட்டணங்களிலுள்ள லாபமடைந்து வரும் ஸங்கங்களின் தெரிந்த அங்கத்தவர்களின் உதவியைக் கொண்டும் இந்தக் கோழை மனஸுள்ளவர்களாயும் பரம்பரையாக அனுஷ்டித்து வந்ததை மாற்றிக்கொள்ள இஷ்டமில்லாதவர்களாயுமிருக்கிற க்ராமவாஸிகளுக்கு த்ருப்திகரமாக தான் நேரிலிருந்து ஸங்கங்களை ஸ்தாபித்து லாபமடையும்படி அவைகளை நடத்திக் காட்டியும்; பொது ஜனங்களின் அஞ்ஞானத்தைப் போக்கடித்தும்; ஜாதி, மதம், பாஷை, தொழில், இவைகளால் வேறு பட்டிருக்கும் ஜனங்கள் நடுவிலிருந்து பொருந்த வைத்தும்; தன் ஊக்கத்தினாலும் உழைப்பினாலும் கீழ்த்திசைமேற்றிசை நாகரீகங்களை ஒன்றோடொன்று இசைத்தும், க்ராமத்தை செழித்தோங்கச்செய்து க்ராமவாஸிகளுக்கு எளிதில் உதவி

புரிந்து தனக்குள்ள 'டீசர்' என்ற பெயரையும் காப்பாற்றிக்கொள்ளலாம்.

ஆர். நாராயணஸ்வாமி அய்யர்.

---

## MANURE

BY

K. MUTHUVAYYA PILLAI.

### எரு

'எருச் செய்வது இனத்தான் செய்யமாட்டான்.' 'உரம் செய்கிறதுஉறவுடையான் செய்ய மாட்டான்' என்ற பழமொழி யாருக்கும் தெரிந்தவைகளே. எப்படி பசு, கன்று ஊட்டா விட்டால் பால் கறக்காதோ, அதுபோல உரம் கொடுக்காத வயல் நல்ல கண்டு முதலைக் கொடுக்காது. பூமியானது பயிருபங்கள் அடங்கிய களஞ்சியம். பயிர்களை பூமியிலுண்டாக்கினால் ஊட்டங்கள் குறைபு மல்லவா? இக்குறைவுக்கு எருவினால் ஈடு பண்ணமல் பயிர் செய்துகொண்டே போனால் கண்டு முதல் கம்மிப்படும். இப்படி பூமிவளம் குறைந்து கண்டுமுதல் கம்மிப்படாமலிருப்பதற்காக எரு விட்டு பயிர் செய்ய வேண்டியது முக்யம்.

அதற்கு வேண்டிய எருக்களில் மாட்டுக் கொட்டில் எருவும் முக்யமே. மாட்டுக்கொட்டிலில் விழும் சாணம், மூத்ரம், கூளம், குப்பை இவைகளை எல்லாம் சேதப் படாமல் சாஸ்த்ரோக்தமாக ஓரிடத்தில் சேர்த்து வைத்து, மட்கும்படி செய்து, ஊதா கருப்பு நிறமாய் மாறி பக்வத்திற்கு வந்திருப்பதுதான் மாட்டுக் கொட்டில் எரு. இவ்வெருவில் இலை, தழை உமி, உதவாதென்று விலக்கிய குப்பை, சாம்பல் இவைகளும் சேர்ந்திருக்கலாம். இவைகளில் குடிகள் மூத்ரத்தை சேகரித்து வைப்பதே கிடையாது. மூத்ரம் பூமியில் ஓடி ஓதம்பலாய்ப்போயோ அல்லது வேறு விதமாக நஷ்டம் அடைந்தோ, குடிகளுக்குப்ரயோஜனமில்லாமல் கெட்டுப்போய் விடுகிறது. விறகுக்ராக்கியென்று அடுப்பெரிக்கசாணத்தைமுட்டைதட்டி விடுகிறார்கள். ஆகையால் மாட்டுக் கொட்டில் எருவில் நிரம்ப முக்யமான மூத்ர நஷ்டத்தினாலும் பிறகு சாண நஷ்டத்தினாலும் நமது குடிகள் நஷ்டத்தை அடைகிறார்கள். மாடுகளுக்கு கூளம் குப்பைகளை படுக்கையாக விரித்து அவைகள் மூத்ரத்தை க்ரஹிக்கும்படி செய்ய வேண்டும். இப்படிச் செய்தும், சாணத்தை முட்டை யாக்காமல் நமது குடிகள் சில விடங்களில் சேகரித்து வைப்பது போல் பொட்டல் வெளியில் கொட்டி வைப்பதினால் வெய்யிலால் காரமெல்லாம் ஆவியாய்ப் போய் மழையால் ஸத்துக்களெல்லாம் கரைந் தோடிப்போய் விடுகிறது. சாணத்தை முட்டை தட்டி எரித்து விடுவதும், அப்படி முட்டை தட்டா விட்டாலும் சாஸ்த்ரோக்தமாய் சேகரித்துவைக்கத் தெரியாமல்பொட்டல் வெளியில் சேகரித்து வைப்பதும், ஆகிய இந்தஇரண்டு வகைகளினாலும் குடிகள் நஷ்ட மடைகிறார்கள். இன்னும், நமது சென்னை ராஜதானியில் எலும்புகள் தப்பெண்ணத்தால் தூஷிக்கப்பட்டு பூமிக்கு உரமாக உபயோகிக்கப் படுவதில்லை. ஆகையால் வெட்டியான் திடல்களிலும் பறச்சேரிகளிலும் உள்ள எலும்புகளை அன்ய நாட்டார் கைக்கொள்கிறார்கள். வருஷத்தில் நமது ராஜதானியில் லட்சக் கணக்காய் மாடுகள் சாகின்றன. எலும்பு ஏற்றுமதியால் ஸுமார் 4,5 லட்சம் ரூபாய் நமது ராஜதானியில் நஷ்டமாகிறது.

ஆகையால், குடிகள் தங்களுக்குக் கிடைக்கும் எலும்புகளை எல்லாம் எருக்குழியில் போட்டு மட்கும்படி செய்து பூமிக்கு இட்டால் நஷ்டம் நேரிடாது. பின்னும், அழுகிய ப்ராணிகள், சாக்கடை நீர், இவைகளெல்லாம் எருவாக உபயோகப்படாமல் வீணாக்கப்படுகின்றன. ஆடு மாடுகள் அடிக்கும் தொட்டியில் மாம்ஸங்களும் தோல்களும் போக பாக்கி கழிசல் பதார்த்த

ங்களையும் குடிகள் கவனிப்பதே யில்லை. இவைகளையெல்லாம் ஒரு குழியில் கூளம் குப்பைகளோடும் தழைகளோடும் போட்டு துர்க்கந்தம் உண்டாகாமலிருப்பதற்காக தினம் சாம்பலும் மண்ணும் போட்டு மூடி சீக்ரம் மடிப்பதற்கு கொஞ்சம் சுண்ணும்பு நீரும் மேலே தூவிக்கொண்டு வந்தால் இந்த எரு மடித்தவுடன் நல்ல உயர்ந்த எருவாகிறது. இவைகளை ஸரிவர சேகரித்து வைத்து எரு இடாததினுல் நமது ராஜதானியில் ஸுமார் 50,000 ஏக்கருக்கு மேல் புஷ்டி கொடுக்கக் கூடிய எருக்கள் நஷ்டமாகின்றன. இன்னும் நமது ராஜதானியில் பிண்ணுக்கு களை அதிகமாக உரத்திற்கு உபயோகிக்கா மல் ஏற்றுமதி செய்து விடுகிறுர்கள். எண்ணெய் கொடுக்கும் விதைகளுங் கூட ஏற்று மதி செய்யப்படுகின்றன. எண்ணெய் ஏற்று மதியால் நமது பூமிக்கு நஷ்டம் உண்டாக மாட்டாது, என்றுலும் எண்ணெய் விதை களும் பிண்ணுக்குகளும் ஏற்றுமதி செய்யப் படுவதால் நமது பூமிக்கு அதிக நஷ்டம் உண் டாகிறது. விலை மோரில் வெண்ணெய் எடுப் பதுபோல் நமது பிண்ணுக்கிலிருந்து அன்ய நாட்டார்கள் யந்த்ரத்தி னுதவியால் மறுபடி யும் எண்ணெய் எடுத்து பாக்கி இருக்கும் பிண் ணுக்கை உரமாகக் கொடுக்கிறுர்கள். அந்தோ என்ன அன்யாயம்! நமது அறிவின்மையால் எண்ணெய் விதைகள் பிண்ணுக்குகள் ஆகிய இவைகளை ஏற்றுமதி செய்து நமது ராஜதானி யிலிருந்து ஸுமார் 50,60 லட்ச ரூபாய்க்குக் குறையாத விலையுள்ள எருவை நஷ்டமடை கிறேம்.

சுருக்கமாகச் சொல்லுமிடத்து, உலகத்தில் உபயோகமற்ற வஸ்து ஒன்றும் கிடையாது. அட்டு, கசடு என்று தள்ளப்படுவதெல்லாம் ரொம்ப முக்யமான எருவாகிறது.

ஒன்றையும் தப்பெண்ணத்தின் பேரில் த்வேஷித்து அலட்சியம் செய்யாமல் எவ்வளவு அற்பவஸ்துவானுலும் அவைகளை வீணுக்கா மல் சேகரித்து பாதுகாப்போமானுல் நமக்கு ஒரு விஷயத்திலும் ஒரு நாளும் குறைவு ஏற் படவேமாட்டாது. மேற்கூறியிருக்கப்பட்ட ஒவ்வொரு எரு விஷயத்திலும் குடிகள் கவன மெடுத்துக் கொண்டு நஷ்டம் உண்டாகாமல் சேகரித்து வைத்து பூமிக்கு இடுவார்களே யானுல் அவர்களுக்கு இப்போது கிடைக்கும் வரும்படியைப் பார்க்கிலும் ஒன்றுக்கு ஒன் றரை கிடைப்பதற்கு ஸந்தேகமே யில்லை. இங் க்லீஷில் ஒரு பழ மொழியுண்டு; (waste not want not!) என்பது. எவ்வளவு அற்பவஸ்து வாயிருந்தாலும் ஒருவன் அதை வீணுக்கிப் பாழ் படுத்தாமல் இருந்தானேயாகில் அவனு க்கு ஒரு நாளும் வறுமை உண்டாகாது. எரு சேகரிக்கும் விஷயத்தில் நமது குடிகள் இந்தப் பழமொழியையும் எப்போதும் ஞாப கத்தில் வைக்கவேண்டும். இன்னும், பசுந் தாள் உரம், தோல் பதனிடுதலாலுண்டாகும் கழிவு பதார்த்தங்கள், பறவை எச்சம், மனி தர் மலம், மீன் உரம், குளத்துப்பொருக்கு முத லியவைகளெல்லாம் எருவுக்கு உபயோகப்படு கின்றன. எருச்சேர்ப்பதற்கு இன்னின்னதான் சேகரிக்க வேண்டிய தென்றும் சேகரிக்க வேண்டாததென்றுமில்லை. ஸகலஜீவப்ராணி களாலும் கழித்து விடப்பட்ட வஸ்துக்களைக் கூட எருவோடு சேர்த்துக்கொள்ளலாம்.

---

## EXPORT TRADE IN OIL SEEDS.

### எண்ணெய் வித்துச்களின் ஏற்றுமதி.

1912-1913-ம் வருஷத்தில் சென்னை ராஜ தானியிலிருந்து கடல் மார்க்கமாய் ஏற்றுமதி யான சரக்குகளில் எண்ணெய் வித்துகளின் மதிப்புத்தான் ரொம்ப அதிகமாயிருக்கிறது. மொத்தம் ஏற்றுமதியான சரக்குகளின் மதிப் பில்இது 100-க்கு 18.96 வீதமாயிருக்கிறது.

1911-1912-ம் வருஷத்தில் ஏற்றுமதியான எண்ணெப் வித்துகளின் மதிப்பு 4,06,50,070 ரூபாயாயிருக்க, 1912-1913-ம் வருஷத்தில் 4,69,29,899 ரூபாயாக அதிகமாகி இருக்கிறது. அதாவது, 62,79,829 ரூபாய்க்கு எண்ணெய் வித்துகள் அதிகமாக ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கின்றன. பின்வரும் கணக்கில் 1911-12-ம் வருஷத்திலும், 1912-13-ம் வருஷத்திலும் ஏற்றுமதியான எண்ணெய்வித்துகளின் நிறையும் மதிப்பும் காட்டப்பட்டிருக்கின்றன.

எண்ணெய் வித்துகள் ஏற்றுமதி.

| எண்ணெய்வித்துகள் | 1911—1912 | | 1912—1913 | | 1912-13-ல் அதிகம் அல்லது குறைவு | |
|---|---|---|---|---|---|---|
| | அந்தர் | ரூபாய் | அந்தர் | ரூபாய் | அந்தர் | ரூபாய் |
| ஆவியாகக்கூடியதைல வித்துகள் ... | 39,649 | 4,32,285 | 45,132 | 2,75,979 | +5,483 | —1,56,306 |
| ஆமணக்கு ... | 4,29,399 | 31,23,718 | 3,96,013 | 28,23,233 | —33,386 | —3,00,485 |
| தேங்காய்(கொப்பரை) | 6,32,360 | 1,13,16,282 | 6,84,721 | 1,28,38,681 | +52,361 | +15,22,399 |
| பருத்திக்கொட்டை. | 2,46,518 | 8,61,535 | 2,41,558 | 9,30,112 | —4,960 | +68,577 |
| வேர்க்கடலை ... | 2,8,35,304 | 2,32,48,960 | 36,03,456 | 2,92,34,026 | +7,68,152 | +59,85,066 |
| எள் ... | 72,063 | 6,73,283 | 30,477 | 3,03,743 | —41,586 | —3,69,540 |
| மற்றவைகள் ... | 1,24,992 | 9,9,4,007 | 65,043 | 5,24,125 | —59,949 | —4,69,882 |
| மொத்தம்.... | 43,80,285 | 4,06,50,070 | 50,66,400 | 4,69,29,899 | +6,86,115 | +62,79,829 |

ஆவியாகக் கூடிய எண்ணெய் வித்துக்கள்.

இந்த அம்சத்தில்1911-12-ம் வருஷத்தில் 39,649 அந்தர் ஏற்றுமதியாயிருக்க,1912-13ம் வருஷத்தில் 45,132 அந்தர் ஏற்றுமதியாயிருக்கிறது. அதாவது இந்த அம்சத்தில், ஏற்றுமதி செய்யப்பட்ட வித்துகளின் நிறை 5,483 அந்தர் அதிகமாயிருக்கிறது. ஆனால் 1911-1912-ம் வருஷத்தில் ஏற்றுமதியின் மதிப்பு 4,32,285 ரூபாயா யிருக்க,1912-13-ம் வருஷத்தில் 2,75,979 ரூபாயாகக் குறைந்து போய் விட்டது. அதாவது1,56,306 ரூபாய் குறைந்து போய்விட்டது. சென்றவருஷம் கொத்துமல்லி விதை அதிகமாக விலோனுக்கு அனுப்பப்பட்டதால் ஏற்றுமதியின் நிறை அதிகமாயிருக்கிறது. ஆனாலும் அதன் விலை அந்தர் ரூ 10-5-0-விலிருந்து ரூ 5-15-0-வுக்கு இறங்கி விட்டபடியால் மொத்த ஏற்றுமதி மதிப்பில் ரொம்பவும் குறைந்து போய் விட்டது.

ஆமணக்கு.

1911-1912-ம் வருஷத்தில் ஏற்றுமதியான ஆமணக்கு வித்தின் நிறை 4,29,399 அந்தர். 1912-1913-ம் வருஷத்தில் ஏற்றுமதியானது 3,96,013 அந்தர்தான். ஆகவே சென்ற வருஷத்தில் 33,386 அந்தர் குறைந்திருக்கிறது. இதனால் ஏற்றுமதியின் மதிப்பும் குறைந்து போயிருக்கிறது.1911-12-ம் வருஷத்தில் 31,23,718 ரூபாய்க்கு ஆமணக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்க, 1912-13-ம் வருஷத்தில் 28,23,233 ரூபாய்க்குத்தான் ஏற்றுமதி செய்யப்பட்டது. அதாவது ஏற்றுமதியின் மதிப்பில் 3,00,485 ரூபாய் குறைந்து போயிருக்கிறது.

ஸரியான காலத்தில் மழையில்லாததனாலும், வேர்க்கடலை ஸாகுபடி அதிகமாகிவிட்டபடியாலும் ஆமணக்கின் ஸாகுபடி குறைந்து போய் அதனால் ஏற்றுமதி குறைந்து போய் விட்டதென்று தெரியவருகிறது. ஆமணக்கை

இங்க்லண்டில்தான் அதிகமாய் வாங்குகிறார்கள். சென்ற வருஷம் 13½ லக்ஷம் ரூபாய்க்கு ஆமணக்கு வாங்கினார்கள். ப்ரான்ஸ் தேசத்தார் 6½ லக்ஷம் ரூபாய்க்கும், இட்டலி தேசத்தார் 2½ லக்ஷம் ரூபாய்க்கும் வாங்கிக் கொண்டார்கள்.

கோப்பரை.

1911-1912-ம் வருஷத்தில் 6,32,360 அந்தர் கொப்பரை ஏற்றுமதி செய்யப்பட்டது. இதன் மதிப்பு 1,13,16,282 ரூபாயாகும். 1912-13ம் வருஷத்தில் 6,84,721 அந்தர் கொப்பரை ஏற்றுமதி செய்யப்பட்டது. இதன் மதிப்பு 1,28,38,681 ரூபாயாகும். ஆகவே சென்ற வருஷம் இதன் ஏற்றுமதி நிறையில் 52, 361 அந்தரும் மதிப்பில் 1 ,22,399 ரூபாயும் அதிகமாகியிருக்கிறது. அதாவது 1911-12-ம் வருஷத்தைவிட 1912-13-ம் வருஷத்தில் கொப்பரையின் ஏற்றுமதி நிறையில் 100-க்கு 8-வீதமும் மதிப்பில் 100-க்கு 13-வீதமும் அதிகரித்திருக்கிறது. மேல் நாடுகளில் ஸோப்பு செய்வதற்கும், இதிலிருந்து ஒரு வித வெண்ணெய் செய்வதற்கும் கொப்பரை ரொம்பவேண்டியிருந்ததால் இப்படி அதிகமாக வாங்கிக் கொண்டார்களாம். சென்ற வருஷத்தில் (1912-13) கொப்பரை மாஸூல் கொஞ்சம் குறைவென்று சொல்லப்படுகிறது. இதை மேல்நாட்டார் அதிகமாக வாங்கிப்போகத் தலைப்படவே விலை ரூ. 17-14-0 விலிருந்து ரூ. 18-12-0 ஆக ஏறினதோடு நமது ராஜதானியிலுள்ள எண்ணெய் மில்லுகளுக்கு வேண்டிய கொப்பரையைக்கூட மேல் நாடுகளுக்கு அனுப்பிவிடும்படியாயிற்று. கொப்பரை வெகுவாய் கொச்சி, கள்ளிக்கோட்டை, பாடகாரா ஆகிய இந்தத் துறைமுகங்களில் தான் ஏற்றுமதி செய்யப்படுகிறது. கொச்சியில் 1912-13-ம் வருஷத்தில் 72.16.லக்ஷம்ரூபாய்க்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. இந்தத் தொகை மொத்தம் கொப்பரை ஏற்றுமதியில் 100-ல் 56-பாகமாகும்.

மொத்தம் ஏற்றுமதியில் நூற்றில் 86-பாகம் ஜெர்மனி தேசத்தார் வாங்கிக்கொண்டார்கள்; அதாவது ரூ. 103.07 லக்ஷம் மதிப்புள்ள 5,48,331 அந்தர் கொப்பரையை அந்த தேசத்தார் வாங்கிக்கொண்டு போயிருக்கிறார்கள்.

வேர்க்கடலை.

மொத்தம் ஏற்றுமதியான எண்ணெய் வித்துக்களில் 100-க்கு 71-பாகம் வேர்க்கடலையாகும். 1911-12-ம் வருஷத்தில் 28,35,304 அந்தர் வேர்க்கடலை ஏற்றுமதி செய்யப்பட்டது. இதன் மதிப்பு 2,32,48,960 ரூபாய். சென்ற வருஷத்தில் 36,03,456 அந்தர் வேர்க்கடலை ஏற்றுமதி செய்யப்பட்டது. இதன் மதிப்பு 2,92.34,026 ரூபாயாகும். ஆகவே சென்ற வருஷத்தில் 7,68,152 அந்தர் கடலை அதிகமாக ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. ஏற்றுமதி மதிப்பிலும் 59,85,066 ரூபாய் அதிகமாகியிருக்கிறது. அதாவது முந்தின வருஷத்தின் ஏற்றுமதியைவிட 1912-13-ம் வருஷத்திய ஏற்றுமதி நிறையில் 100-க்கு 27-பங்கும் மதிப்பில் 100-க்கு 26-பங்குமாக அதிகமாகியிருக்கிறது. இதற்குக் காரணமென்னவென்றால் விவஸாயிகள் வேர்க்கடலையைப் பயிர் செய்து வெளியூர்களுக்கு விற்றால் நல்லலாபம் கிடைக்கிற தென்பதையறிந்து தங்கள் நிலங்களில் வேர்க்கடலைஸாகுபடி அதிகம் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள், தக்ஷணஜில்லாக்களில், முக்யமாய் கடப்பை, கர்நூல் ஆகிய இந்த ஜில்லாக்களிலும், செங்கல்பட்டு, வடஆற்காடு ஆகிய இந்த ஜில்லாக்களிலும்வேர்க்கடலை ஸாகுபடி அதிகரித்திருக்கிறது. சென்னையின் மத்ய ஜில்லாக்களிலும், தென்ஜில்லாக்களிலும் தென் மேற்கு மழையானது காலத்தில் பெய்யாததால் வேர்க்கடலை

ஸாகுபடி குறைந்துவிட்டதென்று சொல்லப்படுகிறது.

கீழ்க்கண்ட அட்டவணையினல் இன்னின்னவிடத்தில் இவ்வளவு ரூபாய்க்கு வேர்க்கடலை ஏற்றுமதியாயிருக்கிறதென்று தெரியவரும்.

| | லக்ஷம் ரூபாய். |
|---|---|
| கூடலூர் | 130·47 |
| நாகப்பட்டணம் | 53·25 |
| மதராஸ் | 53·12 |
| ரங்கிப்பேட்டை | 45.62 |

ஏற்றுமதியான வேர்க்கடலையில் 100-க்கு 90-பங்கு ப்ரான்ஸ் தேசத்துக்கு அனுப்பப்பட்டது. அங்கே வேர்க்கடலையிலிருந்து சாப்பிடக்கூடிய ஒருவித நெய் தயார் செய்கிறபடியால் அதற்காக வேர்க்கடலையை ரொம்பவும் வாங்குகிறார்கள். முந்தின வருஷத்தில் 202·87 லக்ஷம் ரூபாய்க்குத் தருவித்திருக்க, 1912-13-ம் வருஷத்தில் 262·24 லக்ஷம் ரூபாய்க்குத் தருவித்துக் கொண்டார்கள்.

மேலே சொன்ன துறைமுகங்கள் மூலமாயும் மற்ற விடங்கள் மூலமாயும் ஏற்றுமதியானதைத் தவிர, புதுச்சேரித் துறை முகத்தின் வழியாக 22,10,094 அந்தர் வேர்க்கடலை ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது.

எள்.

இதன் ஏற்றுமதி சென்றவருஷம் குறைந்து போயிருக்கிறது. 1911-12-ம் வருஷத்தில் 72,063 அந்தர் (மதிப்பு, 6,73,283 ரூ) எள் ஏற்றுமதியாயிருக்க, 1912-13-ம் வருஷத்தில் 30,477 அந்தர் (மதிப்பு 3,03,743 ரூபாய்) எள்தான் ஏற்றுமதியாயிருக்கிறது. அதாவது நிறையில் 14, 586 அந்தரும், மதிப்பில் 3,69,540 ரூபாயும் குறைந்து போயிற்று

இப்படி எள்ளின் ஏற்றுமதியும் மதிப்பிலும் நிறையிலும்குறைந்திருப்பதற்கு முக்யகாரணம் விவஸாயிகள் இதை ஸாகுபடி செய்வதைவிட்டு வேர்க்கடலையை அதிகமாக ஸாகுபடி செய்யத் தொடங்கினதேயாகும்.

---

## WAKE UP, LANDHOLDERS!

BY

THE EDITOR.

நிலஸ்வான்களே, விழித்துக்கொள்ளுங்கள் !

சென்ற ஜூன்மாஸத்து ஸஞ்சிகையில் சாச்வத நிலஸெட்டில் மெண்ட் விஷயமாய் எழுதியிருந்த முதல் வ்யாஸத்தை நமதுநேயர்கள் படித்திருப்பார்கள். அதன் தொடர்ச்சியாய் இன்னம் சில வ்யாஸங்கள் எழுதி மறு ஸெட்டில் மெண்டுகள் செய்வதால் நிலஸ்வான்கள் ரொம்பவும் ஏழைகளாகிறார்கள் என்று காண்பித்து நிலவரியைக் குறைக்கா விட்டாலும், உள்ள வரியை சாச்வதமாகச்செய்தாலொழிய விவஸாயிகளின் பொருளாதார நிலைமை ஒருபோதும் கடைத்தேறாதென்று ரூபிப்பதாக உத்தேசித்திருந்தோம். இந்த வ்யாஸங்களை முடிப்பதற்கு முன்னே நிலத்தின்மேல் போடும் வரிகளை இன்னம் உயர்த்தவேண்டு மென்று ஒரு ப்ரேரணை வருமென நாம் ஒருபோதும் எதிர்பார்க்க வில்லை.

சென்ற மேமாஸத்தில் கோயம்புத்தூர் கலெக்டர் மிஸ்டர் ஹெமிங்வே அந்த ஜில்லா க்ராமங்களில் போக்கு வரத்துக்கு ரஸ்தாக்களும் இட்டேரிகளும் ஸரியாயில்லை யென்றும், அதற்காக இப்போது ரூபாய்க்கு ஒரு அணுவாக இருக்கும் ரோட்ஸெஸ்ஸை இரண்டணுவாக உயர்த்தி அப்படி அதிகமாக வஸூலாகும் பணத்தை ரஸ்தாக்களின் அபிவ்ருத்திக்காக வென்று ப்ரத்யேகமாய் எடுத்து வைத்துக்கொண்டு செலவு செய்ய வேண்டுமென்றும் செய்த யோசனை நமக்குத் தெரியாமலில்லை. நிலவரியானது ஏற்கனவே குடிகளால் தாங்கமுடியாதபடி இருக்கிறதென்பது ஜகத் ப்ரஸித்தமானதும், எல்லாராலும்

ஒப்புக்கொள்ளப்பட்டதுமான விஷயமாத லால், மிஸ்டர் ஹெமிங்வே செய்த ப்ரேரணை யானது கேட்பாரின்றி, தானகவே நசித்துப் போகுமென்று எண்ணியிருந்தோம். ஆனல் மேற்சொன்ன ப்ரேரணையை கோயம்புத் தூர் டிஸ்ட்ரிக்ட் போர்டார் அங்கீகரித்து, கவர்ன்மெண்டார் ஸாங்க்ஷன் செய்ததோடு, மற்ற ஜில்லா டிஸ்ட்ரிக்ட் போர்டுகளை யும், கோயம்புத்தூரில் செய்தது போ லவே க்ராமரஸ்தாக்கள் போடவும் செப்ப னிடவும் ரோட்ஸெஸ்ஸை இரண்டணு வரை யில் உயர்த்த சட்டத்தை மாற்றி ஏற்பாடு செய்யக்கூடாதா என்று கவர்ன்மெண்டார் கேட்டுவிட்டிருகிருர்கள். அந்தப்படியே செய் யலாமென்று தஞ்சாவூர் டிஸ்ட்ரிக்ட் போர் டார் ஒப்புக்கொண்டு விட்டார்கள். அனந்தப் பூர் டிஸ்ட்ரிக்ட் போர்டார் கூடவே கூடா தென்று ஓரேமனதாய்ச் சொல்லிவிட்டார் கள். இன்னும் மற்ற டிஸ்ட்ரிக்ட் போர்டுகள் எவ்வித அபிப்ராயங் கொடுக்குமோ தெரிய வில்லை.

நிற்க, இந்த ஸமாசாரம் எட்டிய க்ராமங்க ளில் நிலஸ்வான்கள் அங்கங்கே மிட்டிங்குகள் கூடி மேற்சொன்னபடி ரோட் ஸெஸ்ஸை உயர்த்தக் கூடாதென்று முறையிட்டு வரு வதை நமக்கு எட்டியமட்டில் மாஸவர்த்த மானம் என்னும் பகுதியில் குறிப்பிட்டிருக் கிருேம். வெளியூர்களில் தங்களைப்பற்றியோ பிறரைப்பற்றியோ என்ன நடக்கிறதென் பதைத்தெரிந்து கொள்ளாமலும், ஸமாசாரப் பத்ரிகைகள் ஒன்றையும் வரவழைத்துப் பார்க்காமலும், அஞ்ஞானிகளாயிருக்கும் எத் தனையோ பேர்களுக்கு அவர்கள் நிலத்துக்கு இன்னம் அதிகவரி போடப்போகிருர்கள் என்ற ஸமாசாரமே தெரியாமலிருக்கும் என் பதில் ஸந்தேகமேயில்லை. இது தெரிந்துவிட் டால் ராஜதானியிலுள்ள எல்லா க்ராமங்களி லும் ஒரே கூச்சல் ஏற்படும் என்பதிலும் ஸந் தேகமில்லை.

அநேக க்ராமங்களுக்கு, அதிலும் நீராரம்ப க்ராமங்களுக்கு, ரஸ்தா என்பதே யில்லாமல் நஞ்சைவயல்களில் இறங்கியும், ஒற்றையடி வரப்பில் நடந்தும், கோடைகாலங்களில் வண்டிப் போக்கு வரத்துக்கு சுவடு வெட்டியும் ஜலநாட்களில் வண்டிப் போ க்கு வரத்தேயில்லாமலும் கஷ்டப்படுகிருர் கள். ஸுமார் 40-வருஷகாலமாய் ரஸ்தாக் கள் போடுவதற்கென்றே ஷெ ஸெஸ் ஏற்பட் டும், இன்னம் அநேக க்ராமங்களுக்கு ரஸ்தா என்பதே ஏற்படாமல் இருக்கிறது. ரோட் ஸெஸ்ஸால் வரும் வரும்படியெல்லாம் ட்ரங்க் ரோடுகள் அதாவது ராஜபாட்டைகள் போ ட்டு செப்பனிடுவதிலும், ஆஸ்பத்ரி பள்ளிக் கூடங்கள் இவைகள் வைத்து நடத்துவதிலும் செலவாய்ப் போவதால் க்ராமங்களுக்குப் புது ரோட்டுகள் போடுவதற்குப் பணம் கிடைக் காமல் போகிறது. இப்படிப்பட்ட குறையை நிவர்த்திக்க மாகாண கவர்ன்மெண்டார் டிஸ்ட் ரிக்ட் போர்டுகளுக்கு க்ராம ரஸ்தாக்கள் போடுவதற்காக ரொம்பப் பண உதவி செய்ய வேண்டு மென்று சென்ற ஏப்ரல் மாஸத்தில் நடந்த சென்னை லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில் மீட்டிங்கில் கனம் சிதம்பரநாத முதலியார், ஒரு தீர்மானங் கொண்டுவந்தார். அதன் விஷய மாய் நடந்த விவாதத்தில் கவர்ன்மெண்டார் அந்தத் தீர்மானத்தை அங்கீகரிக்காமல் வேண் டுமானல் ரோடு வரியை அந்தந்த ஜில்லாக்க ளில் கொஞ்சம் உயர்த்திக் கொள்ளலாமென்று சொல்லிவிட்டார்கள். இதைக்கொண்டுதான் மிஸ்டர் ஹெமிங்வே தமது ப்ரேரணையைச் செய்தார் போலும்.

ஆனல் டிஸெண்ட்ரலை ஸேஷன் கமிஷனே ரோடு ஸெஸ்ஸை இனி உயர்த்தக்கூடா தென்று தெரிவித்திருக்கிறது. சென்னை பொ

ழிந்த மற்ற மாகாணங்களில் ரோடு ஸெஸ் ஒரு அணுவுக்கு மேலில்லை. சென்னை மகாணத்தில் மாத்ரம் ரோடு ஸெஸ்ஸை உயர்த்த மற்ற மாகாணத்தில் இல்லாத என்ன ப்ரத்யேகமான அவச்யம் ஏற்பட்டதோ தெரியவில்லை.

க்ராமாந்தரங்களில் உள்ள விவஸாயிகள் ரஸ்தாக்களும் வழிநடப்புகளும் இல்லாமல் அவர்களுடைய மாஸூலைக் குறைந்த விலைக்கு விற்கிறார்கள் என்றும் இன்னும் பலவிதங்களில் கஷ்டங்களும் நஷ்டங்களும் அடைகிறார்கள் என்றும், ஒப்புக்கொள்ள வேண்டியதுதான். ஆனால் அந்தக் குறைகளை நிவர்த்திப்பதற்காக அவர்களே அதிகவரிகொடுக்க வேண்டுமென்பது கொஞ்சமேனும் ந்யாயமாய்ப் படவேயில்லை. சென்னை ராஜதானியிலுள்ள ஜனங்களில் நிலஸ்வான்கள் ரொம்ப ஏழைகளாயிருந்தாலும் அவர்களே ரொம்ப மிதமிஞ்சி வரி செலுத்தி வருகிறார்கள். ராஜ்யம் நடந்து வருவதற்கு ஸகல ஜனங்களும் வரிகொடுக்க வேண்டியது ந்யாயமேதவிர, ஒரு இனத்தாரிடத்திலிருந்தே பெரும் பாகம் வரியை வஸூல் செய்வது ந்யாயமாகாது. நிலஸ்வான் தன் வரும்படியில் பாதியை ஸர்க்கார் கிஸ்தியாகக் கட்டவேண்டியிருக்கிறது. இன்னம் கிஸ்தியில் ரூபாய்க்கு ஓரணா வீதம் ரோட் ஸெஸ்ஸாக கட்டியும் வரவேண்டியிருக்கிறது. இவைகள் விவஸாயி ஸர்க்காருக்கு நேரில் கொடுக்கும் வரிகளாகும்.

வரி கொடுக்கிறோம் என்று தெரியாமல் விவஸாயிகள் இதர ஜனங்களோடுகூட சேர்ந்து செலுத்தும் வரிகளும் அநேகம் இருக்கின்றன. இதரதேசங்களுக்கு ஏற்றுமதியாகும் நெல் அரிசி இவைகளின் மேல் விதிக்கப்படும் வரியிலும், காடுகள், ஸ்டாம்பு, கஸ்டம்ஸ் அதாவது துறை முகவரிகள், உப்பு, அப்காரி முதலிய பலவிதவரிகளிலும் பெரும்பாகம் தன்னறியாமலே விவஸாயி செலுத்திவருகிறான். இப்படி பலவழிகளில் விவஸாயிகளின் மேல் விழும் வரிபளுவையும் இதர ஜனங்கள் செலுத்தும் வரிகளையும் ஒத்துப்பார்த்தால் மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்யாஸம் போல் தோன்றும். இப்படி விவஸாயிகள் செலுத்தும் வரியை வேறு விதங்களில் உபயோகப்படுத்திவிட்டு அவர்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளாகிய ரஸ்தாக்கள் போடுதல், எலிமெண்டரி ஸ்கூல்கள் ஸ்தாபித்துப் படிப்புச் சொல்லிக் கொடுத்தல் ஆகிய இவைகளைச் செய்ய வேண்டுமென்றால் பணம் இல்லை யென்று சொல்லி ஒவ்வொன்றுக்கும் ப்ரத்யேகமான வரிகள் கொடுக்கவேண்டுமென்று ப்ரேரணை செய்வதை என்னென்று சொல்வது! விவஸாயிகள் செலுத்தும் ரோட்ஸெஸ்ஸை அவர்களுக்கு உபயோகப்படக் கூடிய பாதைகள் போடுவதிலும் செப்பனிடுவதிலும் உபயோகிக்காமல், பட்டணங்களிலுள்ள கோச்சுகள், ஸைகிள், மோடார் வண்டிகள் முதலியவைகளின் உபயோகத்துக்காக கப்பிரோடுகள் போடுவதிலும் யாவருக்கும் உபயோகப்படும்படியான ஆஸ்பத்ரிகள், ஸ்கூல்கள் இவைகளை வைத்து நடத்துவதற்காகவும் செலவழித்துவிட்டு க்ராம ரஸ்தாக்கள் போடப் பணம் இல்லை; ஸெஸ்ஸை உயர்த்தவேண்டும், என்று ப்ரேரிப்பதை என்னென்று சொல்வது! விவஸாயிகளுக்கு ஸௌகர்யங்கள் செய்து கொடுப்பதற்குப் பணம் போதாதென்றால் இவர்கள் பணத்தை யெடுத்துச் செலவழித்து ஸுகப்படுகிறபட்டணவாஸிகளிடத்திலிருந்து அவரவர்களுக்கு வேண்டிய ஸௌகர்யங்களை யமைக்க வரி வாங்கவேண்டும். வேறு ப்ரத்யேக வரிசெலுத்தாத உத்யோகஸ்தர்கள், வ்யாபாரிகள் முதலியவர்களிடத்திலிருந்து இப்போது ரூபாய்க்கு 4-அல்லது 5-தம்பிடியாக வாங்கப்படும் இன்கம்டாக்ஸை உயர்த்தி பட்டணவாஸிகளுக்குவேண்டிய ஸௌகர்யங்

களைச் செய்துகொடுத்து, விவஸாயிகளுக்கு செய்யவேண்டிய கடமைகளுக்கு வேண்டிய பணத்தை மிகுக்கவேண்டும்.

விவஸாயிகள் அல்லாத வேறு இனத்தாரிடத்தில் வரிவஸூல் செய்வதென்றால் பெரிய அமளியாகும் என்று நாம் ஒப்புக்கொள்ள வித்தமாயிருக்கிறோம். அதனாலேதான் எதற்குப் பணம் வேண்டுமென்றாலும் நிலத்தின் தலையில் கையை வைக்கிறார்கள். விவஸாயிகளில், படிப்பும், ஒற்றுமையும், பொதுக்காரியங்களில் ஊக்கமும் இல்லாமை, தங்களைப் பற்றிய விஷயங்களில்கூட ஒன்றையும் அறிந்துகொள்ளாமை, ஆகிய குறைகளாலேயே அவர்களுக்கு ராஜாங்க விஷயங்களிலும், வரிவிதிக்கும் விஷயங்களிலும் செல்வாக்கென்பதேயில்லாமல் கஷ்ட தசையிலிருந்து வருகிறார்கள். பணம் வேண்டுமென்றால் ஏன் நிலத்தையே பிடிக்கிறார்கள் என்ற ஸூக்ஷ்மத்தை ஸுமார் 40 வருஷத்துக்கு முன்னால் ஒரு பெரிய உத்யோகஸ்தர் கண்டுபிடித்துச் சொல்லி யிருக்கிறார். அயோத்தி மாகாணத்துக்கு சீப் கமிஷனராயிருந்த ஸர் வி. ஜே. விஸ்பீல்ட் என்பவர் சொல்லி யிருக்கிறார்:—"ஏன் கவர்ன்மெண்டார் வேறு இனத்தார்களை விட நில ஸ்வான்களிடத்திலிருந்து பணத்தைப் பறிக்கிறார்கள் என்றால் அப்படிப்பறிப்பது தான் அவர்களுக்கு ரொம்ப ஸுலபமாயிருக்கிறது. தவிர, நில விஷயமாக ரெவின்யூ அதிகாரிகளுடைய தாக்ஷண்யம் ரொம்ப வேண்டியிருப்பதால் அவர்கள் என்ன செய்தாலும் விவஸாயிகள் பொறுத்துக்கொள்ளவே வேண்டியிருக்கிறது." என்று சொல்லி யிருக்கிறார்.

க்ராமாந்தரங்களில் உள்ள நிலஸ்வான்கள் வேறு விஷயங்கள் எக்கேடு கெட்டாலென்னவென்று கவனிக்காமலிருந்தாலும், தங்களைப் பற்றிய மட்டிலாவது வெளியில் என்ன நடக்கிறதென்று பத்ரிகைகள் மூலமாவது, வேறு எவ்விதமாவது அறிந்துகொள்ளாமலிருப்பதால் பெருத்த ஆபத்துகள் உண்டாகின்றன. உதாரணமாக, ஸர் ஆர்தர் ஹாவ்லக் கவர்னராக இருந்தபோது, 'கெய்ன்ஸ் ஆப் லெர்னிங்' பில் என்று சொல்லப்பட்ட, படித்து ஸம்பாதிக்கும் ஸொத்துக்கள் யாருக்கு ஸொந்தம் என்பதைப்பற்றி காலஞ்சென்ற களம் ஸர் வி. பாஷ்யமய்யங்கார் கொண்டுவந்த மசோதா சட்ட ஸபையில் பாஸ் செய்யப்பட்டுப் போய்விட்டது. அந்த மசோதாவால் மிராசுதார்கள் வ்யாபாரிகள் முதலிய குடும்ப பாகஸ்தர்களுக்கு விளையக்கூடிய கெடுதல்களை யறிந்த சிலர் மீட்டிங்கூடி ஆக்ஷேபித்துக் கூக்குரலிட்டார்கள். அதன்மேல் கவர்னர் அந்தச் சட்டத்தை அங்கீகரிக்காமல் தள்ளிவிட்டார். அப்போது க்ராமவாஸிகள் அந்தச் சட்டத்தைப்பற்றி யாதொன்றும் அறியாமல் இருந்தார்கள். நல்ல வேளையாய் அது சட்டமாகாமல் நின்றுபோய் விட்டது. அப்போது அச்ரத்தையாயிருந்ததுபோல் இப்போதும் நில ஸெஸ் விஷயத்தில் கவனமில்லாமலும், அச்ரத்தையாயும் இராமல் இது விஷயம் ரொம்ப கவனம் செலுத்தினால் க்ராமத்தார்களுடைய உண்மையாண எண்ணம்என்னவென்பதை கவர்ன்மெண்டார் அறிந்து கொள்வதோடு எல்லா ஜனங்களுடையவும் அபிப்ராயத்துக்கு விரோதமாக வரியை உயர்த்த மாட்டார்கள். ஆகையால் க்ராமவாஸிகள் தங்களுடைய தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்டு மீட்டிங்குகள் கூடி தங்களுடைய அபிப்ராயத்தைத் தெரிவித்து கவர்மெண்டுக்கு மகஜர்கள் அனுப்ப வேண்டும். இந்த நாளில் வாயுள்ள பிள்ளைதான் பிழைக்கும்.

பத்ராதிபர்.

# STORY AND BIOGRAPHY.

## கதையும் ஜீவ்ய சரித்ரமும்.

### KRISTO DAS PAL

BY
Mr M. V. ISHWARA AIYER.

### க்ருஷ்ண தாஸ் பால்.

"ஒருவன் தன் ஜன்மதேச கைங்கர்யத்துக்கு தனக்குள்ளதையெல்லாம் த்ரிகரண சுத்தியாய் ஸமர்ப்பணம் செய்வானாகில், அவன் ஸகல ஐச்வர்யத்தைக் கொடுத்தபோதிலும் வாங்கமுடியாத அவ்வளவு விலையுயர்ந்ததும், என்றும் அழியாததுமான தேசத்தாரின் அன்புக்குப் பாத்ரனாகிறான்.—ஸிஸரோ

தேச ஸேவகர்கள் இறந்து போவார்கள். அவர்களுடைய சவம் எரிக்கப்பட்டோ அடக்கம் செய்யப்பட்டோ போகும். ஆனால் அவர்களுடைய ஞாபகம் என்றும் ஜனங்களால் மதிக்கப்பட்டுப் போற்றப்படும். நம்தேசத்தில் சில காலமாக பெரியவர்களுடைய இறந்ததினத்தைக் கொண்டாடி அவர்கள் வாழ்க்கையைப்பற்றி ஜனங்களுக்கு ப்ரஸங்கம் செய்வது வழக்கமாகிவருகிறது. சில மாஸங்களுக்கு முன் தஞ்சாவூர் ஜில்லாவில் ஜட்ஜ் முத்துஸ்வாமி ஐயர், திவான் சேஷையா சாஸ்த்ரி ஆகிய இவர்களின் இறந்த நாள் கொண்டாட்டங்கள் நடைபெற்றன. இந்தக் கொண்டாட்டங்கள் வ்ருதாகார்யங்களல்ல. இந்த ஸமயங்களில் அவர்களுடைய வாழ்க்கையின் ச்ரேஷ்டமான லக்ஷ்யங்களும் லக்ஷணங்களும் எடுத்துக் காட்டப்பட்டு நம்முடைய மனஸில் ஆழ்ந்து பதிகின்றன. ஒரு பெரியவர் இறந்து போனால் அவருடைய ஸ்தூல சரீரம் மட்டும் அழிந்து போகிறது. அவர், ஸூக்ஷ்ம சரீரத்தில் ஸதாகாலமும் நம்முடைய நன்மையையும் க்ஷேமத்தையும் கோரிக் கொண்டேயிருக்கிறார். நம்முடைய வாழ்க்கை ஸரியான உத்தமமான மார்க்கத்தில் செல்லுவதற்கு பெரியோர்கள் தேர்ந்த வழிகாட்டிகளாக இருக்கிறார்கள். இவர்கள் நம்மிடம் கொண்டிருக்கும் ச்ரத்தைக்கு நாம் அவர்களுக்கு செய்ய வேண்டிய ப்ரதிபலன் அவர்களைப்போல நாமும் ஸன்மார்க்கத்தில் ஸத்க்ருத்யங்களுக்காக உழைப்பது தான். ஸமீபகாலத்தில் கல்கத்தாவில் பாபு க்ருஷ்ணதாஸ்பால் என்ற ஒரு பெரியவரின் வருஷாப்தீகக் கொண்டாட்டம் வெகு சிறப்பாய்க் கொண்டாடப்பட்டது. அவருடைய ஜீவ்ய சரித்ரத்தைபற்றிய பலருக்கும் விருப்ப மிருக்குமாதலால் அதைக் கீழே சுருக்கி எழுதுகிறோம்.

க்ருஷ்ணதாஸ்பால் 1838- ஆம் வருஷத்தில் பிறந்தார். இவருடைய பெற்றோர்கள் ஏழைகள். இவர் சில வருஷங்களுக்கு கல்கத்தாவிலுள்ள ஓரியன்டல்ஸெமினரி என்ற பள்ளிக்கூடத்தில் பங்காளி பாஷையைப் படித்தார். இவருடைய புத்தி சாதுர்யத்திற்கும் படிப்பிலுள்ள திறமைக்கும் ஸன்மானமாக ஒரு வெள்ளிப்பதக்கம் இவருக்குக் கிடைத்தது. 1848-ஆம் வருஷத்தில் அதே பள்ளிக்கூடத்தில் இங்க்லீஷ் கற்றுக் கொடுக்கும் பிரிவில் சேர்ந்து வாசித்தார். இங்கே 5 வருஷகாலம் ஊக்கத்துடனும் விடா முயற்சியுடனும் படித்து வந்தார். இதற்குப் பிறகு இங்க்லீஷில் நல்ல பாண்டித்யம் அடைய வேண்டுமென்ற ஆசையால் சில காலம் ஒரு கிறிஸ்தவப் பாதிரியிடத்திலும் சில காலம் 'ப்ரெண்ட் ஆப் இன்டியா' என்னும் பத்ரிகையின் (இது இப்போது 'ஸ்டேட்ஸ்மன்' என்று வழங்குகிறது;) அதிபரிடத்திலும் பாடம் கேட்டு வந்தார். இந்த ஸந்தர்ப்பத்தில் அவருக்கு படிப்பிலிருந்த ச்ரத்தையை விளக்க ஒரு விஷயத்தைக் குறிக்கிறோம். இவர் ப்ரதிதினமும் அதிகாலையில் எழுந்து தம் தோழர்கள் வீட்டுக்குப்போய் அவர்களையெல்லாம் எழுப்பிக் கூட்டிக்கொண்டு பாடம் கேட்கப் போவாராம். இப்படி தினமும் போவது சிலருக்கு ரொம்ப கஷ்டமாயிருந்ததால் அவர்கள் கொஞ்ச காலத்துக்கெல்லாம் போகாமல் நின்று விட்டார்கள், இவர் மட்டும் இரண்டு வருஷகாலம்தவறாமல் போய்ப் பாடங் கேட்டுவந்தார். பிறகு ஹிந்து மெட்ராபாலிடன் காலேஜில் சேர்ந்து வாசித்தார். 1857-ம் வருஷத்தில், அதாவது இவருக்கு 19 வயதில் உத்யோகம் செய்வதென்று தீர்மானித்து காலேஜ் படிப்பை நிறுத்தினார்.

பால் காலேஜை விட்டதும் ஜில்லா கோர்ட் த்விபாஷி உத்யோகத்திலமர்ந்தார். சில தினங்

களுக்குள்ளாக ஜட்ஜ் இவரை அந்த வேலைக்கு லாயக்கில்லை யென்று தள்ளிவிட்டார். இது புளித்துப் போசவும் பிறகு பால் ஸர்க்கார் உத்யோகத்தைப்பற்றிய எண்ணத்தை முழுவதும் மறந்து விட்டார். பிற்காலத்தில் ஸர் வில்லியம் க்ரே இவரை ஒரு ஸர்க்கார் உத்யோகம் ஒத்துக்கொள்ளச் சொல்ல அதை வேண்டாமென்று சொல்லி விட்டார். இவருக்கு லாயக்கான உத்யோகம் பத்ராதிபத்யமே.

இவர் காலேஜில் வாசிக்கும்பொழுது பொது விஷயங்களில் அக்கறையுள்ள வராயிருந்தார். இவர் தம் ஸ்நேகிதர்கள் சிலரைச் சேர்த்து ஒரு கல்வி ஸங்கம் ஸ்தாபித்தார். இதில் அடிக்கடி பொது விஷயங்களைக் குறித்து ப்ரஸங்கங்கள் செய்வதற்கு ஏற்பாடு செய்து வந்தார். இவர் எடுத்து வந்த முயற்சியால் இந்த ஸங்கம் வேறே ஸங்கங்களைக் காட்டிலும் நல்ல ப்ரக்யாதியும் சிறப்பும் அடைந்தது.

க்ருஷ்ணதாஸர் நல்ல தைர்யசாலி. தமக்கு ஸரியெனத் தோற்றுவதை வெளிப்படையாய்ச் சொல்வார். 1857 வருஷம் சிப்பாய்க் கலகம் அடங்கினபின்பு கவர்ன்மெண்டாருக்கு ஜனங்கள் தங்கள் நன்றியறிவைச் செலுத்துவது கடமையாகுமென்று நினைத்து அதற்காக ஒரு மீட்டிங்கைக் கூட்டிவைத்தார்.

அவர் உலகஞானமுள்ளவர். நல்ல ஹ்ருதயமுள்ளவர். விஷயங்களை அறிந்துகொள்ள அவருக்கு ஆவலதிகம். பத்ரிகைகளைப் படிப்பதில் அவருக்கு ரொம்ப ஸந்தோஷம். இவருடைய ஸ்நேகிதரொருவர் "ஹிந்து பேட்ரியட்" என்ற பத்ரிகைக்கு ஒரு விஷயம் எழுதியனுப்பினார். அது ப்ரசுரமானதை இவா பார்த்ததும் தாமும் அப்படிப் பத்ரிகைகளுக்கு எழுத வேண்டுமென்று இவருக்கு ஆசையுண்டாயிற்று. பத்ரிகை நிருபர்களுக்கு அந்தபத்ரிகை இலவசமாய்க் கிடைக்கிறதென்றும், ப்ரசுரமாகும் விஷயங்களுக்கு ஸம்பாவனை யுண்டென்றும் இவர் கேள்விப்பட்டார். உடனே சில விஷயங்களெழுதி 'மார்னிங் க்ரானிகள்', 'ஸிடிஸன்' ஆகிய இரண்டு பத்ரிகைகளுக்கு அனுப்பினார். அவைகளின் பத்ராதிபர்கள் இவருக்கு உத்ஸாகமுண்டாக வந்தனம் செலுத்தி பதில் கடிதம் எழுதி பத்ரிகைகளை இலவசமாய் அனுப்பி ஸம்பாவனையும் கொடுப்பதாக தெரிவித்தார்கள். இவருக்கு உத்ஸாகமும் தைர்யமுமுண்டாயிற்று. 'ஹிந்து பேட்ரியட்' பத்ராசிரியரிடம் ஒரு வ்யாஸத்தை எழுதிக்கொண்டு நேரில் போனார். அவர் வ்யாஸங்களில் கருத்துகள் ஸரியாயிருப்பதுதான் முக்யமென்றும் பாஷை அதிக தோரணை யாயிருக்கக் கூடாதென்றும் சொல்லி, இவர் வ்யாஸத்தில் சில திருத்தங்களும் மாறுதல்களும் செய்து காட்டினார். பிறகு அதைப் பத்ரிகையில் ப்ரசுரித்தார். க்ருஷ்ணதாஸர் இதற்குப்பிறகு விஷயங்களெழுதும் போதெல்லாம் "ஹிந்துபேட்ரியட்" பத்ராசிரியர் சொன்ன புத்திமதிகளை ஞாபகத்தில் வைத்துக்கொள்வார். இப்படி சில காலத்துக்குள் வ்யாஸங்கள் திவ்யமாய் எழுதப்பழகினார். வ்யாஸங்களில் நல்ல கருத்துகளிருக்க வேண்டுமென்று அதற்காகப் புஸ்தக சாலைகளுக்குச் (லைப்ரரி) சென்று விஷயங்களைத் திரட்டினார். இவர் வ்யாஸங்களை "இங்க்லீஷ்மன்" பத்ராதிபரும் நன்கு மதித்து ப்ரசுரித்தாரென்றால் இவருக்குள்ள ஸாமர்த்யத்துக்கு வேறென்ன ஸாக்ஷி வேண்டும்? "ஹிந்து பேட்ரியட்" பத்ரிகைக்குத் தொடர்ச்சியாய் அருமையான வ்யாஸங்கள் எழுதினார். அந்தப்பத்ராதிபராகிய பாபுமூகர்ஜி க்ருஷ்ணதாஸருக்கு தெய்வக்ருபையால் ஆயுள் பலமிருக்குமானால் தேசத்துக்கு நன்றாய் உழைப்பார் என்று சொன்னாராம்.

இப்படியிருக்கையில், 1860-ஆம் வருஷத்தில் ஹிந்து பேட்ரியட்டின் ஸொந்தக்காரர் காலகதியடையவும் "ஹிந்து பேட்ரியட்" பத்ரிகையின் பத்ராதிபஸ்தானம் காலியாயிற்று. ஒரு வருஷகாலம் அனேக கைகள் மாறிற்று. இரண்டாவது வருஷத்தில் க்ருஷ்ணதாஸரைப் பத்ராதிபராக நியமித்து ஸொந்தக்காரர்கள் மேம்பார்வை பார்த்து வந்தார்கள். ஸ்வல்ப காலத்துக்குள்ளாக இவர் அந்த பொறுப்புள்ள ஸ்தானத்துக்கு ஸகல விதத்திலும் தான் தகுதியுடையவரென்று காட்டிக்கொண்டார். ஸொந்தக்காரர்கள் க்ருஷ்ணதாஸ் பாலிடம் ஸகல பொறுப்பையும் ஒப்புவித்தார்கள்.

பால் ஹிந்து பேட்ரியட் பத்ராதிபத்யத்தை வகித்த காலத்தில் அந்தப்பத்ரிகை படுத்துக்கொள்ளும் ஸ்திதியிலிருந்தது. லாபம் வராமல் நஷ்டம் வந்து கொண்டிருந்தது. பால் தமது ஸாமர்த்யத்தால் அதை, 'இந்தியர்கள் நடத்தும் பத்ரிகைகளில் முதன்மையானது ஹிந்து பேட்ரியட்' என்று பேர்வாங்கும்படி உன்னத

நிலைமைக்குக் கொண்டு வந்தார்.

பால் பொது நலக்காரியங்களுக்கு உழைப்பதில்ரொம்ப ப்ரியமுள்ளவர்.

1863-ஆம் வருஷத்தில் கல்கத்தா கார்பரேஷன் கமிஷனராகவும் ஆனரரி மாஜிஸ்ட்ரேட்டாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1872-ஆம் வருஷத்தில் பங்காள சட்ட நிரூபண ஸபை மெம்பரானர். மேலும் அவர் ஸர்வகலா ஸங்கபெல்லோவாகவு மிருந்தார். 1877-ஆம் வருஷத்தில் வைஸ்ராய் லார்ட்லிட்டன் டில்லியில் தர்பார் நடத்தின ஸமயத்தில் இவருக்கு கவர்ன்மெண்டார் 'ராய் பஹதூர்' பட்டம் கொடுத்தார்கள். அடுத்த வருஷம் ஸி. ஐ. இ என்ற உயர்ந்த பட்டமும் கிடைத்தது.

1879-ஆம் வருஷத்தில் ப்ரிட்டிஷ் இந்தியன் அஸோஸியேஷன் கார்யதரிசியாயிருந்த காலத்தில் அவர் க்யாதி பரவியது. எல்லாருக்கும் இவரிடம் மதிப்புண்டாயிற்று. இவருக்கு செல்வாக்கு அதிகமாயிற்று.

லார்ட் ரிப்பன் வைஸ்ராயாயிருந்த காலத்தில் ப்ரிட்டிஷ் இந்தியன் அஸோஸியேஷன் ப்ரதிநிதியாக சட்டஸபை மெம்பரானர். பால் பொறுப்புள்ள அநேக பதவிகளை வகித்தாராலும் ஒவ்வொன்றையும் த்ருப்திகரமாயும் மனச்சாக்ஷிக்கு விரோத மில்லாமலும் செய்து உத்யோகஸ்தர்களுடையவும் உத்யோகஸ்தர்களல்லாத மெம்பர்களுடையவும் ஜனங்களுடையவும் நன்மதிப்பைப் பெற்றார்.

பால் எழுதும் இங்க்லீஷை பார்க்கும் பொழுது தேர்ந்த இங்க்லீஷ் க்ரந்தகர்த்தரோ என்று மயக்க முண்டாகும்.

அவருக்கு வாக்சாதுர்யமுண்டு. விஷயங்களை ஆராய்ந்து குணதோஷங்களை எடுத்து விஸ்தரித்து தர்க்கம் செய்வதில் நிபுணர். அவர் மேலான கொள்கைகளைப் பின் பற்றி நடக்கிறவர். மனஸுக்கு ஸரியென அவருக்குத் தெரிந்த விஷயங்களை யார் என்ன நினைத்துக் கொண்ட போதிலும், என்ன விரோத முண்டான போதிலும் சொல்லாமலிருக்க மாட்டார். ஸமயமறிந்து அதற்குத் தகுந்தாற்போல் கார்யஸித்தி பெறுவதையே நோக்கமாகக் கொண்டு தம்கொள்கைகளுக்கு மாறாய் ஒரு பொழுதும் நடக்கமாட்டார். எதையும் ஆரத்தீர யோசியாமலும், ஆராயாமலும் பேசவாவது எழுதவாவது மாட்டார்.

இவர் மிகவும் சாந்த குணமுடையவர். படாடோபக்காரரல்ல.

க்ருஷ்ணதாஸர் குழந்தைகளிடத்தில் மிக்க வாஞ்சையுள்ளவர். குடும்பத்தை விட்டுப் பிரிந்திருப்பதில் அவருக்கு ப்ரியமில்லை. குழந்தைகளுக்கு உபாதி யேதாவதுண்டானல் அவர் மிகவும் கவலைப்படுவார். டாம்பீகமொன்றில்லாமல் ஸாதாரண உடைகளைத்தான் தரித்துக் கொள்வார். அவர் தம் ஸுகத்தையும் போகத்தையும் விரும்ப மாட்டார். ஏழைகளுக்கு சக்தியானுஸாரம் தர்மம் செய்வார். குடும்பத்திலுள்ளவர்களிடத்திலும் வேலையாட்களிடத்திலும் ரொம்ப பக்ஷமாயும் தயவாயுமிருப்பார்.

தம்மைப்போல் பொது நலத்துக்காக உழைக்க முன் வருபவர்களிடம் அனுதாபம் காட்டி அவர்களுக்கு வேண்டிய புத்திமதிகளை ஸந்தோஷமாய்ச் சொல்வார்.

இப்படி பலவிதமான வேலைகளில் விடாமுயற்சி யுடனும் ச்ரத்தையுடனும் உழைத்து வந்த காரணத்தால் இவருக்கு தேக அஸௌக்யமுண்டாயிற்று. ஹிந்து பேட்ரியட் பத்ராதிபத்யத்தை சிறப்பாய் 23 வருஷகாலம் நடத்தி 1884 வருஷம் ஜுலை மாஸம் 24 தேதி தேவலோக ப்ராப்தி யடைந்தார். அவர் இறந்த பிறகு கல்கத்தாவில் பல ப்ரபல இங்க்லீஷ் உத்யோகஸ்தர்களும் இந்திய உத்யோகஸ்தர்களும் பொது ஜனங்களும் பொது மீட்டிங் கூடி க்ருஷ்ணதாஸ்பாலுக்கு அவர் செய்த பொதுஜன கைங்கர்யங்களுக்கு நன்றியைச் செலுத்தினர்கள்.

பாலின் சரித்ரத்தால் ஒருவர் கற்றுக் கொள்ள வேண்டிய நீதிகள் பலவிருக்கின்றன. இவைகளைச்சொல்லி இவரின் சரித்திரத்தை முடிக்கிறோம். ஸாதாரணமான ஸ்திதியுள்ளவர்களாயிருந்தாலும், ஸ்வய முயற்சியால் எத்தகைய உயர்ந்தபதவிக்கும் வரலாம். அவரவர்கள் தம் தம் சக்திக்கியன்ற மட்டில் தேசத்துக்கும் ஜனங்களுக்கும் உபயோக முள்ளவராயிருக்கலாம். எத்தகைய ச்ரமஸாத்யமான கார்யங்களையும் விடாமுயற்சியால் ஸாத்யமானவைகளாய்ச் செய்யலாம். பத்ராதிபராயிருப் பதனலேயேகவர்ன்மெண்டாருக்கு விரோதமாயிருக்கவேண்டு மென்பதில்லை. அவர்களுக்கு ஸமயாஸமயங்களில் ஹிதாஹிதங்களை எடுத்துச் சொல்லி அவர்களுடைய மதிப்பைப் பெறலாம். ஜனங்களுக்கு ப்ரதிநிதியாயிருந்து செல்வாக்குப் பெறலாம்.

எம். வி. ஈச்வரன்.

# SELECTIONS.
# விசேஷத்திரட்டு.

## BRICKS AND TILES.
## செங்கற்களும் ஓடுகளும்.

களிமண்ணைப் பலவிதமாகத் தயார்செய்து வேண்டியவிதம் கட்டளைகளில் அறுத்துக் காற்றூடவைத்துச் சுட்டெடுத்துக் கொள்வதற்குச் செங்கல் என்று பெயர். இவ்விதக் கல்லைச் சுடாமல் காயவைத்துக் கொண்டால் அதற்குப் பச்சைக்கல் என்றுபெயர்.

### அவைகளின் குணமும் உருவமும்.

கற்களின்குணம், அவை செய்யப்படும் மண்ணின் குணத்தையும் பதப்படுத்தும் விதத்தையும் பொறுத்து நிற்கின்றது. அதன் உருவம் அறுப்பதிலும், காயவைப்பதிலும், சுடுவதிலும் எடுத்துக்கொள்ளும் சிரமத்தைப் பொறுத்து நிற்கின்றது. எந்தக் கல் சமநிறமாகவும், காற்றுக்கொப்பளமும் விரிசல்களுமில்லாமல் உறுதியாகவும் கூர்மையான நுனிகளுடனும், தட்டிப் பார்த்திடும் போது கணீர் என்ற சப்தத்துடனும், தண்ணீரில் போட்டு எடுக்கும்போது தன் நிறையில் 15-ல் ஒரு பங்குக்கு அதிகப்படாமல் நீரை இழுத்துக்கொள்ளும் குணத்துடனு மிருக்கிறதோ, அதைத் தான் நல்ல செங்கல் எனச் சொல்லவேண்டும். சாதாரணமாக நமது நாட்டுக் கற்கள் தன் நிறையில் 5-ல் ஒரு பங்குக்கு அதிகமாகத் தான் நீரை உட்கொள்வதாகச் சொல்லப்படுகின்றது.

செங்கல் அறுப்பதற்கு உபயோகப்படும் மண்ணின் விதம்:—இதற்கு உபயோகப்படும் மண்ணின் விதம் மூன்று. அது களிப்பு அதிக மிருப்பின் களிமண்ணென்றும், மணல் அதிகமிருப்பின் மணல் மண்ணென்றும், சுண்ணாம்பு அதிக மிருப்பின் சுண்ணாம்பு மண்ணென்றும், மூவகையாகப் பிரிக்கப்படும்.

களிமண்.—இது அதிகக் களிப்புடையது. இதைக் கல்லாக அறுப்பதில் கஷ்டமிராது. ஆனால் அறுத்துக் காயவைத்திடும்போது அதிகமாகத் தன் அளவில் குறைவு படுவது மல்லாமல் சுடும்போது உருகிப் போகும் குணமுடையது. வேண்டிய அளவுக்கு மணல்மண்ணைச் சேர்த்துப் பதப்படுத்தி இதன் தூர்க் குணத்தைத் தடுக்கலாம்.

மணல்மண்.—இம்மண்ணில் அறுக்கப்படும் கற்கள் பலமற்றதாகவும் புலபுலவென்று நொறுங்கிப் போகும் தன்மையுடையதாகவு மிருக்கும். களிமண்ணையேனும், சுண்ணாம்பு மண்ணையேனும் வேண்டிய அளவுக்குக் கலந்து பதப்படுத்தி நல்ல கல்லறுக்கலாம்.

சுண்ணாம்பு மண்:—சுண்ணாம்பு சம்பந்தப்பட்ட மண்ணைக் கல்அறுக்கும்படிநேரிட்டால் அதனுடன் வேண்டிய அளவுக்கு மணல் மண்சேர்த்துப் பதப்படுத்தி அறுக்கவேண்டும். மிதமிஞ்சின சுண்ணாம்பு மண்ணி லிருக்குமானால் கல் சீக்கிரம் உருகுவதற்கு வழிகொடுக்கும்.

செங்கலறுப்பவன் செய்யும் வேலை ஐந்துவிதமாகப் பிரிக்கப்படும். அது:—

(1) நல்லமண்ணைத் தெரிந்தெடுத்தல்
(2) பதப்படுத்துதல்
(3) உருவாக்குதல்
(4) காயவைத்தல்
(5) சுடுதல்

என்பனவாம்.

### நல்லமண்ணைத் தெரிந்தெடுத்தல்.

செங்கல் அறுக்க எத்தனிப்பதற்கு முன் அதை அறுக்க உத்தேசித்திருக்கும் மண்ணை முதலில் பரிசோதிக்க வேண்டும் பரிசோதிப்பதால் அது நல்லதா இல்லையா என்றும், எந்த மண் அல்லது மணலைச் சேர்த்தால் நலமாகுமென்றும் அறிந்து கொள்ளலாம். களிப்பு அதிகமான மண்ணாகவிருந்தால் மணலை அதிகம் சேர்க்க வேண்டிவரும். சிறு கற்கள் சம்பந்த மில்லாமல், வேண்டிய அளவுக்கு இயற்கையிலேயே மண்ணும் மணலுங்கலந்து கிடைக்கக்கூடியது தான் கல்லறுக்க நல்லமண்ணென்று சொல்லப்படும். சாதாரணமாக 5 பங்கு மண்ணுடன் 1 பங்கு மணலைச்சேர்த்து அரைத்து அறுக்கப்படும் கற்கள் நன்றாக இருக்கும் எனச் சொல்லப்படுகின்றது. நமது தேசத்தில் செங்கலறுப்பதில் பணச்செலவு அதிகமில்லாமலிருக்கவேண்டுமென்ற எண்ணத்தால் வேலை செய்ய வேண்டிய இடத்துக்குச்சமீபத்தில் உள்ள பூமியில் விசேஷமாகக் கல்லறுக்கிறார்கள். அறுக்கப்படும் மண் நல்லதாய் இருந்து விட்டால் நல்ல கற்கள் கிடைக்கும்; கெடுதலாக இருந்

தாலோ அது உபயோகமாகும் கட்டடம் கெட்டியாக விருக்க வகைகொடுக்காது. இரண்டு மூன்று வித மண்ணை சேர்த்து அறுக்கப்படும் கற்கள் கூடியவரையில் நல்லதாக விருக்குமெனச் சொல்லப்படுகின்றது. கல்லறுக்கத் தெரிந்தெடுக்கப் பட்டிருக்கு மிடத்தை அறுப்பதற்கு மூன்று மாதத்திற்கு முன்பாகவே கொத்தி விட்டு வைக்கவேண்டும். கொத்தி வைப்பதால் மண்கட்டிகளெல்லாம் காற்றோட்டத்தால் புலபுலவென்று உதிர்ந்து பொடியாகிப்போம். இவ்விதம் பொடியாவதாலுண்டாகும் பிரயோசனம் பலவுண்டு. சென்னை சித்திரக்கலாசாலையிலும் பங்களூர் முதலிய இடங்களிலும் கற்கள், ஒடுகள் அறுப்பதற்கு முன்நல்லதாகத்தெரிந்தெடுத்து, பதப்படுத்த எடுத்துக்கொள்ளும் சிரத்தைதான் அவைகளின் உயர்வுக்குக் காரணமாகவிருக்கின்றது. நமது நாட்டுக் கற்களைப் பரிசோதித்துப் பார்க்கும்போது அதில் சரிக்குச் சரி மணலும் மண்ணுங் கலந்திருப்பதாகத் தெரிகிறது.

### மண்ணைப் பரிசோதிக்கும் வழி.

சாதாரணமாக மூன்று விதமாய்ச் சொல்லப்படுகின்றது. (1) கொஞ்சம் மண்ணெடுத்து அதில் தண்ணீர் தெளித்து கெட்டியாகப் பிசைந்து தண்ணீர் வைத்துள்ள பாத்திரத்தில் சிறிது நேரம் வைத்திருக்க மணல் சம்பந்தம் அதிகமிருந்தால் அது சடுதியில் கரைந்துவிடும். களிமண் அதிகமிருந்தால் கரையாது. இந்தக் கட்டி கரைவதற்குப் பிடிக்கும் நாழிகையைக் கணக்கிட்டு இதன் குணத்தைத் தெரிந்துகொள்ளலாம்.

(2) கொஞ்சம் மண்ணை எடுத்துப் பொடியாக்கி நிறுத்து, பிறகு அதில் தண்ணீர் விட்டு மணலில் ஒட்டிக்கொண்டிருக்கும் மண் கரைந்துபோகும் வரையில் பலமுறை சுத்தஞ்செய்து மீதியுள்ள மணலை நிறுத்துப் பார்க்க ஏற்படும் வித்தியாசம் அதில் கலந்திருந்த மண் என்று தெரிந்துகொள்ளலாம்.

(3) மண்ணில் கொஞ்சம் திராவகத்தை ஊற்றிடும்போது அது கொதித்தால் சுண்ணும்பு சம்பந்தப் பட்டதெனத் தெரிந்துகொள்ளலாம்.

### பதப்படுத்துதல்.

எந்த விடத்திலிருந்து மண்ணை எடுத்துக் கல்லறுக்க உத்தேசித்திருக்கின்றதோ, அந்த இடத்திலுள்ள புல்முதலியவைகளைக் களைந்து எடுத்து சுத்தஞ்செய்து சுமார் 1-அடி ஆழத்திற்குக் கொத்தி சில காலம் வைத்திருக்கவேண்டும். பிறகு வேண்டிய அளவிற்குத் தண்ணீர் ஊற்றி ஒருநாள் வைத்திருந்து மறுநாள் காலையில் சிலவேலைக்காரர்களைக்கொண்டு துவைத்து இவ்விதமே 3-நாள் பதப்படுத்திக் கல்லறுக்க வேண்டும். துவைக்கும்போது அதிலுள்ள சிறுகற்களைப் பொறுக்கி எறிந்துவிடவேண்டியதுடன் தப்பித்தவறிக் கிடக்கும் புல்பூண்டு முதலியவைகளையும் நீக்கிவிடவேண்டும். கல்லறுக்கச் சேகரிக்கப்பட்டிருக்கும் மண்ணைப் பதப்படுத்துவதால் உண்டாகும் நன்மை பலவாக விருப்பதால், இது விஷயத்தை அவசரப்படாமல் செய்யவேண்டும். பதப்படுத்தும்போது தண்ணீரை அளவுக்குத் தகுந்த வீதம் சேர்த்தல் வேண்டும். அதிகம் தண்ணீர் சேர்த்தலால் உண்டாகும் அனர்த்தங்கள் பல. இவ்விதம் தண்ணீர் அதிகமாகச் சேர்த்துப் பதப்படுத்தி அறக்கப்படும் கற்கள் சீக்கிரம் உலர்ந்து புல புலவென்று போகின்றன. ஒரு கன அடி மண்ணுக்கு அரைக்கன அடி தண்ணீர் சேர்த்துப் பதப்படுத்தல் நன்மை யெனச்சொல்லப்படுகின்றது. நமது தேசத்தவர் விசேஷமாகச் சுளுவான விலையுள்ள கற்களையே வாங்குவது சகஜமாயிருப்பதால், காளவாய் போட்டு ஜீவனம் செய்பவர்கள் இது விஷயங்களில் அதிக சிரத்தையுடன் வேலை செய்ய முடியாமல் கல்லறுக்க வெட்டிப்போட்ட மண்ணை மண்வெட்டிகொண்டு இங்கும் அங்குமாகச் சிறிது புரட்டி உருவாக்குவது சகஜமா யிருக்கிறது. இவ்விதம் நடந்து வருவதால் நாளாவட்டத்தில் நஷ்டமடைவோர் பெரும்பான்மையும் கட்டடம் கட்டுபவர்களாகவே யிருக்கிறார்கள். பதப்படுத்துவதில் எடுத்துக்கொள்ளும் சிரமத்துக்குத் தக்கவாறுதான் நல்ல கற்கள் கிடைக்கும். சரியாய்ப் பதப்படுத்தப்பட்ட மண்ணினின்றும் அறுக்கப்படும் கற்கள், வழ வழப்பாகவும், கெட்டியாகவும், வெகுநாளிருக்கக் கூடியதாகவு மிருக்கும். பக்மில் (Pug Mill) என்ற இயந்திரத்தின் உதவியாலும் மண்ணைப்பதப்படுத்துகின்றனர். இது மிகவும் உத்தமமானது.

### உருவாக்குதல்.

இவ்விதமாகப் பதப்படுத்தப்பட்ட மண்ணை அறுப்பதற்கு கட்டைகள் உபயோகிக்கப் படுகின்றன. இவைகள் விசேஷமாய் மரக்கட்டைகளால் தான் செய்யப்படுகின்றன. ஒரு கல்லறுக்கும் கட்டையும்

இரண்டு கல்லறுக்கும் சட்டமேயும் உண்டு. கூர்மை யான ஒரங்களுடைய கற்கள் வேண்டுமானல் நல்ல கட்டளைகள் வேண்டுவது அவசியம். மரச்சட்டளை கள் நாளாவட்டத்தில் சீக்கிரம் தேய்ந்து விடும் குண முடையசாதலால் அதைத் தடுப்பதற்கு இதன் உட்புறத்தில் கட்டளைச் சட்டத்தின் உயரத்திற்கு இரும்புச் சட்டத்தை இணக்குவது அவசியமானது. கற்களை அறுத்துக் காயவைக்கும்போதும் சுடும்போ தும், அது தன் அளவில் குறைவுபடுவது சகஜ மாதலால் மண்ணின் தன்மையை அறிந்து அதற்குத் தகுந்தாற்போல் கட்டளையைச் சிறிது பெரிதாகச் செய்து கொள்வது அவசியம். இவ்விதம் செய்துகொ ள்ளாமற்போனல் நமக்கு வேண்டிய கல்லின் அளவு குறைந்துவிடும். நமது நாட்டுக் கற்கள் (அதாவது) பூமியில் அறுக்கப்படும் கற்களைக் கொண்டு இசைசேர்த்து அடுக்குவது மிகுந்த கஷ்டம். கட்டடம் கட்ட உபயோகிக்கப்படும் கற்கள் சாதாரணமாக அங்குலம் $8\frac{3}{4}$-க்கும் $4\frac{1}{4}$ க்கும் 2-க்கும் இருக்கவேண்டும். இவ் விதப் பெருங் கற்களை உபயோகிப்பதற்கும் நமது நாட்டில் செய்யப்படுகிற சிறு கற்களை உபயோகப் படுத்துவதற்கும் வித்தியாசங்கள்பலவாரூக இருக்கின் றன. ஒரு கொத்தன் ஒருநாளில் எவ்வளவு சிறுகற் களை அடுக்குவானே அவ்வளவு பெருங்கற்களையும் அடுக்குவான். பெருங்கற்களை அடுக்குவதில் சாந்து மிச்சப்படுவதுடன் கூலியாட்களின் செலவும் மட்டுப் படும். ஒரு கல்லுக்கும் மற்றொரு கல்லுக்கும் நடுவி லுள்ள சாந்து $\frac{1}{4}$-அங்குலத்திற்கு அதிகப்படுவது கூட வே கூடாது.—சுதேசமித்திரன்.

---

## MANURES AND FERTILISERS.

### எருக்களும் உரங்களும்.

செடிகளுக்கும் பிராணிகளைப்போல் உணவு வேண்டியது அவசியம். எவ்வளவுக்கெவ்வளவு ஆடு மாடுகளுக்கு உணவு ஊட்டி பாதுகாக்கிறேமோ அவ்வளவுக் கவ்வளவு நன்றாய் வளர்ந்து பிரயோஜன முள்ள வைகளாகின்றன. அதேமாதிரி பயிர்களுக் கும் நல்ல ஊட்டம் கொடுத்தால் செழிப்பாய் வளர்ந்து அதிக மாசூலைத்தரும். நாம் பயிர்களுக்குப் போடுகிற உணவு சாதாரணமாய் பயிர்கள் தாங்களே, காற்றிலி ருந்தும்தண்ணீரிலிருந்தும் அடையக்கூடாதவைகளா யிருக்கவேண்டும். இப்படிப்பட்ட உணவு ஆடுமாடு களுக்கு மேய்ச்சலில் கிடைப்பதுபோல் பயிர்களுக் கும் நிலத்தில் கிடைக்கக்கூடும். சில நிலங்களில் சுபாவமாய் கிடைக்காது. அடிக்கடி சாகுபடி யாகிற நிலங்களில் சாகுபடி தோறும் சத்துக்கள் எடு படுகிறபடியால் பயிருணவு சத்துக்கள் ரொம்ப குறை வாகத்தான் இருக்கும். அப்பேர்ப்பட்ட நிலங்களுக் குத் தக்க பயிருணவு சத்துக்கள் போடவேண்டியது அவசியம். நாம் போடுகிற எருக்களிலும், உரங்களி லும் பயிருணவு சத்துக்கள் சேர்த்துக்கொண்டு தான் வருகிறேம். இப்படி சேர்ப்பதினுல்தான் மாசூலை யும் அடைகிறேம். எரு அல்லது உரங்கள் போடாத நிலங்களில் சரியான மாசூல் கிடைக்கிறதில்லை. இவ் வாறு எருப்போடுவதும் உரமிடுவதும் பயிர்களுக்கு உணவு ஊட்டுவதற்குத்தான்.

பயிருணவென்றல் என்ன? அவைகளில் நாம் உரங்களிலும், எருக்களிலும் சேர்க்கவேண்டியவை எவை?

பயிர் வளர்வதற்கு 10 மூலவஸ்துக்கள் அவசிய மென்று ரஸாயன சாஸ்திரம் தெளிவாய் காட்டு கிறது. அவைகள், கார்பன் (Carbon) என்ற கரியமிலவாயுவின் மூலவஸ்து, ஹைட்ரஜன் (Hydrogen) என்ற ஜலத்தின் மூலவஸ்து, ஆக்ஸிஜன் (Oxygen) என்ற பிராணவாயு, நைட் ரஜன் (Nitrogen) என்ற வெடியுப்பு வாயு, பாஸ் பரஸ் (Phosphorus), ஸல்பர் (Sulphur) என்ற கந்தகம், பொட்டாஸியம் (Potassium) என்ற சாம் பல் காரம், கால்ஸியம் (Calcium) என்ற சுண்ணும் பின் மூலவஸ்து, மாக்னீஸியம் (Magnesium), இரும்பு (Iron) ஆகிய இவைகள்.

செடிகளின் காய்ந்த பாகத்தின் பாதி அம்சமான கார்பன் (Carbon) என்ற கரி முற்றிலும் காற்றி லுள்ள கரியமிலவாயுவிலிருந்து கிரகிக்கப் படுகிறது. ஹைட்ரஜன் (Hydrogen) என்ற ஜலவாயுவும், ஆக்ஸிஜன் (Oxygen) என்ற பிராணவாயுவும், முற் றிலும் தண்ணீரிலிருந்து பயிருணவாகிறது. காய்ந்த பாகத்தில் 100-ல் இரண்டு பாகமாகிய நைட்ரஜனும், செடிகைக் கொளுத்திபபின்மீதியாகியசாம்பலிலுள்ள, பாஸ்பரஸ் (Phosphorus), சல்பர் (Sulphur) என்ற கந்தகம், கால்ஸியம் (Calcium) என்ற சுண்ணும் பின் மூலவஸ்து, மாக்னீஸியம் (Magnesium) என்ற லோகமும், கொஞ்சம் இரும்பும் (Iron) நிலத் திலிருந்து உணவாக உட்கொள்ளப்படுகின்றன.

இந்த 7 வஸ்துக்களில் சல்பர் (Sulphur) என்ற கந்தகம் சல்பேட் (Sulphate) என்ற உப்புக்களாகவும், மாக்னீஷியம் (Magnesium) என்கிற லோகமும் இரும்பும் (Iron) கலப்பு வஸ்துக்களாகவும் பூமியில் ஏராளமாய் இருக்கின்றன. ஆதலால் இவைகளை உணவாக நிலத்திற்கு சேர்க்கவேண்டியது அனுவசியம். கால்ஷியம் (Calcium) என்ற சுண்ணாம்பின் மூலவஸ்து, அநேகமாய் எல்லா நிலங்களிலும், சுண்ணாம்பாக வேண்டிய அளவு இருக்கிறது. இது குறைவாயிருக்கிற சில நிலங்களுக்கு மாத்திரம் சேர்க்கவேண்டிவரும். மற்ற மூன்று வஸ்துக்களாகிய நைட்ரஜன் (Nitrogen), பாஸ்பரஸ் (Phosphorus) பொட்டாஷியம் (Potassium) எல்லா நிலங்களிலும் குறைவாகத்தான் இருக்கிறது. அடிக்கடி சாகுபடியாகிற நிலங்களிலோ ரொம்பகுறைவு. இந்த மூன்றும் தான் அவசியமாய்ப் பயிருணவாக சேர்க்கவேண்டியவைகள். இதற்காகவே உரங்களும், எருக்களும் சாகுபடிதோறும் உபயோகப்படுத்தப்படுகின்றன. இம்மாதிரி இம்மூன்று சத்துக்களும், உணவாகக் கூடிய நிலைமையில் நிலத்தில் வேண்டிய அளவு இருந்தாலொழிய காற்றிலும் ஜலத்திலுமுள்ள மற்ற ஆகாரங்களை உட்கொள்கிறதில்லை. செழிப்பாக வளர்கிறதுமில்லை. இம்மூன்றுவஸ்துக்களில் நைட்ரஜன் (Nitrogen) ரஸாயன விபாகத்தில் (Chemical analysis) நைட்ரஜனாகவும், பாஸ்பரஸ் (Phosphorus) பாஸ்பாரிக் ஆஸிட் (Phosphoric Acid) ஆகவும், பொடாஷியம் (Potassium) பொடாஷ் (Potash) ஆகவும் கண்டு பிடிக்கப்படுகின்றன. உரங்களின் கிரயங்களும் அநேகமாய் அவைகளிலடங்கிய நைட்ரஜன் (Nitrogen), பாஸ்பாரிக் ஆஸிட் (Phosphoric Acid), பொட்டாஷ் (Potash) இவைகளின் அளவைப் பொருத்திருக்கின்றன.

சுண்ணாம்பு சில நிலங்களில் அதிக குறைவாகயிருப்பதால் மேற்கூறிய 3-பயிருணவு சத்துக்களோடு சுண்ணாம்பை நான்காவதாக கொள்ளவேணுமென்று சிலர் அபிப்பிராயப் படுகிறார்கள். சுண்ணாம்பு நிலத்தில் சுவல்ப பாகம் பயிருணவாகவும், மற்ற பெரும் பாகம் பயிர்கள், நிலத்திலிருக்கிற சத்துக்களை உணவாக கிரகிக்கக்கூடிய சத்தியையும் விருத்தி பண்ணுகிறது. இப்படி உணவாகக்கூடிய சுவல்ப பாகமானது எல்லா நிலங்களிலும் இருக்கிறது. குறைவாகயிருக்கிறது சத்துக்களை உணவாக்கக்கூடிய சத்தியை விருத்தி செய்கிற பாகந்தான். இந்த பாகம் நிலத்தின் சுபாவவளம், அல்லது இயற்கை வளத்தை பொருத்ததே யொழிய ரஸாயன வளத்தை பொருத்ததல்ல. இரஸாயன வளமாவது நிலத்தில் பயிர்களுக்குவேண்டிய அளவு பயிருணவு சத்துக்களை உணவாகக்கூடிய நிலைமையில் சேர்ப்பதுதான். இரஸாயன வளமும், சுபாவவளமும் ஒத்திருக்கிற நிலத்தில்தான் பூராமாசூல் கிடைக்கும்.

பயிர்களுக்கு அந்தந்த பயிர்களுக்குத் தக்கபடி நைட்ரஜன் (Nitrogen), பாஸ்பாரிக் ஆஸிட் (Phosphoric Acid), பொட்டாஷ் (Potash) இவைகள் வேண்டிய அளவு சேர்க்கவேண்டியது அவசியம். இம்மூன்றிலொன்று குறைந்திருந்தால் எந்த பாகம் எவ்வளவு குறைந்திருக்கிறதோ, அவ்வளவுக்கு மாசூலும் குறைந்துவிடும். மற்ற இரண்டும் எவ்வளவு அதிகமாயிருந்தாலும் குறைவாக இருக்கிற மூன்றாவதை பூர்த்திசெய்யாது. இந்த சத்துக்களின் அளவு, பயிருக்குப் பயிர் வித்தியாசப்படும். அதாவது சில பயிர்களுக்கு நைட்ரஜன் (Nitrogen) அதிகமாயும், வேறு சில பயிர்களுக்கு பாஸ்பாரிக் ஆஸிட் (Phosphoric Acid) அதிகமாயும், இன்னும் சில பயிர்களுக்கு பொடாஷ் (Potash) அதிகமாயும் உபயோகிக்க வேண்டும். உதாரணமாக தழைப்பயிர்களுக்கு நைட்ரஜன் (Nitrogen) அதிகமாயும், தானியப் பயிர்களுக்கு பாஸ்பாரிக் ஆஸிட் (Phosphoric Acid) அதிகமாயும், தாள்பயிர்களுக்கு பொடாஷ் (Potash) அதிகமாயும் இருக்கவேண்டும். இம்மூன்று சத்துக்களும் ஒவ்வொன்றும் வெவ்வேறு பாகங்களை விருத்திபண்ணக்கூடியது. நைட்ரஜன் (Nitrogen) முக்கியமாய் தழைசத்து; பாஸ்பாரிக் ஆஸிட் (PhosphoricAcid) தானியசத்து; பொடாஷ் (Potash) தாள்சத்து ஆகிய இந்த 3 சத்துக்களும் அந்தந்தப் பயிருக்கு வேண்டிய அளவிலும் அந்தந்த பயிரின் விளைவு காலத்திற்குள் உணவாகக்கூடிய நிலைமையிலும் சேர்க்கவேண்டியது அவசியம்.

செடிகள் உணவுகளை ஜலத்தின் மூலமாய் வேர்களின் வழியாய் கிரகிக்கின்றன. அதாவது உணவுகள் நிலத்தில் உள்ள ஜலத்தில் கரைந்திருந்தால் அந்த ஜலத்தை உட்கொள்வதில் பயிருணவுகளையும் கிரகிக்கும். நாம் உபயோகிக்கிற உரங்களிலடங்கிய நைட்ரஜன் (Nitrogen), பாஸ்பாரிக் ஆஸிட் (Phosphoric Acid), பொட்டாஷ் (Potash) இம்மூன்று

சத்துக்களும் நிலத்திலுள்ள ஜலத்தில் கரையக்கூடிய வைகளாயிருக்கவேண்டும். சுரங்கங்களில் வெட்டியெடுக்கப்படுகிற பாஸ்பேட், (Phosphate) உப்புகளிலுள்ள பாஸ்பாரிக் ஆஸிட்டும் (Phosporic Acid) மாட்டுக்கொம்பு, குளம்பு முதலானவைகளிலுள்ள நைட்ரஜனும் (Nitrogen), பெல்ஸ்பார் (Felspar) முதலிய பாறைகளிலுள்ளபொட்டாஷும் (Potash) எளிதில் தண்ணீரில் கரையக்கூடாதவைகளானதால் எவ்வளவு போட்டபோதிலும் பயிருணவாகாது. சூபர் பாஸ்பேட் (Superphosphate) டிலுள்ள பாஸ்பாரிக் ஆஸிட்டும் (Phosporic Acid), நைட்ரேட் ஆப் சோடா (Nitrate of Soda) வெடியுப்பு, நைட்ரேட் ஆப் லைம் (Nitrate of Lime), சல்பேட் ஆப் அம்மோனியா (Sulphate of ammonia), நைட்ரோலிம் (Nitroleum) முதலியவைகளிலுள்ள நைட்ரஜனும் (Nitrogen), சல்பேட் ஆப் பொட்டாஷ் (Sulphate of potash), முரியேட் ஆப் பொட்டாஷ் (Muriate of potash), கெய்னிட் (Kainit) முதலியவைகளிலுள்ள பொட்டாஷும் (Potash), எளிதில் தண்ணீரில் கரையக்கூடியவைகளாதலால் கொஞ்சம் உபயோகித்தபொதிலும் உடனே குணத்தைக் காட்டுகின்றன.

இதனுல் நாம் உபயோகிக்கிற உரங்களெல்லாம் அந்தந்தப் பயிருக்குவேண்டிய அளவு சத்துக்கள் அடங்கியவைகளாகவும் போட்ட காலமுதல் அறுவடைகாலம் வரையில் அந்தந்த காலத்துக்குத் தக்கபடி உணவாகக்கூடிய நிலைமையிலும் இருக்கவேண்டும்.—சாஸ்த்ரீய உரம்.

---

## USE OF SOIL MOISTURE.

### மண்ணீரத்தின் ப்ரயோஜனம்.

ஒரு விவஸாயி மிக்க ச்ரமப்பட்டு நல்ல விதையைப் பொருக்கி விதைத்து எருவை ஏராளமாய்ப் போடுவானுயினும், ஜலக்கஷ்டமிருந்தால் அவனுக்கு போகம் ஸரியாய்க் கிடைக்காது. பயிர்களெல்லாம் வானத்தைப் பார்த்திருக்கின்றன என்று சொல்வது அவைகளுக்கு ஜலம் அவச்யமென்பதைக்குறிக்கிறது. உரம் கடினபதார்த்தமாயிருக்கும் பொழுது பயிர்களுக்குக்ரகித்துத் அதை தங்கள் வளர்ச்சிக்கு உபயோகப்படுத்திக்கொள்ளும் சக்தியில்லே. உரங்கள் ஜலத்தில் கரைந்திருந்தால் வேர்கள் மூலமாய் அவைகள் பயிர்களால் க்ரகித்துக் கொள்ளப்படுகின்றன. பயிர் வளர்ச்சிக்கு ஜலம் இன்றியமையாதிருக்கிறது. இது விஷயமாக 'கிருஷிகன்' பத்ரிகையில் மேற்கண்ட தலைப்பில் ஒரு வ்யாஸம் ப்ரசுரமாயிருக்கிறது.

எல்லாப் பயிர்களுக்கும் தண்ணீர் பிரதானமென்பது முக்கியம். ஏனென்றுல் செடிகளில் நூற்றுக்கு 60 முதல் 95 பாகம் தண்ணீர் நிறைந்ததாகவேயிருக்கிறது. மேலும் பயிர்கள் வளரும் காலத்தில் அவற்றின் இலைகளிலிருந்து அதிகத் தண்ணீர் ஆவியாய் வெளிப்படுகிறது. உதாரணமாக கோதுமை தானியத்தில் ஒரு டன் அதாவது 2240 ராத்தல் உலர்ந்ததாள் உண்டாக்குவதற்கு 522 டன் நிறையுள்ள தண்ணீர் அப்பயிரிலிருந்து ஆவியாக வெளிப்பட்டிருக்க வேண்டும். இவ்விதமாக நிலத்துக்குள்இவ்வளவு அதிகமான தண்ணீர் இருக்கவேண்டியது அவசியமென்று ஏற்படுகிறதினுல், இனிஇந்தத் தண்ணீர் எங்கிருந்து கிடைக்கக்கூடுமென்று சற்றுயோசிக்க வேண்டியிருக்கிறது. இது 2 மார்க்கங்களில் கிடைக்கக்கூடும்.ஒன்றுபெய்யும் மழையிலிருந்து கிடைப்பது. மற்ருென்று இறவைத் தண்ணீர் பாய்ச்சுவதிலிருந்து கிடைப்பது. நமது ராஜதானியிலுள்ள புஞ்சை நிலங்களில்அதிகபாகத்துக்கு இறவைத் தண்ணீர் பாய்ச்சுவது சாத்தியமல்ல. மேலும் அப்படிச் செய்யவேண்டுமானுல் அதில் உண்டாகும் செலவு அபரிமிதமாகும். ஆகையால் நமது நிலத்தில் இருக்கவேண்டிய ஈரத்தை இயற்கையாய்ப் பெய்யும் மழையிலிருந்தே பெரும்பாலும் நாம்பெற்றுக் கொள்ள முயலவேண்டும்.

சாகுபடி காலங்களில் அநுகூலமாகும்படி அப்போதைக்கப்போது மழை பெய்யுமானுல், நமக்கு புஞ்சை மாசூல் சரியானபடி கிடைக்கும். நமது புன்செய் பயிர்களுக்கு மண்ணீரம் அவசியமாய் வேண்டும் தருணத்தில் நமக்குப் போதுமான அளவுக்கு மழை பெய்யாமல் போகிறது. இக்காரணத்தினுல் மழை பெய்யும் காலங்களில் அந்தத் தண்ணீரை நிலத்தில் சேர்த்துவைத்துக் காப்பாற்றி மழையில்லாத காலங்களில் அந்த ஈரம் பயிர்களுக்கு உபயோகப்படும்படி செய்ய வேண்டியது மிகவும் அத்தியாவசியம்

புன்செய் நிலங்களில் அநேக பாகங்களில் மேல்பரப்பு கெட்டிப்பட்டு இறுகியிருப்பதால் முதல் முதல் பெய்யும் மழைத் தண்ணீர் மழை பூமியின்மேல் பெய்தவுடன் அத்தண்ணீர் கீழ் இரங்காமல் மேலேயே

வழிந்து ஓடிப்போகிறது. இதனால் பயிர்களுக்கு வேண்டிய ஈரம் நிலத்தில் இல்லாமல்போகிறது. ஆகையால் நிலத்தின் மேற்பரப்பில் விழும் மழை ஜலம் வடிந்து ஓடிப்போகாமல் பாதுகாத்து அவைகள் பின்னால் செடிகளுக்கு உபயோகமாவதற்காகப் பந்தோபஸ்து செய்யவேண்டும். இந்த ஸ்திதி நிலத்துக்கு உண்டாக வேண்டுமானால் இதனடியில் கண்ட 3 காரியங்களில் ஒன்றைச் செய்யவேண்டும். முதலாவது நிலத்துக்குள் தண்ணீர் இறங்கி அங்கிருந்து வடிவதற்காக மண்ணுக்குள் நீர்வடிவு குழாய்களை அமைப்பது; (2) தொழு எரு போன்ற வஸ்துக்களையும் இலை தழைகளையும் மக்கும்படி நிலத்தில் ஏராளமாய் சேர்ப்பது; (3) சடம்பு தக்கைப்பூண்டு முதலிய பச்சை இலைப் பயிர்களை நிலத்தில் உண்டாக்கி அதை அந்நிலத்திலேயே மடித்து உழுது எருவாக்குவது.

மண்ணுக்குள் தண்ணீர் அநேக ரூபங்களில் தங்கியிருக்கின்றது. அவற்றில் நாம் முக்கியமாய் கவனிக்க வேண்டிய இரண்டு எவையெனில், கட்டுக்கடங்காத தண்ணீர் ஒன்று; கீழ்மண் படைகளிலிருந்து மேல் மண்ணுக்கு ஏறிச்செல்லும் தண்ணீர் மற்றொன்று; கட்டுப்படாத தண்ணீர் என்று சொல்வது எது என்றால் நமது ஊற்றுகளிலும் கிணறு முதலிய ஜலாதாரங்களிலும் இருக்கும் தண்ணீர். அது இரைக்கும் போது மேல்மட்டத்திலிருந்து தாழ்ந்த பூமிக்கு தானாய் ஓடிப்பாயும் தண்ணீர். இது பயிர்களுக்கு உடனே உபயோகப்படக்கூடியது.

என்றாலும், ஒரு நிலத்துக்குள்ளிருக்கும் ஊற்று நீர் மட்டம் உயர்ந்து நிலத்தின் மேற்பரப்பில் கிட்டவரும் போது அது கெடுதியை உண்டாக்கும். அப்போது நிலத்தில் பயிர்களுக்கு வேண்டிய உஷ்ணம் இல்லாமல் குளிர்ச்சி அதிகரிக்கும். நிலத்திற்குள் காற்றோட்டம் உண்டாக யிடமிராது. வளரும் பயிர்களின் வேர்களுக்குக் காற்றோட்டம் மிகவும் அவசியமானது. என்றாலும் மேல்மழை பெய்யாத கோடை காலத்தில் ஒரு நிலத்திலுள்ள கட்டுப்படாத தண்ணீர் அல்லது ஊற்று நீர்மட்டம் மேல்மண்ணுக்குக் கீழே தணிந்து போகும். அப்போது அது அடிமண்ணிலிருந்து மேல்மண்ணிற்கு ஏறிச்செல்லும் ஈரத்தை நிலத்திற்குக் கொடுக்கிறது. இவ்விதமாய் கீழ்மண்ணிலிருந்து மேல்மண்ணிற்கு ஏறிச்செல்லும் ஈரம்தான் பயிர்களுக்கு வேண்டிய தண்ணீரை அநேகமாய்க் கொடுக்கிறது.

ஒரு நிலமானது சரியான ஸ்திதியிலிருந்து மண்ணின் அணுக்கள் ஒன்றோடொன்று நெருங்கி சேர்ந்திருக்கும்போது இந்த மண்ணீரமானது மண் அணுக்கள் ஒவ்வொன்றையும் பொருந்தி சுற்றிக்கொண்டிருக்கும். மேல்கவர்ச்சி யென்றும் ஓர்வித சக்தியினால் இந்த ஈரம் ஒரு மண் அணுவிலிருந்து அதற்கு மேலிருக்கும் மண் அணுவுக்கு ஏறும் இயற்கையை அடைகிறது. இந்த சக்தியை கண்ணினால் காணத்தக்கது அல்லவாயினும் சதாகாலமும் நிலத்தில் வேலை செய்து கொண்டேயிருக்கிறது. இதனால் நிலத்திற்குள் அதாவது (பாதாளத்தில்) இருக்கும் தண்ணீரானது நிலத்தின் மேற்பரப்புக்கு இழுக்கப்படுகிறது.

நமக்கு வேண்டியது என்னவென்றால் நிலத்தின் ஈரமானது பயிர்ச்செடிகளின் வேர்களின் வழியாய்ப் பிரவேசித்து அந்தத் தாள்களின் ஊடுசென்று அங்கிருந்து ஆவியாய் மாறிப்போகும்படி செய்வதுதான். காடுகளில் உள்ள மண்ணீரம் ஆவியாய்ப் போய் நஷ்டமடையாமல் காப்பாற்றுவதற்குக் கடவுள் இயற்கையாய் அமைத்திருக்கும் காரியமென்னவென்றால், அங்குள்ள மரங்களினின்றும் உதிரும் சருகுகள் மண்ணின்மேல் மெத்தைவிரித்ததுபோல் கிடப்பதுதான். இவ்விலைச் சருகு மெத்தையானது கீழிருக்கும் ஈரமான நிலத்துக்கும் மேலிருக்கும் ஆகாயத்துக்கும் உள்ள சம்பந்தத்தைக் கலைத்துவிடுகிறது. ஒரு அகன்ற பலகையானது சற்று மண்ணுக்குள் புதைந்து கிடந்தால் அதைச்சுற்றிலும் மண்ணானது எவ்வளவு காய்ந்து ஈரம் சற்றுமில்லாமல் இருந்தாலும் அந்தப் பலகை கிடந்த இடத்தில் மட்டும் மண் ஈரமாயிருப்பதை நாமெல்லாம் கவனித்திருக்கிறோம். சிலர் இந்தப் பலகையானது ஈரத்தை இழுக்கிறது என்று அபிப்பிராயப்படுகிறார்கள். அது சரியான அபிப்பிராயமல்ல. பலகையானது ஈரத்தை இழுக்கவில்லை. ஆனால், ஈரம் ஆவியாய்ப் போய்விடாமல் அது தடுத்துக்காக்கிறது. இதைப்போலவே காடுகளில் விரித்துக்கிடக்கும் சருகுகளும் மண்ணீரத்தை காக்கிறன்றன.

இவ்விதமாகக் காடுகளிலிருக்கிறபடி நாம் பயிரிடும் நிலங்களிலெல்லாம் சருகு மெத்தை விரித்து வைப்பது கூடாத காரியம். மண்ணின் மேற்பரப்பை பலகைகளால் மூடிவைப்பதும் அசாத்தியம். ஆனால் நில

த்தின்மேல் மண்மெத்தை விரித்ததுபோல் மண்ணின் மேற்பரப்பில் இரண்டு மூன்றங்குலத்துக்கு உழுது புழுதியாக்கிவைப்பதால் மண்ணீரத்தை சற்று காப்பாற்றலாம். நிலத்தின் மேல்மண்ணை அடிக்கடி பயிருழவுக்கருவிகளினுலாவது வேர் வாரிக்கருவிகளினுலாவது உழுது கிளறிக் கொண்டிருந்தால் மண்ணீரம் மேலேறிச் செல்லக்கூடியதான நுண்ணிய மண் அணுச்குழாய்களின் தொடர் மண்ணின் மேற்பரப்பு வரையிலும் வந்து சேராமல் இடையில் முறிந்து சிதைந்து போகும்படி எளிதில் செய்யலாம். இவ்விதத்தில் மண்ணீரம் ஆவியாய்ப் போவதைக் குறைக்கலாம். மண்ணின் மேற்பரப்பு பொலுபொலுப்பாய் இல்லாமல் செட்டிப்பட்டு "முகடுவலுத்துப்" போகும்போது அதிலுள்ள ஏராளமான மண்ணணுக்குழாய்கள் நேராய் அடிமண்ணிலிருந்து மேற்பரப்புவரை தொடர்ச்சியாய் இருப்பதால், அவைகளின் வழியாய் மண் ஈரமானது சீக்கிரத்தில் வெளிப்பட்டுப் போகிற தென்பதை நாமெல்லாரும் அறிவோம். ஆனுல் மேல்மண்ணைக் கிண்டிக் கிளறி புழுதியாக்கி வைத்துக்கொண்டால் இந்த மண்ணணுக்குழாய்கள் சிதைந்துபோய் அவற்றின் வழியாய் மண்ணீரம் ஆவியாய்ப் போவதும் வெகுவாய்க் குறைவுபடும்.

சருகு செத்தைகள் அப்புறப்படுத்தாமல் நிலத்தின் மேல்பரப்பில் கிடக்கிற ஒரு கொல்லைக்கும் இவைகள் அப்புறப்படுத்தப்பட்ட ஒரு கொல்லைக்கும் உள்ள வித்தியாசத்தினுலேயே மண்ணீரத்தின் பிரதானமும், அது போய்விடுவதால் உண்டாகும் பயனும் இன்னதென்று நன்கு விளங்கும். சருகுகள் அப்புறப்படுத்தப்படாத கொல்லையில் உள்ள மரங்கள் பச்சையாகவும் செழிப்பாயும் காணப்படும். பந்தோபஸ்து செய்யப்பட்ட காரணத்தினுல் இந்தக் கொல்லைகளில் தூற்றுக்காடு அடர்ந்து இலைகள் உதிர்ந்து நிலத்தை மூடிக் கொண்டிருப்பதால், சூரிய கிரணங்களும் காற்றும் மண்ணீரத்தை அபகரிக்காமல் காத்துக்கொள்ள ஏதுவாகிறது. மற்றொரு கொல்லையின் நிலைமையோ வேருயிருக்கிறது. அதில் முளைக்கும் சிறு குற்றுச் செடிகளை யெல்லாம் கொண்டி (Kondi) மாடுகள் மேய்ந்துவிடுகின்றன. மரங்களினின்றும் உதிர்ந்த சருகுகள் அப்புறப்பட்டுப்போயின. காற்று மண்ணின் மேல் வீசியடிக்கிறது. இதனுல் தரையின் மேற்பரப்புகெட்டியடைந்து காய்ந்துபோகிறது. மழை பெய்யும்போது இயற்கை அமைப்பின்படி மழைத் தண்ணீர் மண்ணுக்குள் இறங்கி உட்செல்லாமல் மேற்பரப்பில் வழிந்தோடிப்போகிறது. மரங்களிலிருந்து உதிரும் இலைகளும் சருகுகளும் அங்கங்கே கிடக்காமல் காற்றடித்துத் தள்ளி ஓடைகளிலும் பள்ளங்களிலும் போட்டுவிடுகிறது. இந்தக் காரணத்தினுல் அவ்விடங்களில் செடிகள் காய்ந்து மடிந்து போகின்றன.

இதே காரண காரியங்களை அநுசரித்து தண்ணீர் கிடைத்த காலத்தில் அதைப் பிடித்து வைத்துக்கொண்டு அந்த ஈரம் அனேக நாட்களுக்குத் தங்கியிருக்கும் விதமாய் நிலத்தைப் பண்படுத்திக்கொள்ள முயலவேண்டும். நிலத்துக்குள்ளிருக்கும் ஊற்றுத்தண்ணீரின் மேல் மட்டம் நிலத்தின் மேல்மட்டத்திலிருந்து அதிக ஆழத்தில் தங்கும்படி செய்யவேண்டும். அத்துடன் தொழு எருவைப்போன்ற மூலவர்க்கப் பொருள்களை நிலத்தில் அதிகமாய்ச் சேர்க்கவேண்டும். அல்லது பச்சிலைப் பயிர்களை வளர்த்து நிலத்தில் மடித்து உழவேண்டும். இப்படிச் செய்தால் மண்ணுனது ஒருவாறு கடற்பஞ்சுபோல் ஆகிறது. இப்படிச் செய்தபின் பயிர் உண்டானவுடனேயே நிலத்தின் ஈரம் ஆவியாய்ப் போகாமல் அடிக்கடி மேல்மண்ணை நன்ருய்க் கிளறிக்கொண்டிருக்கவேண்டும். இந்த விதமாகப் பயிர்களுக்குவேண்டியிருக்கும் காலம் வரைக்கும் மண்ணீரம் சேர்த்து வைக்கப்பட்டு காப்பாற்றப்படவேண்டும்.—கிருஷிகன்.

**Tanjore District Conference.**

தஞ்சை ஜில்லா கான்பரென்ஸ்.—சென்றமாஸம் 24-தேதி தஞ்சை ஜில்லா கான்பரென்ஸ் கூடிச் செய்த தீர்மானங்களில் பின் வருவனவற்றை 'சுதேசமித்திர'னிலிருந்து எடுத்து ப்ரசுரிக்கிறேம்.

நிலத்தீர்வை.

(1) சில நியமங்களின்மேல் இப்பொழுது நிலத்தீர்வை விதிக்கப்பட்டு குறிப்பிட்ட தவணையில் அத்தீர்வை மாற்றப்பட்டு வருகிறது. நாகரீகமடைந்த எல்லா தேசத்தார்களும் நிலத்தீர்வை விதிக்க சில நியமங்களை ஒப்புக்கொண்டு அவற்றின்படி நடக்கிருர்கள். இத்தேச நியமங்களும் அவைகளும் முரண்படுகின்றன. நாட்டுப் புறங்களிலுள்ள ஜனங்களின் பொருளாதார நிலைமைகளை வலுப்படுத்த வேண்டியதற்காக நிலத்தீர்வையை குறிப்பிட்ட தவணையில்

மாற்றும் வழக்கத்தை விட்டுவிட வேண்டியது. மற்ற வரிகளை விதிப்பது போலவே நிலத்தீர்வை விதிப்பதையும் செய்து, சட்டத்தால் மாத்திரம் தீர்வையை மாற்றும்படியா யிருக்கவேண்டும்.

(2) ஸர்வே கல்லுகளைநாட்டும்சம்பந்தமாய் தற்போதிருந்துவரும் ஒழுங்குகள் மிராசுதார்களுக்குப் பல கஷ்டங்களை யுண்டு பண்ணுவனவா யிருப்பதால், அவற்றை கவர்ன்மெண்ட் திருத்தி யமைக்க வேண்டும்.

(3) கால்வாய்களில் படியும் வண்டலை அவ்வப்போது எடுத்து கால்வாய்கள் தூர்ந்து போகாமல் பார்க்கும் வேலையைக்கவர்ன்மெண்ட் கைக்கொள்ள வேண்டும்.

(4) சென்னை லாண்ட் எங்க்ரோச்மெண்ட் ஆக்ட் பிறப்பிக்கப்படுவதற்கு 12 வருஷங்களுக்கு முன்னதாகவே எங்க்ரோச்மெண்ட் இருந்து வந்தால், அவ் விஷயத்தில் தொந்தரவு செய்யக்கூடாது.

(5) வஜாசெய்து கொடுக்கும்படி மனு வனுப்பிக் கொண்டாலன்றி வஜா செய்யப்பட மாட்டாதென்ற வழக்கத்தை அனுசரிக்கக் கூடாது.

(6) ஒவ்வொரு வருஷத்திலும் ஏப்ரல் மாதம் 30-ந்தேதிக்குள் எந்தக் கிராமத்தாராவது நீர்ப் பாய்ச்சலுக்குரிய கால்வாய்களைப் பழுதுபார்க்கவில்லையானால், கிராமப் பஞ்சாயத்து ஏற்படுகிற வரையில்குடிமராமத்து ஆக்டை ரெவினியூ ஆபீஸர் பிரயோகிக்கும்படிக்கு, மேற்கண்ட யோசனைகளுக்குத் தக்கவாறு மேற்சொன்ன ஆக்டில் அவசியமாய் வேண்டிய மாறுதல்களைச் செய்யவேண்டும்.

(7) விதைவிடும் குளங்கள் தீர்வைக்கு உட்படுத்தப்படக்கூடாது.

குடியேற்ற நாடுகளுக்குக் கூலியாட்கள் கொண்டு போகப்படுதல்.

(a) அந்நிய நாட்டுக்குப்போக விரும்பும் கூலியாட்கள், உடந்தைப்பத்திரம் எழுதிக் கொடுத்து அது தீராமலில்லை என்று அவர்களின் கிராமாதிகாரிகளிடமிருந்து நற்சாக்ஷிப்பத்திரம்பெற்று அதைப்ரொடக்டர் அல்லது வெளிதேசங்களுக்குப் போகும் கூலியாட்களைப் பதிவுசெய்யும் ஆபீஸரிடம் காண்பிக்க வேண்டுமென்று 1908-ம் வருஷத்திய 17-வது இந்திய எமிக்ரேஷன் ஆக்டில் சில ஒழுங்குகள் ஏற்படுத்தும்படி கவர்ன்மெண்டாரை இந்த கான்பரென்ஸ் கேட்டுக்கொள்கிறது.

(b) அந்நிய தேசங்களுக்குக் கூலியாட்களைச் சேர்ப்பதற்காக கங்காணிகள் கையாடும் முறைகள் ஆக்ஷேபிக்கத் தகுந்தனவா யிருப்பதால், அப்படிப் போகும் கூலியாட்களைப்பற்றி பரிசீலனை செய்வதற்காக, கிராமம், தாலூக்காக்கள்தோறும் சங்கங்கள் ஏற்பட வேண்டுமென்று இந்த கான்பரென்ஸ் அபிப்பிராயப்படுகிறது.

கல்வி.

கல்விவிஷயமாக அடியிற்கண்ட தீர்மானங்கள் செய்யப்பட்டன:—(a) ஆரம்பப் படிப்பை இலவசமாக ஜனங்கள் பெறும்படி செய்ய ஒரு ஏற்பாட்டைத் தேடிக்கொள்ள மறுபடியும் முயற்சிகள் செய்யப்படவேண்டியது அவசிய மென்று இந்தக் கான்பரென்ஸ் அபிப்பிராயப் படுகிறது. முனிஸிபல் ஸ்தலங்களிலாவது இலவச ஆரம்பப்படிப்பைக் கட்டாயப்படுத்தும்படி சட்டத்தை மாற்ற வேண்டுமென்று இந்தக் கான்பரென்ஸ் கவர்ன்மெண்டைக் கேட்டுக்கொள்ளுகிறது.

(b) தேச பாஷைகள் விஷயமாக சென்னை யூனிவர்ஸிட்டியார் சமீபத்தில் செய்த தீர்மானம் இந்தக் கான்பரென்ஸுக்கு வருத்தத்தைத்தருகிறது; ஆகையால் பல யூனிவர்ஸிட்டிப் பரீட்சைகளுக்கும் தேச பாஷைகளைக் கட்டாயப் படிப்பாகச் செய்ய வேண்டிய அவசியத்தை கவர்ன்மெண்டாருக்கும் ஸினேட் சபைக்கும் இந்தக் கான்பரென்ஸ் வற்புறுத்துகிறது.

(c) சமீபத்தில் எலிமெண்டரி ஸ்கூல் உபாத்தியாயர்களுக்குக் கொடுக்கப்படும் கிராண்டை உயர்த்தியிருப்பது போதாதென்று இந்தக் கான்பரென்ஸ் அபிப்பிராயப்பட்டு, அந்த கிராண்டை இன்னும் உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறது.

கிரிமினல் நீதி நிர்வாகம்.

(1) ஸெஷன்ஸ் கோர்ட்டுகளில் விசாரிக்கப்படும் கேஸ்கள், ஜூரிகளினாலேயே விசாரிக்கப்பட வேண்டியது அத்தியாவசியம். இன்னின்ன குற்றங்களை ஜூரிகளை வைத்துக் கொண்டு விசாரிப்பதென்றும், இன்னின்ன குற்றங்களை அஸெஸ்ஸர்களை வைத்துக்கொண்டு விசாரிப்பதென்றும் பாகுபாடு செய்திருப்பது அனுவசியம். ஆகவே அந்த வித்தியாச ஏற்பாடு ஒழிக்கப்பட வேண்டும்.

(2) ஸெஷன்ஸ் கோர்ட்டுகளால் விசாரிக்கப்பட வேண்டிய குற்றங்களின் ஜாப்தாவை, திருத்தியமைத்து ஜூரிகளைக் கொண்டு விசாரணை செய்யப்பட வேண்டிய வழிகளை விருத்தி செய்யவேண்டும்.

(3) கோர்ட்டு நடவடிக்கைகளை முற்றிலும் கவனித்துவர சக்தியுடையவர்களை மாத்திரமே, ஜூரர்களாயும் அஸெஸ்ஸர்களாயும் தெரிந்தெடுக்கவேண்டும்.

# REVIEW OF THE PRESS.

# பத்ரிகை ஆராய்ச்சி.

## Nature Study.

**இயற்கைப்பாடம்:**—தற்காலம் வித்யா இலாகாதார்கள் பள்ளிக்கூடங்களில் இயற்கைப்பாடம் கற்பிப்பதில் மிக்க கவனம் செலுத்திவருகிறார்கள். கொஞ்சகாலத்துக்குமுன் பொருட்பாடம் பள்ளிக்கூடங்களில் போதிக்கப்பட்டு வந்தது. இயற்கைப்பாடத்திற்கும் பொருட்பாடத்திற்கும் என்ன வித்யாஸம்? பிந்தியதைவிட முந்தியது எவ்விஷயத்தில் ச்லாக்கியம்? இயற்கைப்பாடத்தால் விளையும் நன்மைகள் எவை? இவ்விஷயங்களை ஆராய்ந்து விஸ்தாரமாய் நல்லாசாரியன் பத்ரிகையில் ஒரு நிருபர் ஒரு வ்யாஸமெழுதியிருக்கிறார்.

துணியைப்பற்றிச்சொல்லும் பாடம் பொருட்பாடம். துணி செய்ய உபயோகிக்கும் பருத்தியைப் பற்றிய பாடம் இயற்கைப்பாடம். பொருட்பாடத்தை முதல் முதல் உண்டாக்கினவர் பெஸ்டோலோஜி என்பவர். இதை இங்க்லாந்தில் அனுஸரித்தவர் டாக்டர் மேயோ. இவர் 1830-ஆம் வருஷத்தில் ஒரு பொருட்பாடப் புஸ்தகமும் வெளியிட்டாராம். இவர் காலத்தில் பிள்ளைகளுக்கு பார்க்க இயலாத பொருள்களைப்பற்றியும் பாடம்சொல்லி வந்தார்கள். பாடத்துக்கு உபகரணமாகப் படங்கள் உபயோகப்பட்டு வந்தன. பிறகு ஸர் ஜார்ஜ் ருக்கிவிக் என்பவர் படங்களுக்குப் பதிலாய் இயற்சைப்பொருளையே கொண்டுவந்து காட்டி போதித்து, பிள்ளைகளின் உற்றுப்பார்த்தலாகிய தன்மையை வ்ருத்திசெய்யவேண்டுமென்றார். இயற்கைப்பாடத்தால் அநேக அனுகூலங்களிருக்கின்றன. கூர்ந்து உற்றறிதல், விசாரித்தறிதல், திருத்தமாகயோசித்தல் ஆகிய குணங்கள் வ்ருத்தியாகின்றன. புஸ்தகங்களைப் படிப்பதற்கு ஆரம்பப்பாடமாக இருக்கிறது. இயற்கைப்பொருள்களின்மேல் பிள்ளைகளுக்கிருக்கும் ஆவலைத்தூண்டி, எதையும் சோதித்தறியவேண்டுமென்ற ஆசையை உண்டாக்குகிறது. கற்கப்போகும் சாஸ்த்ரங்களுக்கு அஸ்திவாரமாகவும் துணையாயுமிருக்கிறது. பிள்ளைகளே ஸ்வயமுயற்சியால் நூதன விஷயங்களைக்கண்டு பிடிக்க ஸாதனமாயிருக்கிறது. சுற்றிலுமுள்ள இயற்கை அமைப்புகளில் ப்ரிய முதிக்கிறது. விளையாட்டிலும் வேலையிலும் அறிவைப் புகட்டுகிறது. தேகத்திற்கு அப்யாஸம் கொடுத்து அவயவங்களை பலப்படுத்துகிறது. கண்ணுக்கழகு கண்ணோட்டம் என்பதை இயற்கைப்பாடம்தான் வற்புறுத்துகிறது. தம்முடைய அறிவின் புலன்களைப் பண்படுத்த இப்பாடத்தைவிட ச்லாக்யமான தொன்று வேறில்லை.

இயற்கைப்பாடம், விவேகத்தைப் பெருக்கவும் ஒழுக்கத்தை சீர்ப்படுத்திப் பிள்ளைகளை யோக்யர்களாகவும், உபயோகமானவர்களாகவும், எடுத்தகார்யங்களை விடாமுயற்சியுடன் செய்கிறவர்களாகவும் செய்யும் நோக்கத்தைக் கொண்டிருப்பதால் இதைக் கல்வியிலாகாதார்கள் பள்ளிக்கூடங்களில் கற்றுக்கொடுக்கக் கட்டாயப் படுத்துவது ச்லாகிக்கத்தக்கதே.

## Co-operative Societies.

**ஐக்ய நாணய ஸங்கங்கள்.**—ஸிலோனில் ஐக்ய நாணய ஸங்கங்களின் அபிவ்ருத்தியைப்பற்றி "இந்து சாதனம்" ஆராய்ச்சி செய்திருப்பதில், விவஸாய டிரெக்டரவர்களும் அவருக்குக் கீழுள்ள உத்யோகஸ்தர்களும் மிக்க ச்ரமம் எடுத்துக்கொண்டு ஊர் ஊராய்ப்போய் ஐக்ய நாணய ஸங்கங்களின் நன்மைகளைப்பற்றி ப்ரஸங்கங்கள் செய்தார்களென்றும், அதன் பலனாக தென் லங்கையில் நாலும், மட்டக்களப்பில் ஒன்றும், யாழ்ப்பாணத்தில் இரண்டும் ஆக ஆறு ஸங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றனவென்றும், சொல்கிறது. உத்யோகஸ்தர்களுக்கு நன்றியறிதலைத் தெரிவித்து அவர்களுக்கு மேலும் மேலும் உழைக்க உற்சாகத்தை ஊட்டி எழுதுகிறது. இந்த ஸந்தர்ப்பத்தில் அந்த பத்ரிகையானது லங்கை விவஸாயிகளின் ஏழைத்தனத்தையும் கஷ்டமான நிலைமையையும் கண்டு பரிதபித்து, அவர்களுக்கு ஐக்யநாணய ஸங்கங்களால் விளையக்கூடிய நன்மைகளை எடுத்துக் கூறுகிறது.

“ஐக்கியநாணய சங்கங்களால் எய்தற்பாலனவாகிய நன்மைகள் பல. நமது தேசத்திலே கிருஷித்தொழில் நடத்துவோருள் பலர் தங்கள் தொழிலை நடத்துவதற்குப் போதிய முதலில்லாத ஏழை ஜனங்களாயிருக்கின்றனர். இவர்கள் பெரும்பாலும் கடும்வட்டிக்கு அதாவது நூற்றுக்கு இருபது, இருபத்துநான்கு வீதம் பணம் வாங்கித் தொழில் நடத்தி ஈற்றில் பெரும் கடன்காரராகித் தங்கள் காணிகளை விற்றுக்

கடன் தீர்க்கவேண்டியவர்களா யிருக்கின்றனர். நமது தேசத்திலே புகையிலைச் செய்கை நடத்தும் ஏழைத் தோட்டக்காரர் தங்கள் தோட்டங்களுக்கு வேண்டிய பசளைக்கும் வேறு செலவிற்கும் பத்துக்கு இரண்டு வீத வட்டிக்குப் பணம் கடன் வாங்குகிறார்கள். 'புகையிலை விளைந்தபின் அதனை விற்றுப் பணம் தருகின்றோம், அல்லது முதலுக்கும் வட்டிக்கும் புகையிலை தருகின்றோ' மென்று சொல்லியே தங்கள் தோட்டங்கள் காணிகளை ஈடாகக் கொடுத்துப் பணம் வாங்குகிறார்கள். புகையிலைச் செய்கை எப்பொழுதும் நயப்படுகிறதில்லை. சில ஸமயங்களில் அச்செய்கை பழுதடைவது முண்டு. அப்படிப்பட்ட காலங்களில் கடன் பட்டவர்கள் கடன்காரருக்குப் பணமாவது புகையிலையாவது கொடுக்க இயலாது முதலையும் வட்டியையும் சேர்த்துத் திரும்பவும் ஈடெழுதிக் கொடுக்கிறார்கள். இங்ஙனமே தங்கள் காணி எவ்வளவுபெறுமோ அவ்வளவிற்கும் கடன் வாங்கி ஈற்றில் அதைவிற்றுக் கடன் தீர்க்கவேண்டியவராகின்றனர். ஐக்கிய நாணய சங்கங்கள் ஸ்தாபிக்கப்படுமாயின் மிகவும் சொற்ப வட்டிக்குப் பணம் வாங்க இவர்கள் இயன்றவர்களாவார்கள். இச்சங்கங்கள் ஐரோப்பா, அமெரிக்கா முதலிய விடங்களிலும் நமதயல் நாடாகிய இந்தியாவிலும் நடை பெறுகின்றன. இதனை ஊரிலுள்ள தக்க பிரபுக்களே தொடங்கி நடத்தவேண்டும். கடும் வட்டிக்குப் பணம் வாங்கிப் பெரும் கஷ்டப்படும் ஜனங்களுக்கு உதவி செய்தல் பெரும் புண்ணியமாகும். ஹெனறற் தொடையிற் கூடிய சபையில் மெஸ் லயினவர்கள் சொல்லியது போல நாம் நமக்காக மாத்திரமன்று பிறர்க்காகவும் ஜீவிக்கவேண்டும். நாம் புண்ணியஞ் செய்தற்குத் தூரப்போகவேண்டியதில்லை. நம்மைச் சூழ்ந்திருக்கும் ஜனங்களின் கஷ்டத்தை நீக்கியபின்பே நாம் பிறர்க்குச் சகாயம் செய்யப்போகவேண்டும். ஆகையால் நம்மூர்ப் பிரபுக்கள் ஆங்காங்கு ஐக்கிய சங்கங்களை யேற்படுத்தி ஏழைக் கமக்காரர்படும் கஷ்டத்தைத் தீர்ப்பார்களாக. ஐக்கிய நாணய சங்கங்களை ஸ்தாபிப்பவர்கள் தாம் அவற்றிலிடும் பணத்தால் நயப்படுவது மன்றிப் பிறர்க்குச் சகாயஞ் செய்தலாகிய புண்ணியத்தையும் பெறுவார்கள்''.

**Telugu and Tamil Women.**

தெலுங்கு ஸ்த்ரீகளும் தமிழ் ஸ்த்ரீகளும்.—தஞ்சை ஜில்லா கான்பரென்ஸ் இந்த வருஷம் சீர்காழியில் கூடினபொழுது, அதை யொட்டி நடந்த ஆசார சீர்திருத்தக் கான்பரென்ஸின் அக்ராசனத்தை சென்னையில் ப்ரைவேட் டாக்டராக விருக்கும் மிஸ்டர் ஏ. லக்ஷ்மிபதி காரு வகித்தார். இவர் தெலுங்கு ப்ராமணர். இவர் இரண்டொரு வருஷங்களுக்கு முன்பாக சென்னை ஹைகோர்ட்டில் ப்ரபல வக்கீலாக விருந்த ராஜா டி. ராமாராவின் பேத்தியை பெரிய மனுஷியான பிறகு அதாவது 19-வது வயதில் விவாகம் செய்துகொண்டார். ஆகையால் ஆசார சீர்திருத்த விஷயத்தில் டாக்டர் லக்ஷ்மிபதி வீண் பேச்சுப்பேசி காரியத்தில் பூஜ்யமாயிருப்பவர்களி லொருவரல்ல.

ஸ்த்ரீகளின் நிலைமை தேசத்தினுடைய நாகரீகத்தைப்பற்றிக் குறிக்கும் அடையாளங்களில் முக்யமானதென்று சொன்னார். கடந்த சென்ஸெஸ்படி பார்த்தால் தஞ்சை ஜில்லாவின் ஜனத்தொகையில் நூற்றுக்கு ஆணில் 21·49 பேரும் பெண்ணில் 1.38 பேரும் கல்விகற்றவர்களாயிருப்பது, பெண் கல்வியை நோக்கும் பொழுது, கல்வியில் முதன்மைப் பட்டதாயும், சென்னையிலுள்ள கல்விச்சாலைகளுக்குப் பெரும்பான்மையான வித்யார்த்திகளை அனுப்புவதாயுமுள்ள தஞ்சை ஜில்லா மற்றப் பல ஜில்லாக்களிலும் கீழ்ப்பட்டிருப்பது பற்றி விஸனித்தார். இந்த ஜில்லாவில் பெண்களுக் கென்ற ஒரு ஹைஸ்கூல் இல்லாதது பெருங்குறை யென்றார். தெலுங்கு ஜில்லாக்களில் ஸ்த்ரீகள் சில வருஷங்களாகத் தீவிரமாய் முற்பட்டுவருகிறார்களென்றும், தமிழ் ஜில்லாக்களில் அம்மாதிரி முயற்சியில்லாமலிருப்பது விஸனத்துக்குரியது என்றும் சொன்னார். தெலுங்கு ஸ்த்ரீகள் தங்கள் இனத்தாரின் ஸ்வதந்தரத்தை விசாலப்படுத்தி பொது நலச்சாரியங்களில் ஸஹாயம் செய்துவருகிறார்கள்.

சாஸ்த்ரக்கல்வியும் சரித்ரக்கல்வியும் பெருகும்படி பல ஸபைகள் தெலுங்கருள் தோன்றியிருக்கின்றன. அவற்றுள் விஞ்ஞான சந்த்ரிகாமண்டலி, ஆந்த்ர பாஷாபிவர்த்தினி ஸங்கம், ஆந்திர ப்ரசாரணி ஸங்கம், தெலுங்கு அகாடமி, ஆகியவை சில. தெலுங்கு ஜில்லாக்களில் பல பெரும்பட்டணங்களில் ஸ்த்ரீகளால் ஸ்தாபிதமாகி நடத்தப்படும் ஸங்கங்கள் இருக்கின்றன. இந்த ஸங்கங்களுக்கென்று தனிப்பட்ட புஸ்தகசாலையும் கட்டிடமும் இருப்பதோடு, வருஷந்தோறும் இவை ஸபைகூடி, ஸ்த்ரீகளைப்பற்றியக்ஷேம லாபங்களை இரண்டு மூன்றுநாள் ஆராய்ந்து முடிவு

செய்கின்றன. இந்த ஸபைகளில் இருபது முப்பது வரையில் வியாஸங்கள்படிக்கப்படுகின்றன. ஸாவித்ரி ஹிந்து ஸுந்தரி, என்ற இரண்டு மாதாந்தப் பத்திரிகைகள் ஸ்த்ரீகளால் நடத்தப்படுகின்றன. கவிகளும், நாடகங்களும், நவீனங்களும், கதைகளும் ஸ்த்ரீகளால் செய்யப்பட்டு மதிப்புற்று நலம் பயக்கின்றன. 'அபல சர்த்ர ரத்நமாலா' என்ற ஒரு புஸ்தகம் இந்த்ய ஸ்த்ரீகளுள் உயர்ந்தோர்களைப் பற்றிப் பேசுவதாய், தெலுங்குக் காவ்யங்களுள் ஒன்றாய் மதிக்கப்பட்டு பையன்கள் பாடப்புஸ்தகமாகவும் வழங்குகின்றது. நாடகங்களும் நடத்தப்படுகின்றன. நாடகங்களை எழுதுவோர்கள் விசேஷத் திறமையும் கீர்த்தியும் பெற்றவர்களா யிருக்கிறார்கள். நடிப்போர்களும் கேவலம் வ்யாபாரத்துக்காகவன்றி தேச நன்மைக்காக முன்வந்துழைக்கிறார்கள். ஒவ்வொரு பட்டணத்திலும் ஸ்திரமாய்க் கட்டப்பட்ட நாடகசாலைகள் இருக்கின்றன. ஸ்திதியிலும் படிப்பிலும் எவ்வளவு உயர்ந்தவராயிருந்தாலும், அவர் ஆணாயினும் பெண்ணாயினும் ஸரி, இந்நாடகத்தில் வந்திருந்து பார்த்துச் செல்கிறார்கள். இம்மாதிரி நாடக வழியாலும் ஸமூக ஒழுக்கமும்நடத்தையும் உயர்வடைகிறது. தெலுங்கு ஸ்த்ரீகள் இந்த முற்போக்கு ஸ்திதியில் இருக்க தமிழ் ஸ்த்ரீகள் ஒரே நிலையிலிருக்கக் காரணம் என்ன?

தமிழரிலும் சில ஸ்த்ரீகள் தெலுங்கு ஸகோதரிகளைப் போலத் தோன்றிக் கொண்டிருக்கிறார்களென்றாலும், இவர்களின் முயற்சி ஸ்வல்பமானதாயும் வலுவற்றதாயுமிருக்கிறது. சீர்காழியில் நடந்ததுபோல் வடக்கே ஒரு கான்பரென்ஸ் நடந்திருந்தால் ஸ்த்ரீகள் நூற்றுக்கணக்காய் வந்திருந்து நடவடிக்கைகளில் கலந்துகொண்டிருப்பார்கள். தெலுங்கு ஜில்லாக்களிலுள்ள தாஸிகள் ஒன்று கூடி தங்கள் ஈனமான தொழிலைவிட்டு விடவும், குல ஸ்த்ரீகள்போல் விவாகம் செய்து கொண்டு வாழவும், கவர்ன்மெண்டை வேண்டிக்கொண்டு விண்ணப்பம் செய்து கொண்டிருக்கிறார்கள். தமிழ் ஜில்லா தாஸிகளுக்கு இந்த விதமான நல்ல உணர்ச்சி எப்பொழுது உண்டாகுமோ?

சுதேசமித்திரன் பத்திரிகையானது இந்நிலைமைக்குக் காரணத்தை ஆராய்ந்து பின்வருமாறு சொல்கிறது.

"தெலுங்கு ஸ்த்ரீகள் சுதந்தரமும் தைர்யமும் உள்ளவர்கள்; புருஷருக்குக் கீழ்ப்படிந்து அவர்கள் அடிமைகளாகவும் வீட்டையே காக்கிறவர்களாகவும் இருப்பவர்களல்ல. இந்த காரணத்தால், அவர்கள் தங்கள் இஷ்டப்படி படிப்பில் தேர்ச்சி பெற்று, பொது விஷயங்களில் அக்கரை பாராட்டக் கூடியவர்களா யிருக்கிறார்கள். தமிழ் ஸ்த்ரீகளோ, பயந்தவர்களாயும் வீட்டை விட்டு வெளியில் சஞ்சரிக்க தைரியமில்லாதவர்களாயும் இருக்கிறார்கள். தமிழ் ஜில்லாக்களில் புருஷர் சிலர் தங்கள் ஸ்த்ரீகளை வெளியிற் கொண்டு வந்து ஆங்கிலேய ஸ்த்ரீ புருஷர்களுடன் கலந்துபேச வழக்கப்படுத்துகிறார்கள். இதனால் ஸ்த்ரீகளுக்குப் பகட்டான நவீன நாகரிக உணர்ச்சி அதிகமாகிறதேயல்லாமல் படிப்பும் ஒழுக்கமும் அதிகமாவதில்லை. தமிழ் தேசத்தில் புருஷர் கல்வியில் எவ்வளவு தீவிரமாய் முற்பட்டு வந்தாலும், ஸ்த்ரீகள் மொத்தமாய் பழையபடி அறியாத நிலைமையிலேயே இருக்கிறார்கள். ஸ்த்ரீகளின் ஸ்வாதீனத்தையும் தைர்யத்தையும் புருஷர் உற்சாகப்படுத்த வேண்டும். பொதுக் கூட்டங்கள் நடக்கும்போது புருஷர் தங்கள் ஸ்த்ரீகளையும் கூட்டிக்கொண்டு போக வேண்டும். கோவில் குளங்கள் முதலிய பகிரங்க ஸ்தலங்களில் ஸ்த்ரீகள் பல மாதிரியான புருஷா கூட்டத்தில் போக இஷ்டமுள்ளவர்களாயிருக்க, பொதுக் கூட்டங்களில் ஸ்த்ரீகளுக்கென்று தனியான வசதிகள் செய்யப்பட்டாலும் அந்தக் கூட்டங்களுக்கு அவர்கள் போவதில்லை. தெலுங்கு தேசத்தைப்போல தமிழ் நாட்டில் ஸ்த்ரீகள் அடங்கிய சபைகள் அங்கங்கு ஸ்தாபிக்கப்பட வேண்டும். தஞ்சாவூர், மதுரை, கோயமுத்தூர் முதலிய ஜில்லாக்களில் ஸ்த்ரீகளுக்கென்று ஹைஸ்கூல்கள் ஸ்தாபிக்கப்படவேண்டும். இவைகளெல்லாம் காலக்கிரமத்தில் உண்டாகுமென்பதில் சந்தேகமில்லை. ஆனாலும் தமிழ் ஸ்த்ரீகளின் முன்னேற்றம் மெதுவாகவே இருக்கிறதென்று நாம் ஒப்புக்கொள்ளவேண்டும். புருஷர்களின் சம்மதமும் ஒத்தாசையும் இருந்தால் இந்த முன்னேற்றம் சிறிது துரிதமாய் நேரிடுமென்று நம்புகிறோம்."

## Management of Banks.

பாங்கிகளின் நிர்வாகம்.—பாங்கிகளின் நிர்வாகத்தைப்பற்றி 'சுதேசமித்திரன்' பின்வருமாறு எழுதுகிறது:—ஒரு பாங்கியின் பங்குக்காரர்கள் அது ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஸ்தலத்துக்கு எவ்வளவு அருகில் இருக்கிறார்களோ, அவ்வளவு நல்ல பலன் உண்டாகும். ஏனெனில் பங்குக்காரர்கள் மீட்டிங்குகள் நடக்கும்போது அவைகளுக்குப் போகக் கூடியவர்களா

யிருப்பார்கள்; பாங்கிகளின் நடவடிக்கைகளைப் பற்றி கவனிக்கவும் வல்லவர்களாயிருப்பார்கள். முக்யமாய் கடன் கொடுப்பதையே நோக்கமாகக் கொண்ட பாங்கிகளை நடத்துவதில் விசேஷ கஷ்டமில்லை. அர்பத்னட் கம்பெனியைப் போல பணம் போடுகிறவர்களுடைய பணத்தை வாங்கி, கண்டபடி வ்யாபாரம் செய்வதால் மட்டும் ஆபத்து நேரிடும். ஸ்தாவர ஸொத்துக்களின்பேரில் கடன் கொடுப்பதாயிருந்தாலும் வ்யாஜ்யம் வழக்குகள் நேரிட்டு ஆபத்துண்டாகக் கூடும். நபர் ஜாமீன்பேரில் கடன் கொடுக்கும் பாங்கி அநேகமாய் நஷ்டமில்லாமல் நடைபெறும். டிரெக்டர்கள் பாங்கி விஷயங்களை முற்றிலும் கவனக்குறைவானாலும் திறமையின்மையாலும் அசட்டை செய்வதால் மட்டும் பாங்கி நிறைவேறாது. அல்லது பங்குக்காரர்கள் டிரெக்டர்கள் செய்வதை அப்போதப்போது மேல்பார்வை பார்த்து பஹிரங்கப்படுத்தாமலிருந்தால் அப்போதும் ஆபத்துநேரிடும்.

**Income-tax.**

வருமானவரி.—பர்மா வருமான வரியைப்பற்றிய கவர்ன்மெண்ட் ரிபோர்ட்டை சுதேச பரிபாலினிப் பத்ரிகையானது, ஆராய்ச்சி செய்து வருஷவாரி வருமான வரியால் கவர்ன்மெண்டுக்கு அதிகமாக லாபம் வருகிறதென்று கூறி, 1909-1910, 1910-11, 1911-12, 1912-13 ௵திய கணக்குகளை உதாரணமாகக் காட்டுகிறது. இந்த ஸந்தர்ப்பத்தில் வருமான வரி விதிக்கும் விஷயத்தில் இங்கிலண்டிலும் இந்தியாவிலும் அனுஸரிக்கும் முறைகளின் வித்யாஸங்களை எடுத்துக் கூறுவது கவனிக்கத்தக்கது.

பர்மாவில் இந்த வரி விதிக்க அனுசரிக்கப்படும் முறைகள் வியக்கத்தக்கனவாயிருக்கின்றன. இங்கிலாந்தில் வருஷ மொன்றுக்கு 160 பவுன் அதாவது 2,400 ரூ-வருமானமுள்ள ஒருவனுக்கு வருமான வரி கிடையாது. அதற்கு மேற்பட்ட வருமானவுள்ளவர்களுக்கு வரியுண்டு. இந்தியாவிலோ அப்படியல்ல. வருஷம் 1000ரூ-வருமானத்துக்கு மேலுள்ளவர்களுக்கு வரியுண்டு.

இந்த வரி நிர்ணயிக்கும் முறையில் குறிப்பிடத்தக்க விஷயம். "(வரும்படி) 1000 ரூ-க்கு மேற்படுமானால், அதிகமாயிருக்கும் தொகைக்கு (தொகை)மாத்ரம் வரிவாங்குவதைவிட்டு 1000-த்திற்கும் சேர்த்து வாங்குகிறார்கள்."

கவர்ன்மெண்டார் இந்த வித்யாஸத்தையும், இந்தியர்கள் மீது ஏற்கனவே சுமத்தப்பட்டிருக்கும் வரிகளையும், உத்தேசித்து சீர் திருத்தங்கள் செய்ய வேண்டுமென்று அந்தப் பத்ரிகை வற்புறுத்துகிறது.

"வருமான சம்பந்தமான வரி விதித்தல், வசூல் செய்தல் முதலிய வேலைகளில் அமர்ந்திருக்கும் உத்தியோகஸ்தர்கள்பொது ஜனங்களின் லாபலோபங்களை உள்ளபடி விசாரித்து அறிந்துக்கொள்வது அருமை. வரி விதித்தலும், விதிக்கப்பட்ட வரித்தொகையானது சரியானதோ அல்லது அதிகமானதோ அதை ஆராய்ந்து நீதி செலுத்தலும் ஒரே அதிகாரியினிடமிருப்பதாலும் வரிசெலுத்துவோர் பலதடவைகளில் விதிக்கப்பட்ட வரியை செலுத்துவோராயிருக்கின்றனர். கிராமாந்தரங்களிலும் உள் நாடுகளிலும் பெருமைக்காக வருமான வரி செலுத்துவோராகப் பலபேர் இருக்கலாம். விதிக்கப்பட்ட வரியை ஆக்ஷேபித்துவழக்குச்செய்வதில் நேரிடக்கூடிய காலப்போக்கையும், நஷ்டங்களையும் உத்தேசித்து வாய்பேசாமல் விதித்த வரியைச் செலுத்துவோர் பலருண்டு. இன்னுஞ் சிலர் தங்களுக்கு வருஷகாலத்தில் நஷ்டம் நேரிட்டிருந்தபோதிலும் கோர்ட்டு மூலமாகத் தம் நிலைமையை வெளியிடுவதற்கு இயலாதவர்களாய் விதிக்கப்பட்டவரியைக் கட்டிவிடுவதுமுண்டு. ஆகவே, வருமான வரி செலுத்துவோரின் எண்ணிக்கையைக் கொண்டு வ்யாபார வர்த்தகங்களின் நிலைமையையாவது, ஜனங்களின் உண்மையான வரும்படி அளவையாவது நிதானித் தறிதல் முற்றிலுஞ் சாத்தியமல்ல. வரிவிதித்தல், வசூலித்தல், நீதி செலுத்தல் ஆகிய எல்லா அதிகாரங்களும் ஒரே இலாக்காவைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்களால் வகிக்கப்படுவதை யொழித்து விதிக்கப் பட்டவரியானது விவாகாரத்திற்கு வரும்போது, அதனை விசாரித்து முடிவு சொல்லும் பொறுப்பு நீதி செலுத்தும் அதிகாரிகள் வசம் ஒப்பிவிக்கப்படுமானால் அப்போது வருமான இலாக்காவின் நிருவாக அறிக்கையானது இப்போதைவிடப் பல அம்சங்களில் வித்தியாசப் பட்டிருக்கு மென்பதில் தடையில்லை."

# BOYS' SECTION.
## பையன்கள் பகுதி.

**Devotion to Duty.**

கடமையைச் செய்வதில் ச்ரத்தை.—அமெரிக்காவிலுள்ள பத்ரிகா சிரியர்கள் தங்கள் கடமையைச் செய்வதில் ரொம்ப ச்ரத்தையாயிருப்பவர்கள். ஸமீபத்தில் அமெரிக்காவிலுள்ள ஒரு ரெயில்வே ஸ்டேஷனில் இரண்டு வண்டித்தொடர்கள் மோதிக்கொண்டு வண்டிகள் உடைந்து அநேகம் பேர் காயமடைந்தும், இறந்தும் போனார்கள். அப்படி இறந்தவர்களையும் காயமடைந்தவர்களையும் ஜனங்கள் வெளியே எடுக்கும்போது அங்கே காயமடைந்து கிடந்த ஒரு பத்ரிகை ரிபோர்டர், அவர்களைப்பார்த்து, "ஐயா தயவு செய்து டெலிபோனில் எனது பத்ரிகைக்காரர்களைக் கூப்பிடுங்கள். இங்கே ஒரு பெரிய விஷயம் ஸம்பவித்திருக்கிறது. நானே பத்ரிகைக்கு எழுதிவிடலாமென்றால் என்னால் முடியாமலிருக்கிறது. தயவு செய்து டெலிபோனில் கூப்பிடுங்கள்" என்று சொல்லி உடனே இறந்து போய்விட்டார். இவர் தமக்கு ஆபத்து நேர்ந்தபோதும் தமது தர்மத்தைச் செய்வதில் எவ்வளவு விருப்பமும் ச்ரத்தையும் காட்டினார், பாருங்கள்! "அறஞ்செயவிரும்பு:" "தர்மம் சர" என்னும் வாக்யங்களை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்.

**Advice to Boys.**

சிறுவர்களுக்கு புத்திமதி.—1. அயலாருக்கு நேரிட்ட துன்பத்தைக் கண்டு நீ மகிழாதே.

2. உன்னால் செய்ய முடியாத காரியத்தில் நீ ப்ரமாணிக்கம் செய்யாதே.

3. ப்ரதி யுபகாரத்தை உத்தேசித்து நீ பிறர்க்கு வெகுமதி யளிக்காதே.

4. குறித்த நேரத்தில் உன் வேலையைச் செய்ய நீ தவறாதே.

5. பிறர்க்கு நீ தானமாக கொடுக்கும் பொருள் உனக்கு ப்ரயோசனமில்லை யென்று சொல்லிவிட்டுக் கொடுக்காதே.

6. நீ செய்திருக்கிற தர்மங்களைப் பற்றியும், அயலார்க்கு நீ செய்திருக்கும் உபகாரங்களைப் பற்றியும் ஒருவரிடமும் சொல்லாதே.

**Leaning Tower of Pisa.**

பைஸா நகரத்து சாய்ந்த கோபுரம்.—இடலி தேசத்திலுள்ள பைஸா என்னும் பட்டணத்தில் ஒரு சாய்ந்த கோபுரம் இருக்கிறது. அது வெள்ளை ஸலவைக் கல்லால் கட்டப்பட்டது. வட்டமான அமைப்புள்ளது 179 அடி உயரமுள்ளது. இதன் அஸ்திவாரம் 10 அடி ஆழந்தானும். இதைக்கட்டிக் கொண்டிருந்த போது அஸ்திவாரம் இடிந்துபோய் ஒரு பக்கம் சாய்ந்துவிட்டது. அது முதல் இதற்கு சாய்ந்த கோபுரம் என்று பெயரிட்டிருக்கிறார்கள். இது முதலில் 13 அடி சாய்ந்திருந்தது. 1829-ம் வருஷத்தில் $15\frac{1}{2}$ அடி சாய்ந்திருந்தது. மூன்று வருஷத்துக்கு முன்னால் அளந்து பார்த்தபோது இது $16\frac{1}{2}$ அடி சாய்ந்திருந்தாம். இது ஒரு ஸமயம் கீழேசாய்ந்துவிடுமோ என்று பயப்படுகிறார்கள். அதன் பக்கத்தில் ஓடும் ஆர்னோ நதியின் ஜலம் ஊறிவந்து அஸ்திவாரத்தைக் கெடுத்துவிடுகிற தென்றெண்ணி அந்த கோபுரத்தின் பக்கம் பூமியைத் தோண்டி ஜலத்தை வடியச்செய்து அஸ்திவாரத்தையும் பலப்படுத்தப் போகிறார்களாம். இந்த கோபுரம் ரொம்ப லக்ஷணமுள்ளதாகையால் இதைப் பற்றி ரொம்பக் கவலை எடுத்துக்கொள்ளுகிறார்கள்.

**Rupees into Pounds Sterling.**

ரூபாயைப் பவுனுக்க:—ரூபாயின் தொகையைப் பவுனுகமாற்ற ஸுலபமான வழியொன்று இருக்கிறது. கொடுத்திருக்கும் தொகையை இரண்டால் பெருக்கி வந்த தொகையின் கடைசி எண்ணுக்கு முன்னால் ஒரு டெஸிமல் புள்ளியிட்டு அதை மூன்றால் வகுத்து விடவேண்டும். வரும் விடை பவுன், டெஸிமல் (தசாம்சம்) ஆக இருக்கும்.

உதாரணம்,

ரூ $90 \times 2 = 18.0 = 18{\cdot}0 \div 3 = 6$ பவுன்.

ரூ $156 \times 2 = 31.2 = 31.2 \div 3 = 10.4$ பவுன்.

**Pounds Sterling into Rupees.**

பவுனை ரூபாயாக மாற்ற:—கொடுக்கப்பட்ட எண்ணின் கடைசியில் ஒரு பூஜ்யம் சேர்த்து வந்ததொகையின் பாதியை அதோடு கூட்ட ரூபாயாகும்.

60 பவுன்; $600 + 300 = 900$ ரூ.

**Ages of Some Animals.**

சில ஜீவராசிகளின் ஆயுள் காலம்:—திமிங்கலம் 1000 வயது உயிரோடிருக்குமாம். மற்ற மிருகங்களெல்லாம் இதற்கடுத்தபடி தான். யானையானது 400

வருஷமிருக்கும். மஹா அலக்ஸாந்தர் புரூரவசக்ரவர்த்தியை ஜயித்தபின் அவருடைய யானையை க்ரீஸ் தேசத்துக்குக் கூட்டிக்கொண்டுபோனாராம். அது 350 வருஷமிருந்ததாக சொல்லுகிறார்கள். ஒட்டைகளின் ஆயுள் 100 வயதாம். கலைமான்களும் நீண்டகாலம் உயிரோடிருக்கின்றன. சிங்கத்தின் வயது 70. குதிரைகளின் வயது 60. இருந்தாலும் 20-லிருந்து 30-க்குள் இறந்து போகின்றன. பன்றிக்கு ஆயுள் 24 வயது. கரடி 20 வருஷமிருக்கிறது அரிது. அப்படித்தான்ஒனயும். நரியின் வயது 14-லிருந்து 16 வரையில். முயலுக்கும், அணிலுக்கும் 7, 8 வயது. கழுகு, அண்டங்காக்கை 100 வயது. ஆமை 107. அன்ன பக்ஷி 300.

## Cows with Five Legs.

ஐந்துகால்கள் உள்ள பசுக்கள்:—சில பிச்சைக்காரர்கள் தெருக்களில் மாடுகளை யோட்டிக்கொண்டு வந்து அந்த மாடுகளுக்கு 5-கால்கள் இருக்கின்றனவென்றும் இரண்டு வால்கள் இருக்கின்றனவென்றும் காட்டுகிறார்களல்லவா? அநேகர் இந்த நிலைமை மாடுகளுக்கு இயற்கையாகப் பிறக்கும் போதே உண்டாயிற்றென்று நினைக்கிறார்கள். மாடுகளுக்கு இயற்கையாக ஒரு காலும், வாலும் அதிகமாக உண்டாகவில்லை யென்றும், இவைகள் மாட்டின் தேகத்தில் ஒட்டுக்கட்டப்படுகின்றன வென்றும் சொல்லப்படுகிறது. இந்த மாடுகளைக் கொண்டுவந்து காட்டி ஜனங்களை ஏமாற்றிக் காசுபறிப்பவர்கள் ஈவு இரக்கமில்லாத கல்நெஞ்சர்களாவார்கள். இவர்கள் உயிருள்ள கன்றுக்குட்டியின் கால்களையும், விரல்களையும் வெட்டி யெடுத்து, மாட்டின் சதையில் வைத்துத் ததைத்தோ அல்லது ஒட்டுக்கட்டியோ விடுகிறார்கள். சதையோடு சதை ஒட்டிக்கொண்டு வளர்ந்து, இயற்கையாகவே இன்னொருகாலும், வாலும் மாட்டுக்கு பிறவிமுதற்கொண்டே இருப்பதுபோல் ஆய்விடுகின்றனவாம். இப்படி ஒட்டுக்கட்டுவதினால் பல கன்றுக்குட்டிகள் கொடூரமாய்க் கொலை செய்யப்படுவதோடு, மாடுகளும் ரொம்பக்கடுமையானதுன்பத்தை யடைகின்றன. இந்த விஷயங்கள் தெரியாமல் பையன்களும் பெண்களும், இன்னம் பெரியவர்களும் அந்தமாடுகளைக்கண்டு பரிதாபப்பட்டு, அப்படிக் கொடுமை செய்தவனை அலக்ஷியம் செய்ய வேண்டியிருக்க, அவனுக்கு பிச்சை முதலியவை போட்டு அவனை இன்னம் இப்படிப்பட்ட கார்யங்களைச் செய்யும்படி தூண்டுகிறவர்களாகிறார்கள். இவ்விஷயங்கள் தெரிந்த சிறுவர்கள், சிறுமிகள் அப்படிப்பட்ட மாடு கொண்டு வருபவர்களுக்குப்போடும் பிச்சையை குருடு, செவிடு, நொண்டி, வ்யாதிஸ்தர்களான பிச்சைக்காரர்களுக்குப் போட வேண்டும். "பாத்திர மறிந்து பிச்சையிடு".

## A Modern Sindbad.

ஒரு நவீனஸிந்துபாத்.—அரபிக்கதையில் ஸிந்துபாத் என்னும் மாலுமியைப்பற்றி வாசித்திராத பையன்கள் அநேகமாய் இரார்கள். ஸிந்துபாத் அநேகந் தடவை கடலில் ப்ரயாணம் செய்து ஒவ்வொரு தடவையிலும் ஆபத்துக்குள்ளாகிக் கஷ்டப்பட்டான். அவன் ஒரு யாத்ரையில் கப்பல் உடைந்துபோய், ஒரு மரத்துண்டைப் பிடித்துக்கொண்டு ஜலத்தில் தததளித்துக்கொண்டிருந்து, கடைசியில்அவ்வழியில் போன ஒரு கப்பலால் காப்பாற்றப்பட்டான். அவனைப்போலவே மலேயாதேசத்தான் ஒருவன் ஸமீபத்தில் பி. அண்ட் ஓ. கப்பல் ஒன்றால் காப்பாற்றப்பட்டான். ஷை கப்பல் சிங்கப்பூருக்கு வடமேற்கே 130 மைலுக்கப்பால் உள்ள மலாக்கா ஜலஸந்தியில் போய்க்கொண்டிருக்கையில், கப்பலில் உள்ளவர்கள் ஸமுத்ரத்தில் ஏதோ ஒன்று மிதந்து கொண்டிருப்பதைக் கண்டார்கள். உடனே கப்பலைஅதன் பக்கம் திருப்பிச்செலுத்தினார்கள். கப்பல் கிட்டவரவே ஜலத்தில் ஒரு மரத்தின் அடிப்பாகத்தின்மேல் உட்கார்ந்து கொண்டிருந்த ஒரு மலேயனைக்கண்டார்கள். அவன் தனது கால் சட்டைகளைக் கழற்றி கப்பலில் உள்ளவர்கள் தன்னைப்பார்க்கும்படி அதை உயர வீசிக்கொண்டிருந்தான். கப்பல் தலைவர் அவனைக் கப்பலில் ஏற்றிக்கொண்டார். அவன் மிகவும் களைத்துச் சளைத்துப்போயிருந்தான். அவனுக்கு ஆகாராதிகள் கொடுத்து உதவினார்கள். அவன் ஆபத்துக்குள்ளான விதத்தை பின் வருமாறு கப்பலில் உள்ளவர்களுக்குத் தெரிவித்தான். அவனும் இன்னம் நாலு பேருமாக ஸமுத்ரத்தில் ஒரு சிறிய படகில் ஏறிச் சென்றார்களாம். சிறிது தூரம் சென்ற உடன் காற்று மும்முரமாய் வீசவே அவர்கள் ஏறியிருந்த படகு கவிழ்ந்துவிட்டது. அவர்கள் ஐவரும ஜலத்தில் சிறிது நேரம் தத்தளித்துக் கடைசியல அருகில் மிதந்து வந்த ஒரு மரத்துண்டைப் பிடித்துக்கொண்டு ஏதாவது கப்பல் அந்தவழியாய்ச் செல்லுமா என்று பார்த்துக்கொண்டிருந்தார்கள். இப்படிச சிலநாள் ஆகாரம் தண்ணீர் இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்கள். சில கப்பல்கள் அவ்வழியாய்ப் போயும அவர்களை கவனிக்கவில்லையாம். பிறகு அவர்களில் நால்வர் மிகவும் களைத்துபோய் ஒவ்வொருவராய் ஸமுத்ரத்துக்கிரையானார்களாம். இவன் மாத்ரமே ஷை கப்பலால் தெய்வாதீனமாய் காப்பாற்றபட்டுத் தப்பிப் பிழைத்தான் என்று சொன்னான். கப்பல தலைவர் அவனை பம்பாய்க்குக் கூட்டிக்கொண்டு வந்தார்.

# LADIES' SECTION.
## ஸ்த்ரீகள் பகுதி.

### An Indian Lady Sandow.

அதிபலசாலியான ஒரு ஹிந்து ஸ்த்ரீ.—பல்லாரியில் மிஸ் தாரா என்னும் ஒரு ஹிந்து ஸ்த்ரீ, ஒருவாரம்போல் பலசாலிகள் செய்யும் வித்தைகளைச் செய்து காட்டினளாம்.

### A Girl Musician.

ஒரு ஸங்கீத விற்பனச்சிறுமி.—தஞ்சாவூர் மிஸ்டர் எல். ரகுபதிராவ் அவர்களுக்கு கமலாபாய் என்ற 11 வயதுள்ள பெண்ணிருக்கிருள். இவள் ஸங்கீதத்தில் நல்ல தேற்சி பெற்றிருப்பதாகவும், இதற்காக மைஸூர் மஹாராஜா அவர்கள் அந்தப் பெண்ணுச்கு 2000 ரூபாயும் பட்டாடைகளும் சன்மானம் கொடுத்ததாகவும் ப்ரஸ்தாபம்.

### A Gift of 30 Lakhs.

30 லக்ஷம் ரூபாய் நன்கோடை.—ஸ்ரீமான் டாடா என்பவர் பார்ஸி வ்யாபாரி. பங்களூரில் இந்தியன் இன்ஸ்டிடுட் ஆப் ஸையன்ஸ் என்ற சாஸ்த்ர வித்யாசாலையை ஸ்தாபித்த ஜே. என். டாடாவின் புத்ரர். இவர் தர்மப்ரபு. இவர் பெண்கல்வி அபிவ்ருத்திக்காக 30 லக்ஷம் ரூபாய் கொடுக்கப்போவதாகச்சொல்லி அதைச் செலவழிக்க ஸ்கீம் ஒன்றைத் தயாரித்து இந்தியா ஸெக்ரடரிக்கு அனுப்பி யிருக்கிருராம்.

### Training for Hindu Girls.

ஹிந்துப்பெண்களின் பயிற்சி.—நமது பெண்களுக்கு (1) தாய் பாஷையை பிழையில்லாமல் எழுதப் பட்டிக்கத் தெரியவேண்டும். (அதாவது) ராமாயணம், மஹாபாரதம் முதலான வசனகாவ்யங்களையும், ஸாமான்ய நீதி காவ்யங்களையும் படிக்கும் திறமை வரவேண்டும். (2) கணிதத்தில் கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல், கடையில் வாங்கும் ஸாமான்களின் எடை விலை இவைகளை கணக்கிடும் முறை இவைகள் தெரியவேண்டும். (3) பூத, பௌதிக பஞ்சீகரணமும், ஸுகாதாரமும் தெரிந்திருக்கவேண்டும். (4) குடும்பங்களுக்கு அவச்யமான தான்யங்கள், வஸ்த்ரங்கள், பாத்ரங்கள் முதலியவைகளை நன்ருகக் காப்பாற்றிவரும் விதங்களையும், செலவுக்குத் தக்கபடி ஸௌகர்யங்களைச் செய்துகொள்ளும் முறைகளையும் போதிக்கவேண்டும். (5) ஸ்வதேச வ்யாபார ஸூக்ஷ்மங்களையும், பெண்கள் அதிக சரீர ச்ரமமின்றிக்கைத்தொழில்களால் வஸ்துக்களைச் செய்து முடிகும் உபயோசங்களையும் கற்பிக்கவேண்டும். (6) சமையல் செய்யும் விதமும், பக்ஷ்யங்கள் செய்யும் விதமும், அனுபவமாகக் கற்றுக் கொடுக்கவேண்டும். (7) மக்களைக் காப்பாற்றும் விதமும், ஸுலபமான வைத்யமும் தெரியவேண்டும். (8) பந்துமித்திரர்களிடத்து நடந்துகொள்ளவேண்டிய விதங்களையும், பொதுவில் ஹிந்துக்களாகிய நமது அனுஷ்டானத்திற்கு உபயோகமான மத தர்மங்களையும், கடவுளை, கர்ம பக்தி ஞானங்களால் வழிப்படும் மார்க்கங்களையும் போதிக்கவேண்டும். (9) பண்டிகை முதலான சுபகாலங்களில் கொண்டாடப்படவேண்டிய கார்யங்களின் விதங்களையும் அவை சம்பந்தமாய் அனுஷ்டிக்கவேண்டிய ஆசாரங்களையும் பாட்டு முதலான விஷயங்களையும் அனுபவத்துடன் போதித்து வரவேண்டும்.—பெண் கல்வி.

### New Marriage Law.

புதிய விவாகச் சட்டம்.—அமெரிக்கா யுனைடட் ஸ்டேவின் மாகாணங்களில் பென்ஸில் வேனியா ஒன்று. இங்கே விவாகத்தைப்பற்றிய சட்டம் ஒன்று புதிதாய் ஸமீபத்தில் செய்யப் பட்டிருக்கிறது. வதூவரர்கள் கல்யாணம் செய்துகொள்ள லைஸென்ஸ் வாங்குவதற்குமுன் 48 கேள்விகளுச்குப் பதில் சொல்லித் தீரவேண்டும். கல்யாணம் செய்துகொள்ள வருகிறவர்கள் பைத்யச்காரர்களாயாவது சித்த ப்ரமையுள்ளவர்களாயாவது காக்காய்வலிப்புடையவர்களாயாவது, லாகிரி வஸ்துக்களை உபயோகிக்கிறவர்களாயாவது இருந்தால் லைஸென்ஸ் கொடுக்கப்படமாட்டாது. மேலும் கடந்த 5 வருஷங்களுக்குள் அவர்கள் பைத்யக்கார ஆஸ்பத்ரியிலாவது, வொர்க் அவுஸிலாவது இருந்தவர்களாயு மிருக்கக்கூடாது. மாப்பிள்ளைகளாவோர் ஸம்ஸாரத்தை நிர்வகிக்க சக்தியுள்ளவர்களென்று சொல்லவேண்டும். இப்படிக் கல்யாண விஷயத்தில் சட்டம் ஏற்பட்டிருப்பதனுலே கல்யாணத்துக்குத் தகுதியில்லாதவர்களின் ஸங்க்யை தெரிய வழியேற்பட்டது. இந்த சட்டத்தால் நோயாளிகள், குடும்பத்தைக் காப்பாற்ற முடியாதவர்கள் முதலானவர்கள் அனுவச்யமாய்த் தங்களையும் பிறரையும் வருத்தப் படுத்துவது குறையும்.

## Our Queen's Clothes.

நமது ராணியின் உடுப்புகள்.—மேரிசக்ரவர்த்தினியார் தமது உடுப்புகள் விஷயத்தில், தம்முடையை மாமியார் அதாவது அலெக்ஸாண்ட்ரா ராணியாரைப்போல் அவ்வளவு தாராளமாய்ச்செலவழிக்கிறதில்லையாம். இதனால் அவர் எப்போதும் ராணியினுடைய அந்தஸ்துக்குத்தகுந்த உடுப்புத் தரித்துக்கொள்ளுகிறதில்லை என்று எண்ணக்கூடாது. அவர் தமது உடைகள் அதிகநாள் தாங்கும்படி செய்து கொள்ளுகிறார். மேலும், உடுப்புகளுக்கு பில்லுகள் (விலைச்சீட்டுகள்) வந்தால் அவைகளைப் பிறர் பார்க்க விடாமல் தாமும், தமது உடுப்பு அதிகாரியுமாக அவைகள் ஸரியாக இருக்கின்றனவா என்று பார்ப்பார். சக்ரவர்த்தினியார் ஒரு வருஷத்தில் 40 முதல் 50 கௌன் (நீண்டசட்டை) வரையில் வாங்குவதுண்டு. காலையில் உபயோகிக்கும் கௌன் ஒன்றுக்கு 25 பவுனுக்குமேல் விலைகொடுப்பது அரிது. ஸாயங்கால கௌன் 40 பவுனுக்குமேல் போவது அருமை. காலை கௌனை ஸாதாரணமாய் 20-அல்லது 25 தடவை உபயோகப்படுத்துவார். ஸாயங்கால கௌனைப் பத்துப்பன்னிரண்டு தடவை தான் உபயோகப்படுத்துவார். ராணியார் இப்படியிருக்க, ராணியோடு கூடியிருக்கும் சில சீமாட்டிகள் ஸாயந்திர கௌன்களை சிலஸமயம் 3-வேளையும், சிலஸமயம் 1 வேளையுமே உடுத்திப்பிறகு கழற்றி எறிந்து விடுவது வழக்கம். ராணியார் கௌன்களுக்காக வருஷத்தில் 800 பவுனுக்கு மேல் செலவழிப்பது அரிது. ஸ்பெயின் தேசத்து ராணி, ஜெர்மன் சக்ரவர்த்தினி, ருஷ்யாதேசத்து ஸாரிணு ஆகிய இவர்கள் குறைந்தது 1000 பவுனுக்குக்குறையாமல் கௌன் வாங்குவதில் செலவழிப்பார்களாம்.

தொப்பிகள் விஷயமாய் வருஷச்செலவு 200 பவுனுக்குக்குறைவாகவே இருக்கும். ரொம்ப விலை உயர்ந்ததான தொப்பிகள் வருஷத்துக்கு ஆறுக்கு மேல் வாங்குவதில்லையாம். இவை ஒவ்வொன்றும் 10 பவுன்முதல் 15 பவுன்வரையில் விலையுள்ளவையாயிருக்கும். ஸாதாரணமாய் 24 தொப்பிகள் உபயோகத்திலிருக்கும். வருஷத்தில் ஸுமார் 24 தொப்பிகள் தான் வாங்குவது வழக்கம்.

ஜோடு, பூட்ஸ் இவைகளுக்காக வருஷம் 60 பவுன் செலவழியும். பகலில் தரித்துக்கொள்ள ஸுமார் 25 ஜோடி பூட்ஸ், ஜோடுகளும், ஸாயந்த்ரத்துக்கு 12 ஜோடிகளும் உபயோகத்திலிருக்கும். ஒருவருஷத்தில் பகலுக்குவேண்டிய பூட்ஸ் ஒரு டஜனும், ஸாயந்த்ரத்துக்கு வேண்டியவை அரைடஜனும் வாங்குவார். ஸாயந்தர பூட்ஸ் ஒரு ஜோடி 5பவுனுகும். பகல் பூட்ஸ் ஜோடி 2 அல்லது 2½ பவுனுகும்.

கார்ஸட் என்று சொல்லபடும் ரவிக்கை போன்ற சட்டைகளுக்கு 10 பவுனுக்கு மேல் செலவழிப்பதில்லை. அந்தத் தொகைக்குக்குறையவும் குறையாது கையிருப்பில் 2-டஜன் இருக்கும். வருஷ ஆரம்பத்தில் 1டஜன் கார்ஸட்டுகள் வாங்கப்படும்.

கல்யாண காலத்தில் கொடுக்கப்பட்ட ஸரிகை உடுப்புகள் பட்டுகள் ஆகிய இவைகள் ஏராளமாயிருக்கிறபடியால் இவைகளை அதிகமாக வாங்குவதில்லை. தற்போது ராணியாரிடமுள்ள இந்த உடுப்புகள் ஸுமார் ஏழரை லக்ஷத்துக்கிருக்குமென்று மதிப்பிடப்படுகிறது. உடுப்புகள் எடுத்துக் கொடுப்பதற்காக மூன்று ஸ்த்ரீகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் தலைமையானவளுக்கு வருஷம் 480 பவுன் சம்பளம். அவள் ராணிக்குக்கல்யாணமானதுமுதல் அவரிடம் விடாது உத்யோகம்பார்த்து வருகிறாள். அவள் ரொம்ப கல்வியறிவுள்ளவள். ஜெர்மன், ப்ரெஞ்ச் பாஷைகள் நன்ருய்ப் பேசுவாள்.

## Fear of Wife.

அகமுடையாளிடத்தில் பயம்.—"புருஷர்கள் எப்படிப்பட்ட ஸ்த்ரீயை விருப்புகிறார்கள்" என்னும் விஷயத்தைப்பற்றி எழுதும்படி ஒரு இங்க்லீஷ் பத்ரிகையின் அதிபர் பல கனவான்களைக் கேட்டுக்கொண்டார். சிலர் அந்த விஷயத்தைப் பற்றி எழுதியிருக்கிறார்கள். ஆனால் வேறு சிலர் தமது அபிப்ராயத்தைப் பத்ரிகைகளில் தெரிவித்தால் தங்கள் வீட்டில் மனஸ்தாபம் நேரிடும் என்றஞ்சி அந்த விஷயத்தைப் பற்றி எழுத மறுத்து விட்டார்களாம்.

# AGRICULTURE.

## விவஸாயம்.

### Sweet Potatoes.

சர்க்கரை வள்ளிக்கிழங்கு.—சர்க்கரை வள்ளிக் கிழங்கு பயிரிடுவதால் நிலத்தின் ஸத்து ரொம்ப குறைந்து போகிறதாம். நான்கு டன் கிழங்கு மாஸூலாகக் கிடைக்குமானல், நிலத்திலிருந்து 30-ராத்தல் நைட்ரோஜன், 13-ராத்தல் பாஸ்பாரிக் ஆஸிட், 64 ராத்தல் பொடாஷ் ஆகிய இவைகள் வெளியே போய்விடுகின்றன. சர்க்கரைவள்ளிக் கொடியிலும் ரொம்ப நைட்ரோஜன் இருக்கிறதாம். ஆகையால் தக்க மாஸூல் கிடைக்கவேண்டுமென்றால் ரொம்ப எருப் போடவேண்டும். இந்தப்பயிருக்கு இந்த்ரிய வஸ்துவும் ரொம்பவேண்டும். இதை நிலத்துக்கிடுவதற்கு கிழங்கு பயிரிடுவதற்கு முன்னல் பசுந்தாள் பயிர்களைப் பயிரிட்டால் நிலத்தில் இந்த்ரிய வஸ்து அதிகரிக்கும். வள்ளிப்பயிரில் நோய் காணுதிருப்பதற்காக இந்தப்பயிர் ஸாகுபடி செய்தபிறகு அதிககாலம் வேறு பயிர்களை மாற்றுப்பயிர்களாக ஸாகுபடி செய்து பிறகு கிழங்கை ஸாகுபடி செய்யவேண்டும்.

### A New Method of Manuring.

உரமிடுவதில் ஒரு நூதன முறை.—பழமரங்களுக்கு செயற்கை உரங்களை இடும்போது, உரங்களை மரத்தைச்சுற்றி கொஞ்ச தூரத்துக்கப்பால் பூமியின் மேலே பரவினல்போல தூவிவிடுவது இதுவரையில் வழக்கமாயிருந்து வருகிறது. இப்போது ஒரு ப்ரெஞ்ச் சாஸ்த்ரி ஒரு புது முறை கண்டு பிடித்திருக்கிறார். உரங்களை பூமிமேல் தூவுவதனல் உரங்களின் ஸாரம் சீச்ரம் பூமிக்குள் இறங்கி மரங்களுக்கு உதவுவதில்லையென்றும், உரங்களின் ஸாரத்தை மரங்கள் தாமஸமாகவே க்ரஹிக்கின்றன வென்றும் அவர் சொல்லுகிறார். அவர் சொல்லும் புதிய முறை பின் வருமாறு. மரத்தைச் சுற்றி ஒரு அடி தூரத்துக்கப்பால் கடப்பாரையால் 4-முதல் 6-குழிகள் வரையில் தோண்டவேண்டும். குழிகள் கொஞ்சம் அகலமாக இருக்கவேண்டும். எவ்வளவு உரம் ஒரு மரத்துக்குத்தேவையோ அவ்வளவு உரமும் இந்தக் குழிகளில் கொள்ளும்படிக்கு அவைகளை ஆழமாகத் தோண்டவேண்டும். ரஸாயன உரங்களை அப்படியே போட்டால் அவைகளின் காரத்தால் வேர்கள் கெட்டுப் போகுமாதலால் அந்த உரங்களை மண்ணோடு கலந்து போடவேண்டியது அவச்யமாகும். மரத்தின் வயது அதிகரிக்க அதிகரிக்க குழிகளின் ஆழமும் அதிமாக வேண்டும். இப்படிச் செய்து நல்லபலன் அடைந்ததாக மேற்கூறிய ப்ரெஞ்ச் சாஸ்த்ரி சொல்லுகிறார். ஐந்து வருஷத்து பழமரங்கள் 12-வருஷத்து மரங்கள் போல் ரொம்ப நன்றாய் வளர்ந்திருக்கின்றனவாம்.

இந்த முறையில் அதிக செலவு இல்லையாம். இரண்டுபேர் ஒரு நாளில் 80 மரங்களுக்கு இந்த நூதமுறைப்படி எருவிடலாமாம்.

### New Experiments in Agriculture.

விவஸாயத்தில் நூதன பரீக்ஷைகள்.—விவஸாய ரஸாயன சாஸ்த்ரிகள் ஸாதாரணமாக நிலத்தில் உள்ள ஸத்துக்கள் இன்னின்னவை யென்றும், அவைகளில் எவற்றில், எவ்வளவு பாகம் பயிருக்கு உணவாக உதவும் என்றும் ஆராய்ச்சி செய்துவருகிறார்கள். ஆனல் கொஞ்சகாலமாய்ப் புதியதான வேறு ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. ஒரு குறிப்பிட்ட தான்யத்தில் உள்ள உணவு ஸத்துக்களில் அதிலுள்ளதைவிட அதிகயாக எப்படியடைவது என்றுஆராய்ச்சிகள் செய்து கொண்டிருக்கிறார்கள்.

எல்லா தான்யங்களிலும் மூன்று வித ஆகார ஸத்துகள் இருக்கின்றன. அவைபாவன; ப்ரொட்டீன் என்று சொல்லப்படும் மாம்ஸம் அதிகரிக்கச்செய்யும் வஸ்து; தைலஸத்து; மா ஸத்து (கார்போஹைட்ரேட்;—இதில்,மா, சர்க்கரைஆகிய இவைஅடங்கும்.) ப்ரொட்டீனிலைல்தான் மாம்ஸம், தசைநார், நரம்புகள் ஆகிய இவைகள் வ்ருத்தியடைகின்றன. ப்ரொட்டீன் இல்லாவிட்டால் மூளையும் நரம்பும் நன்றாய் வேலை செய்யமாட்டா. தைலத்தாலும் மாவினலும் தேகத்தில் உஷ்ணம் அதிகரிக்கிறது. ப்ரொட்டீன்உணவை அதிகம் சாப்பிடுவதால் உஷ்ணசமனம் எற்படுவதோடு, நரம்பு,தசைநார் இவைகளுடைய வளர்ச்சிக்கும் ஸாதகமாகிறது. நாம் சாப்பிடும் நெல், கோதுமை, சோளம் முதலிய தான்யங்களில் ப்ரொட்டீன் குறைவாயிருக்கிறது. ஷை தான்யங்களில் அதிக ப்ரொட்டீன் இருக்கும்படி செய்வது ரஸாயன முறையால் ஸாத்யமாகுமா என்பதைப்பற்றி ரஸாயன சாஸ்த்ரிகள் ஆராய்ச்சி செய்து வருகிறார்கள்.

அமெரிக்காவில் ஒரு விவஸாயப் பண்ணையில் பத்து

வருஷம் ச்ரமப்பட்டு நான்கு விதமான சோள தான்யங்கள் உண்டுபண்ணியிருக்கிறார்கள். இந்த நாலுவிதமும் ஒரே விதமான சோளத்திலிருந்து வ்ருத்தி செய்யப்பட்டவை. ஆதியில் பயிரிட்ட சோளத்தில் இருந்த ப்ரொட்டீனைவிட முதல்வகை சோளத்தில் நூற்றுக்கு 50 பங்கு ப்ரொட்டீன் அதிகமாகவும், இரண்டாவது வகையில் நூற்றுக்கு 25 பங்கு குறைவாகவும், மூன்றாவது வகையில் ஆதி தான்யத்தில் இருந்த தைலப்பசையை விட நூற்றுக்கு 65 பங்கு அதிகமாயும், நான்காவது ராசியில் தைலப்பசை 100க்கு 55 பங்கு குறைவாயும் இருக்கின்றனவாம். இன்னம் 10 வருஷம் அல்லது அரை நூற்றாண்டுக்குள் தான்ய வகைகளில் என்னென்ன மாறுபாடுகள் செய்ய ஸாத்யமாகுமோ சொல்லமுடியாது. இப்படிப் பாடுபடுவதின் நோக்கமென்னவென்றால், இப்படி உணவு ஸத்தின் அளவு மாற்றப் பட்ட தான்யங்களைக் கொண்டே ஜனங்கள் தங்கள் தேக வளர்ச்சிக்கு இன்றியமையாத ப்ரொட்டீனை அடையும்படி செய்வதே. அதாவது, இப்பொழுது கோதுமை, அரிசி, சோளம், முதலியவைகள்சாப்பிடுவதில் ப்ரொட்டீன்போதாமல் உளுந்து, துவரை முதலிய தான்யங்களையும் கூட சாப்பிடவேண்டியிருக்கிறது. ஷை ரஸாயன முறையால் நெல், கோதுமை, சோளம் முதலியவற்றில் உள்ள ப்ரொட்டீனை அதிகமாக்கிவிட்டால், ஒரே தான்யதைச் சாப்பிடுவதாலேயே போதுமான ப்ரொட்டீன் கிடைத்து விடும். ரஸாயன சாஸ்த்ரத்தால் பற்பல அற்புத கார்யங்கள் செய்வது ஸாத்யமாகிறது.

## Lime.

சுண்ணாம்பு.—இது ஸாகுபடியாகிற நிலங்களிலெல்லாம் கொஞ்சம் இருக்கவேண்டியது அவச்யம். சுண்ணாம்பு குறைவாயிருக்கிற நிலங்களில் என்ன உரம்போட்டாலும் எவ்வளவு போட்டாலும் குணம் தெரிகிறதில்லை. இதைத் தெரிந்துகொள்ள 5-பலம் மண்ணை ஒரு கோப்பையில் போட்டு இளகக் கறைத்து ஒரு குச்சியை இட்டு கிளறிக்கொண்டு இருக்கும்பொழுது 2-அவுன்ஸ் ஹைட்ரோக்ளோரிக் ஆஸிட் என்ற உப்புத்ராவகத்தை ஊற்றி இன்னும் நன்றாய் வேகமாககிளறினால் அதிகநுரைகிளம்பும். நுரை அதிகமாய்க் கிளம்பினால் சுண்ணாம்பு அதிகம் என்றும், ஸாதாரணமாய் நுரைகிளம்பினால் போதுமான அளவு சுண்ணாம்பு இருக்கிறதென்றும், கொஞ்சம் கூட நுரைகிளம்பாவிட்டால் சுண்ணாம்பு குறைவென்றும் கண்டுபிடிக்கலாம். இப்படி பார்ப்பதினாலேயே அனுபவமுள்ளவர்கள் நிலத்திலுள்ள சுண்ணாம்பின் அளவையும் உத்தேசமாய்கண்டு பிடிக்க முடியும்.—சாஸ்த்ரீய உரம்.

## Pricklypear as Manure.

சப்பாத்துக் கள்ளியை எருவாக உபயோகித்தல்.—சப்பாத்துக்கள்ளியை இருவிதத்தில் எருவாக மக்கவைக்கலாம். (1) தகுந்த குழிகள்தோண்டி இவைகளில் சப்பாத்துக்கள்ளியை வெட்டிப்போட்டு, போதுமானபடி ஜலம்விட்டு சிறிது மண்போட்டு மூடுகிறார்கள். இது கொஞ்ச காலத்தில் மக்கிப் போகிறது. (2) நீர்த்தட்டான இடங்களில் குழி தோண்டாமலே சப்பாத்துக்கள்ளியைக் கோடைகாலங்களில் அப்புறப்படுத்தி குவியல்களாய்ப் போட்டு கொஞ்சம் வதங்கிக் சாய்ந்தபின் அதன்மேல் செத்தை சருகுகள் போட்டு நெருப்புக்கொளுத்தி கொஞ்சபாகம் எரிந்துபோனபின் அவைகளின்மேல் மண் குவியல் போட்டு மூடிவைத்தால் இரண்டு மூன்று வருஷங்களுக்குப்பின் எருவாய் உபயோகிக்க லாயக்காயாகும். முதலில் சொன்னபடி செய்வதினால் சப்பாத்துக்கள்ளி பூராவும் ஸ்வல்ப காலத்திற்குள் நன்றாய் மக்கிப்போய் உடனே உபயோகிக்கத்தக்க பதமடைகிறது. 2-வது சொல்லிய முறைப்படி செய்வதில் சப்பாத்துக்கள்ளி பூராவும் மக்குவதற்குச் சற்று காலதாமஸமாகிறது. சப்பாத்துக்கள்ளியில் உள்ள முள்ளெல்லாம் மக்கி, மடிந்துபோவதால் இவ்வெருவை வயல்களில் போடுவதினால் முட்களால் யாதொரு தீங்கும் நேரிடாது. மேலும், மேற்சொல்லியவாறு செய்த எருவில் பக்ஷ்ய பயிருணவுப் பொருட்கள் இருப்பதால் மிகவும் சிறந்த எருவாகி தக்க பலனைக் கொடுக்கிறதென்பது அனுபோகஸ்தர்களின் அபிப்ராயம்.

இந்த எரு புகையிலை, மிளகாய் முதலிய தோட்டக்கால் பயிர்களுக்கு உபயோகப்படுத்தப்படுகிறது. தோட்டக்கால் நிலங்களில் எந்தவிதப் பயிருக்கும் உபயோகப்படுத்தலாம். ஸாதாரணமாய் களர் நிலங்களுக்குக் கூட இந்த மண் சேர்த்துக்கொண்டு வந்தால் நிலம் திருந்திப்போகும்.—கிருஷிகன்.

# COMMERCE.
## வ்யாபாரம்.

### Business Enterprise in India.

இந்தியாவில் வ்யாபார ஊக்கம்.—இந்தியாவில் சென்ற ஜூன்மாஸத்தில் அடியில் கண்ட விவரப்படி 29-கம்பெனிகள் ரெஜிஸ்டர் செய்யப்பட்டன.

| | | |
|---|---|---|
| 8 | பாங்கி லேவாதேவி கம்பெனிகள் ... | 1,20,79,360 |
| 4 | இன்ஷ்யூரென்ஸ் கம்பெனிகள் ... | 80,000 |
| 3 | அச்சிட்டுப்ரசுரம் செய்யும் கம்பெனிகள் | 60,000 |
| 9 | வ்யாபாரக் கம்பெனிகள் (மேலே சொன்னவை தவிர) | 15,83,000 |
| 2 | பருத்திமில் கம்பெனிகள் ... | 13,00,000 |
| 1 | ஜூட்மில் கம்பெனி ... | 15,96,000 |
| 1 | பருத்தித்தோட்டக் கம்பெனி ... | 1,00,000 |
| 1 | சர்க்கரை செய்யும் கம்பெனி ... | 105,000 |
| 29 | ஆகமொத்தம் ... | 1,69,03,360 |

### New Steamers.

புதிய கப்பல்கள்.—பக்நால் அமெரிக்கன் இந்தியன் லயன் ஸ்டீமர் கம்பெனிக்காரர்கள் ஏற்கனவே யிருக்கும் தங்கள் கப்பல்களோடு 6 புதிய சரக்கு ஸ்டீமர்கள் சேர்த்து அமெரிக்காவிலிருந்து நேரே இந்தியாவிற்கு விடப்போகிறதாக சென்னப்பட்டணத்திலிருக்கும் அமெரிக்கா கான்ஸல் அமெரிக்காவில் ப்ரசுரமாகும் ஒரு பத்ரிகைக்கு எழுதி யிருக்கிறார்.

இந்த ஸ்டீமர்களில் முதல் ஸ்டீமர் ஸமீபத்தில் சென்னப் பட்டணம் துறைமுகத்திற்கு வந்திருந்தது. அதற்கு "கென்டெக்கி" என்றுபெயர். இந்தக் கப்பல்கள் நேரே கனடாவுககும் போகுமானால் இந்தியர்கள் கனடாமுதலிய அமெரிக்கா நாடுகளுக்குப் போவது எளிதாகும்.

### Export of Sugar.

சர்க்கரை ஏற்றுமதி:—நமது ராஜதானியிலிருந்து வெளிதேசங்களுக்கு ஏற்றுமதியான சர்க்கரையின் மதிப்பு 1911 - 12ம் வருஷத்தில் 10.87 லக்ஷம் ரூபாய் பெறுமான 1,72,776 அந்தரிலிருந்து 1912 - 13ம் வருஷத்தில் 20.27 லக்ஷம் ரூபாய் பெறுமான 2,83,038 அந்தராக உயர்ந்திருக்கிறது. சென்ற வருஷத்தின் ஏற்றுமதியில் பெரும்பாகம் பழுப்புச் சர்க்கரையும் வெல்லமுமாகும் சென்ற வருஷத்தில் கரும்பு மாஸூலில் அதிகமாக இருந்ததாலும், வெளிநாட்டு வெள்ளைச்சர்க்கரை மலிவாய் விற்று சென்னையில் ஏராளமாக விற்றதாலும், சர்க்கரை அதிகமாக ஏற்றுமதி செய்யப்பட்டது.

### An Indian Commercial Congress.

ஒரு இந்திய வ்யாபார காங்க்ரேஸ்.—சில வருஷங்களாக இந்தியர்கள் தமது தேசத்து விவஸாயம், கைத்தொழில், வ்யாபாரம் ஆகிய இவைகளில் அதிக முயற்சி பாராட்டி வருகிறார்கள்.

கைத்தொழில் வ்யாபாரம் ஆகிய இவைகளைப்பற்றி ஜனங்களுக்கு ஊக்கமுண்டாக்கப் பற்பல விடங்களில் பத்ரிகைகள் நடந்துவருகின்றன.

அநேக முக்யபட்டணங்களில் இந்திய வ்யாபார ஸங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டு வ்யாபார விஷயங்களைப் பற்றிக் கவனித்து வருகின்றன. கவர்ன்மெண்டாரும் வ்யாபார விஷயங்களைப் பற்றி கவனிப்பது ரொம்ப அவசயம் என்பதை யுணர்ந்து லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில்களில் வ்யாபார ஸபைகளிலிருந்து தெரிந்தெடுத்த மெம்பர்களுக்கு ஸ்தானங்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்திய கைத்தொழில் கான்பரென்ஸூம் சென்ற பல வருஷங்களாக கைத்தொழில் விஷயமாய் ரொம்பவும் உழைத்து வருகிறது. இந்த பற்பல முயற்சிகளையும் ஒன்று படுத்தி ஒழுங்காகச் செய்தால் ரொம்ப பலன் உண்டென்றும், அதற்காக ஒரு இந்திய கைத்தொழில் வ்யாபார காங்க்ரெஸ் ஸ்தாபித்து நடத்தவேண்டு மென்றும், பம்பாயிலுள்ள ஆனரபிள் ஸர் பஸூல்பாய் கரீம்பாய் என்பவர் சொல்லுகிறார். இந்த காங்க்ரெஸை முதலில் இரண்டு மூன்று வருஷத்துக்கொரு தடவையாக நடத்தலாமென்றும், அந்தக் காங்க்ரெஸில் இந்தியாவின் பொருளாதார அபிவ்ருத்தியில் ஸம்பந்தப்பட்ட எல்லா தொழில்களுக்கும் ப்ரதிநிதிகள் வரலாம் என்றும், சொல்லுகிறார். இப்போது வருஷா வருஷம இந்தியன் நாஷனல் காங்க்ரெஸோடு நடந்துவருகிற இண்டியன் இண்டஸ்ட்ரியல் கான்பரென்ஸ் என்று சொல்லப்படும் இந்திய கைத்தொழில் கான்பரென்ஸை காலக்ரமத்தில் மேல்சொல்லிய வ்யாபார காங்க்ரெஸோடு சேர்த்துக்கொள்ளலாம். இந்தக் காங்ரெஸானது இந்திய வ்யாபார ஸமூகத்தார் தங்களுடைய அபிப்ராயங்களை கவர்ன்மெண்டாருக்குத் தெரிவிப்பதற்கு ஒரு ஸாதனமாக இருக்கும் என்றும் சொலலுகிறார். இந்திய ப்ரமுகர்களில் அநேகம் பேர்கள் இவருடைய யோசனையைப் பற்றி ஸாதகமாகவே அபிப்ராயப்படுகிறார்களென்று தெரிய வருகிறது.

# INDUSTRY.

## கைத்தொழில்.

### Silk Industry in Mysore.

மைஸூரில் பட்டுத்தொழில்:—பட்டுப் பூச்சியை வளர்த்துப் பட்டெடுக்கும் தொழில் மைஸூர் ஸமஸ்தானத்தில் விசேஷமாகப் பரவி அநேகருக்கு அத்தொழிலே முக்ய ஜீவாதாரமாயிருக்கிறது. மைஸூரில் உற்பத்தியாகும் பட்டு, குணத்தில் சிறந்ததாயிருப்பதால் அதற்கு நல்ல க்ராக்கியுமிருக்கிறது. பம்பாயிலுள்ள இத்தாலி தேசத்து கான்ஸலும், இந்தியா கவர்ன்மெண்டின் சிற்றுயிர் லக்ஷண சாஸ்த்ரியும் மைஸூரில் பட்டுப்பூச்சி வளர்க்கப்படும் ஜில்லாக்களுக்குப் போய்ப் பார்வையிட்டார்கள். மைஸூர்ப் பட்டு மிக மேன்மையாயிருக்கிறதாக அவர்கள் வெகுவாய்ப் புகழ்ந்தார்கள். ஸமஸ்தான ஜனங்களுக்கு அவச்யமான இத்தொழில் விஷயமாக இதுவரையில் மைஸூர் கவர்ன்மெண்டார் ஒரு ஸகாயமும் செய்ய வில்லை. ஆனல் இத்தாலியிலிருந்தாவது அல்லது ஜப்பானிலிருந்தாவது பட்டுத்தொழில் ப்ரோபெஸர் ஒருவரைத் தருவிப்பதாக இப்பொழுது நிர்ணயத்திருக்கிறார்கள் என்று தெரியவருகிறது.

### Children in Factories.

பாக்டரிகளில் சிறுவர்கள்.—சிறு பையன்களையும் சிறு பெண்களையும் வேலைக்கு வைத்துக் கொண்டிருக்கும் பாக்டரிகளில் செய்யப்படும் ஸாமான்களை தமது தேசத்தில் கொண்டுவராமல் தடுக்கும்படி அமெரிக்கா ஐக்ய மாகாண கவர்ன்மெண்டார் யோசனை செய்து வருகிறார்கள். இது கல்கத்தாவில் மில் வைத்திருப்பவர்களுக்கு ஸம்மதமில்லை. வங்காள சேம்பர் அப் காமர்ஸ் என்னும் வர்த்தக ஸங்கம், ஐக்ய மாகாண கவர்ன்மெண்டு அப்படி செய்வதை இங்க்லாண்டிலுள்ள மந்த்ரிகள் ஆக்ஷேபிக்க வேண்டுமென்றும், அதற்குத் தகுந்த முன் ஜாக்ரதை செய்ய வேண்டுமென்றும், இந்தியா கவர்ன்மெண்டுக்குத் தெரிவித்திருக்கிறது.

### Flaying Goats Alive.

ஆடுகளை உயிரோடு தோலுரித்தல்:—வங்காளத்தில் சில இடங்களில் ஆடுகளை உயிரோடு தோலுரிக்கிறார்களாம். ஆடுகளை கழுத்தில் வெட்டிக்கொன்ற பிறகு தோலுரித்தால் அவைகளின் தோல்கள் நீளமாயிருப்பதில்லையாம். இப்படி ஆட்டை உயிரோடு தோலுரிப்பதால் தோல் நீளமாயிருக்கிறதென்றும் அதனல் அந்தத்தோலுக்கு அதிக விலை கொடுத்து வாங்குகிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது. முதலில் ஆட்டின் கண், வாய் இவற்றண்டை தோலைக்கிழிக்க ஆரம்பித்து கழுத்துவரையில் தோலை உரித்து அதற்குப்பின்பு அந்த ஆட்டின் கழுத்தை வெட்டிக்கொல்வார்கள். இது மிகவும் கொடூரமான செய்கை. இதை சட்டத்தால் தடுக்க வேண்டுமென்று ஜீவவதை நிவாரண ஸங்கம் முயற்சி செய்து வருகிறதைப்பற்றி மே, மாஸ ஸஞ்சிகையில் குறிப்பிட்டிருக்கிறோம்.

### Paper Mills in India.

இந்தியாவில் காகிதமில்லுகள்.—1911-ம் வருஷத்தில் இந்தியாவிலுள்ள காகிதமில்லுகள்-9. அவைகளுள் 3-வங்காளத்திலும், 4-பம்பாயிலும் 1-ஐக்ய மகாணத்திலும், 1-க்வாலியரிலும் இருந்தன. இவைகளில் அந்தவருஷம் 2-மில்லுகள் வேலைசெய்யவில்லை. மில்லுகளின் மூலதனம் 54-லக்ஷம் ரூபாயாகும்.

1910-ம் வருஷத்தில் மில்லுகளில் செய்யப்பட்ட காகித்தத்தின் மதிப்பு 81½-லக்ஷம் ரூபாயாகும். 1911-ம் வருஷத்தில் 80-லக்ஷம் ரூபாய்தான்.

ஐரோப்பாவிலிருந்து மலிவான மரச்சோற்றால் செய்யப்படும் காகிதம் ஏராளமாய் வருவதால், இந்தியாவில் பழைய முறைகளால் செய்யப்படும் இந்தத் தொழில் அபிவ்ருத்தி யாகாமலிருக்கிறது. கடுதாசிகள், ப்ளாட்டிங் பேபர், கவர்கள், நோட்பேபர் ஆகிய இவைகள் ஸப்ளைசெய்ய கவர்ன்மெண்ட் கண்ட்ராக்ட் எடுத்திருக்கும் மில்லுகளில்தான் வேலை லாபகரமாய் நடந்து வருகிறது.

1907-ம் வருஷம் இந்தியாவில் செய்யப்பட்ட காகிதத்தின் மதிப்பு 73-லக்ஷம் ரூபாயாகும். அதே வருஷம் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட காகிதத்தின் மதிப்பு 94-லக்ஷம் ரூபாய். 1911-ம் வருஷத்தில் இந்தியாவில் செய்யப்பட்ட காகிதத்தின் மதிப்பு 80-லக்ஷம் ரூபாய். இறக்குமதியின் மதிப்பு 109½-லக்ஷம் ரூபாய், அதாவது இறக்குமதியின் மதிப்பு நூற்றுக்கு 16-வீதம் அதிகமாயிருக்க, இந்தியாவில் செய்த கடுதாசியின் மதிப்பு நூற்றுக்கு 13-வீதம் தான் அதிகரித்திருக்கிறது.

1911-ம் வருஷத்தில் இந்தக் காகித மில்லுகளில் வேலைசெய்து வந்த ஜனங்களின் தொகை 4632-இவைகளில் செய்யப்பட்ட காகிதத்தின் நிறை 59,441,002-ராத்தலாகும்.

# ECONOMICS.
# பொருளாதாரம்.

## Agricultural Dept and Economic Condition.

விவஸாய டிபார்ட்மெண்டும் பொருளாதார நிலைமையும்.—இந்தியா ஒழிந்த மற்றதேசங்களில் வேலையாட்களுக்குக் கொடுக்கும் கூலிவிகிதம் உயர்ந்து போகுமானல், உடனே அந்தத் வேலையாட்களை வேலைக்கெடுத்துக்கொள்ளும் விவஸாயிகள் நூதன மானவும் குறைந்த செலவில் வேலை செய்யக்கூடியவையுமான முறைகளை அனுஷ்டிப்பது வழக்கம். ஆனல் இந்தியாவிலோ விவஸாய வேலையாட்களுக்கு அதிகச் சம்பளமும் கொடுக்கவேண்டியிருக்கிறது. நிலமும் வளமையில் குறைந்துகொண்டேவருகிறது. அப்படியிருந்தும் ஜனங்கள் நூதனமுறைகளை அனுஸரியாமல் பழைய விவஸாயமுறைகளையே அனுஸரித்து வருகிறார்கள். இதனல் என்ன ஆகிறதென்றால், முன்காலத்தில் இருந்தவர்கள் தங்களுடைய நிலங்களில் வரும் வரும்படியைக்கொண்டு ஸுமாராய் ஸுகஜீவனம் செய்துவந்திருக்க, இப்பொழுதுள்ளவர்கள் தங்கள் நிலங்களில் முன்போல் பாடுப்பட்டும் ஒரு வேளைச்சோற்றுக்குக் கூடப் போதாமல் திண்டாடுகிறார்கள். இந்த விஷயங்களைப்பற்றி விவஸாய டிபார்ட்மெண்டார் பூராவும் ஆராய்ச்சி வேண்டும். அந்த டிபார்ட்மெண்டார் இந்தநிலைமையை சீர்ப்படுத்துவதற்கு தக்க பரிஹாரங்களைத்தேடி, அந்தபரிஹாரங்களை கவர்ன்மெண்டார் அனுஷ்டித்து ஜனங்களை க்ஷேமப்படுத்தும்படி கவர்ன்மெண்டாருக்கு வற்புறுத்தவேண்டும். இப்படிச் செய்யாத வரையில் விவஸாய டிபார்ட்மெண்டு ஏற்படுத்தியிருப்பதால் யாதொரு பலனுமில்லை என்று 'அம்ருத பஜார் பத்ரிகை' எழுதுகிறது.

## Cotton Growing in India.

இந்தியாவில் பருத்தி விளைவித்தல்.—இண்டர்நாஷனல் காட்டன் பெடரேஷன் என்று பெயருள்ள ஸர்வதேச பருத்தி வ்யாபாரிகள் ஸங்கம் ஒன்று ஐரோப்பாவில் இருக்கிறது. அதின் மெம்பர்கள் கொஞ்ச காலத்துக்கு முன்னல் இந்தியாமந்த்ரியாகிய லார்ட் க்ரூவைப்போய் கண்டுகொண்டார்கள். இங்க்லண்டில் துணி வ்யாபாரத்துக்கு பேர்போன ப்ரதேசமாகிய லங்காஷயரைச் சேர்ந்த பார்லிமெண்டு மெம்பர்களும் அவர்களுடன் கூடப்போயிருந்தார்கள். இந்தியாவில் பருத்தி ஸாகுபடியை இன்னம் அதிகப்படுத்துவதற்கு வேண்டிய முயற்சிகள் கவர்ன்மெண்டார் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று பெடரேஷன் மெம்பர்கள் வற்புறுத்திக் கூறினர்கள். ஆனல் லார்ட் க்ரூ இந்திய விவஸாயிக்குப் பருத்தி ஸாகுபடியால் அதிகலாபம் கிடைக்குமென்று நிச்சயமாய்க் காட்டினு லொழிய மற்ற பயிர்கள் ஸாகுபடி செய்வதை விட்டுவிட்டு அவர்களை பருத்தி ஸாகுபடி அதிகமாக செய்யும்படி சொல்லுவது ந்யாயமல்ல வென்று பதில் சொன்னர்.

## Mr. Yisveswarayya on the Ryot's Condition

விவஸாயிகளின் நிலைமையைப்பற்றி மிஸ்டர் விச்வேச்வரய்யா.—மைஸூர் ஸமஸ்தானத்து திவானகிய மிஸ்டா விச்வேச்வரய்யா அவர்கள், துங்கபத்ரா நதிக்கரையில் மைஸூர்வாஸி யொருவர் ஸ்தாபித்திருக்கும் ஆயில் எஞ்சின் பம்பை ஸமீபத்தில் திறந்து வைத்தபோது விவஸாயிகளின் நிலைமையைப்பற்றிப் பேசினர். அவர் பேசினதின் ஸாராம்சம் பின்வருமாறு. நமது விவஸாயிகள் உழைப்பாளிகளாகவும், ஸாதுக்களாகவும் இருந்தாலும் அவர்களிடம் அறியாமை குடிகொண்டிருக்கிறது. அவர்கள் இப்படி ரொம்பவும் அறியாமையா யிருப்பது அவர்களுடைய குற்றமல்ல, இது அவர்களுடைய துரத்ருஷ்ட மென்று சொல்லவேண்டும். அவர்களை அலக்ஷ்யம் செய்து விடாமல் அவர்களுக்குள் கல்வியைப் பரவச்செய்து அவர்களிடம் காருண்யமாக இருக்கவேண்டும். எல்லாக் குறைகளுக்கும் கவர்ன்மெண்டுக்குவிண்ணம் செய்து கொண்டிராமல் தங்களைத் தாங்களே நம்பினவர்களாய் இருந்தால் விவஸாயிகள் தங்களுடைய நிலைமையையும், கௌரவத்தையும் உயர்த்திக்கொள்ளுவதோடு தேசத்திலுள்ள எல்லா விவஸாயிகளினுடைய நிலைமையையும் உயர்த்தினதாக ஆகும் என்பதை விவஸாயிகள் உணரவேண்டும். தேசபாஷை பத்ரிகைகள் விவஸாயிகளுக்கு உபயோகப்படக்கூடியவும் அவர்களுடைய நிலைமையை உயர்த்த உதவக்கூடியவையுமான விஷயங்களை விவஸாயிகளுக்குள் பரவச்செய்யப் படவேண்டும். என்றிப்படிப் பேசிவிட்டு கோவாபரேஷன், மைஸூர் பட்டுத் தொழில் முதலிய விஷயங்களைப்பற்றிப் பேசினர்.

# CO-OPERATION.
# கோவாபரேஷன்.

**Co-operation in Mysore.**

மைஸூரில் கோவாபரேஷன்:—மைஸூர் கவர்ன்மெண்டார் கோவாபரேடிவ் ஸங்கங்களுக்கு ஸாதகமாக ஒரு விதி ஏற்படுத்தியிருக்கிறார்கள். தாலுக்கா ஆபீஸ்களில் வைக்கப்பட்டிருக்கும் ஸ்பெஷல் நோட்டீஸ் ரெஜிஸ்டர்களில் ஸங்கங்களை ரெஜிஸ்டர் செய்வதற்கு ஏற்பட்டுள்ள கட்டணம் இனி ஸங்கங்கள் செலுத்த வேண்டியதில்லை யென்றும், 5-வருஷத்துக்கொருதடவை மறுபடியும் ஸங்கங்களை ரெஜிஸ்டர் செய்யவேண்டு மென்றும், அப்படி மறுபடியும் ரெஜிஸ்டர் செய்வதற்கும் கட்டணம் செலுத்தவேண்டியதில்லை என்றும் ரூல் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

**A Co-operative Society.**

ஒரு கோவாபரேடிவ் ஸங்கம்.—மதுரை ராமனாதபுரம் ஜில்லா விவஸாய கைத்தொழில் ஸங்கம் ஸமீபத்தில்கூடி அதை விவஸாய கோவாபரெடிவ் ஸங்கமாக மாற்றுவதைப்பற்றி யோசித்தது. வந்திருந்த ப்ரமுகர்கள் விவஸாய கைத்தொழில் விஷயங்களில் கோவாபரேஷனைக் கையாடுவது ரொம்பவும் நலம் என்பதை வற்புறுத்திக் கூறினார்கள். ஸபைக்கு சேர்மனாக இருந்த கலெக்டர் அந்த ஸங்கத்தை கோவாபரெடிவ் ஸங்கமாக மாற்றுவதில் சில ஸங்கடங்கள் உண்டாகலாம் என்றும், புதியதாக ஒருகோவாபரெடிவ் ஸங்கம் ஏற்படுத்தி பிறகு விவஸாய கைத்தொழில் ஸங்கத்தை அதோடு சேர்த்து விடுதல் நல்லதென்றும் சொன்னார். அப்படியே தீர்மானித்தார்கள். பிறகு அந்த மீட்டிங்கின் நடவடிக்கைகளை முடித்துவிட்டு ஒரு பொது மீட்டிங்காக மாற்றி, அதில் ஒரு கோவாபரெடிவ் விவஸாய ஸங்கம் ஏற்படுத்தவேண்டும் என்று தீர்மானித்தார்கள். ஸுமார் 17 கனவான்கள் அந்த ஸங்கத்தில் சேருவதாக ஒப்புக்கொண்டார்கள். ஸங்கத்தை ரெஜிஸ்டர் செய்வதற்காகவும், ரூல்கள் தயாரிப்பதற்கும் ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது.

**gricultural Co-operation in Germany.**

ஜெர்மனியில் விவஸாய கோவாபரேஷன்.—ஜெர்மனியில் விவஸாய கோவாபரேஷன் ரொம்ப அபிவ்ருத்தியடைந்து வருகிறது. சென்ற வருஷத்தில் 1314 ஸங்கங்கள் அதிகமாக ஸ்தாபிக்கப்பட்டனவாம். அந்த தேசத்திலுள்ள கோவாபரெடிவ் ஸங்கங்களின் தொகையும் மெம்பர்களின் ஸங்க்யையும் ரொம்ப அதிகமாயிருக்கின்றன.

(1) ஐக்ய நாணய ஸங்கங்கள், ஸேவிங்க்ஸ் பாங்க் வேலைசெய்து வரும் ஸங்கங்கள் 16,927. இந்த ஸங்கங்களில் மொத்த மெம்பர்கள் 16,70,000.

(2) சரக்குகள் வாங்கவும் விற்கவும் ஏற்பட்ட கோவாபரெடிவ் ஸங்கங்கள்-2,409. இவைகளில் உள்ள மொத்த மெம்பர்கள் 2,40,000.

(3) கோவாபரெடிவ் பால்சாலைகளின் தொகை 3,488. இவைகளில் உள்ள மெம்பர்கள் 3,20,000.

(4) மற்ற கோவாபரெடிவ் ஸங்கங்கள் 3,654. இவைகளில் உள்ள மெம்பர்கள் 2, 30,000.

**Co-operative Production and Distribution.**

கோவாபரேஷன் முறையில் சரக்குகள்செய்து விற்றல்.—சென்ற ஜூன்மாஸம் கோயம்புத்தூரில் கோவாபரெடிவ் கான்பரென்ஸ் நடந்தபோது கான்பரென்ஸின் ப்ரெஸிடெண்டாகிய மிஸ்டர் ஹெமிங்வே கோவாபரேஷன் முறையில் ஸாமான்கள் செய்வதைப் பற்றியும் விற்பதைப் பற்றியும் பேசினார்.

"சரக்குகள் செய்வதிலும், விற்பதிலும் கோவாபரேஷனை உபயோகிப்பது என்பது நல்ல யோசனைதான். சிலஇடங்களில் சரக்குகள் செய்வதற்கும் விற்பதற்கும் தகுந்த ப்ரைவேட் ஏஜென்ஸிகள் இல்லாமலிருக்கின்றன. ஏஜென்ஸிகள் இருக்குமிடங்களில் அவைகள் விவஸாயிகளையும் மற்றவர்களையும் ரொம்ப தொந்தரவுசெய்து கஷ்டப் படுத்துகின்றன. அப்படிப்பட்ட இடங்களில் உற்பத்திக்காகவும், விற்பனைக்காகவும் கோவாபரெடிவ் ஸங்கங்கள் ஸ்தாபிப்பது விரும்பத்தக்கதே. ஆனால் இந்த மாதிரி கார்யங்களில் ரொம்ப ஆபத்துக்கள் இருக்கின்றன. வ்யாபார விஷயங்கள் கோவாபரெடிவ் ஸங்கங்களுக்கு அதிகம் தெரியாதாகையால் முன்யோசனையும் அறிவும் இல்லாமல் வ்யாபாரம் செய்து நஷ்டமடையக் கூடும். வ்யாபார ஸங்கங்கள் ரொம்ப பெரியவை. இந்த வ்யாபார ஸங்கங்கள் கோவாபரெடிவ் ஸங்கங்களுக்கு எதிராக வேலை செய்து இவைகளுக்கு நஷ்டம் உண்டுபண்ணி விட்டால் இந்தவித கோவாபரெடிவ் முயற்சிக்கே ஒரு கெடுதலாக முடியும். ஆகையால் இந்தமுயற்சி விஷயமாக ரொம்பவும் அவஸரப்படாமல் எல்லா அம்சங்களையும் நன்றாய் ஆராய்ந்து தவறுதல் ஏற்படாதென்று நிச்சயம் செய்துகொண்டு அவைகளில் இறங்கவேண்டும்."

# BANKING.
## பாங்கி வ்யாபாரம்.

**Currency Notes.**

கரன்ஸி நோட்டுகள்.—கோதாவரி ஜில்லாவில் எழுதப்படிக்கத் தெரியாத ஜனங்கள் 10 ரூபாய் நோட்டுக்கும் 50 ரூபாய் நோட்டுக்கும் வித்யாஸம் தெரியாமல் கஷ்டப்படுகிறார்கள் என்றும், ரெயில்வேஸ்டேஷனில் டிக்கட்டு வாங்கும்போதும், சந்தைகள், திருவிழாக்கள் முதலிய விடங்களிலும் ஒன்றுக்கொன்று மாற்றிக்கொடுத்து ஷை ஜனங்கள் நஷ்டமடையக் கூடும் என்றும் ஆகையால் இந்த நோட்டுகளை வெவ்வேறு வர்ணங்களில் அச்சிட்டு வெளியிடவேண்டும் என்றும் கோதாவரி ஜில்லா ஸங்கத்தார் ஸமீபத்தில் இந்தியா கவர்ன்மெண்டுக்குத் தெரிவித்துக்கொண்டார்கள். இப்படி நோட்டுகளின் வர்ணத்தை மாற்றுவதோடு, அவைகளின் அகல நீளத்தையும் வெவ்வேறாக வைப்பது நல்லது.

**Theft of Deposit Receipt.**

டேபாஸிட் ரசீது திருட்டுப்போவது.—ஒருவர் ஒரு பாங்கியில் 100 பவுன் டெபாஸிட் செய்திருந்தார். அந்தப் பணத்தைத் திரும்ப வாங்கிக்கொள்ள வேண்டியிருந்தபோது அவர் அந்த டெபாஸிட்டுக்கு பாங்கிக்காரர்கள் கொடுத்த ரசீதையும், தமது ஸகோதரருக்கு அந்தத் தொகையில் 60 பவுன் கொடுக்கும்படிக்கு பாங்கிக்கு எழுதிய ஒரு கடிதத்தையும் சேர்த்து ரெஜிஸ்டர்ட் பாக்கெட் மூலமாய் தமது ஸகோதரருக்கு அனுப்பினார். அதே ஸமயத்தில் தாம் பாங்கியில் டெபாஸிட் செய்திருக்கும் பணத்தில் 60 பவுனை தமது ஸகோதரருக்கு செலுத்தும்படி ஷை பாங்கிக்கும் தனியாக ஒரு கடிதம் போட்டார். ஸகோதரருக்கு அனுப்பின ரெஜிஸ்டர்ட் பாக்கெட் தபாலில் திருட்டுப்போய்விட்டது. எவனோ ஒருவன் தான் பணம் டெபாஸிட் செய்தவருடைய ஸகோதரன் என்று ஆள் மாறாட்டம் செய்து பாங்கியில் டெபாஸிட் ரசீதையும் அதனோடிருந்த கடிதத்தையும் கொடுத்து, பாங்கிக்காரர்கள் கேட்டுக்கொண்டபடி அந்த ரசீதில் ஸகோதரருடைய கையெழுத்தைப் போல் போர்ஜரி செய்து கையெழுத்திட்டான். பாங்கிக்காரர்கள் அவனுக்கு 60 பவுன் கொடுத்துவிட்டு பாக்கிப்பணத்துக்கு ஒரு டெபாஸிட் ரசீது கொடுத்துவிட்டார்கள். முதலில் பணம் டெபாஸிட் செய்தவர் பாங்கியின்மேல் 100 பவுனுக்கு வ்யாஜ்யம் செய்தார். கேஸ் அவருக்கு ஸாதகமாக முடிந்தது. இந்தக் கேஸில் தீர்ப்பு சொன்ன ஜட்ஜ் அப்படித் தீர்ப்பு செய்ததற்கு பின்வருமாறு காரணங்கூறினார். "ஒரு டெபாஸிட் ரசீது ஒருவர் பேரிலுள்ளதை இன்னொருவர் பேருக்கு மாற்ற முடியாது. ரசீது யார் பேரி லிருக்கிறதோ அவருக்காவது அல்லது அவர் உத்தரவு படிக்காவது பாங்கி பணம் கொடுக்க வேண்டும். எண்டார்ஸ் செய்த டெபாஸிட் ரசீது ஒருவர் வசம் இருப்பதனாலேயே அவர் பணத்துக்கு பாத்யமுடையவராக மாட்டார், போர்ஜரி ரசீதுக்கு பணம் கொடுத்தாலும் ஸரி அல்லது பணத்துக்கு பாத்யமில்லாத ஒருவன் ரசீது வைத்துக்கொண்டிருப்பதற்காகப் பணம் கொடுத்தாலும் ஸரி அப்படி அவருக்கு பாங்கி பணம் கொடுத்தால் அந்த நஷ்டத்துக்கு பாங்கியே உத்திரவாதியாகும். டெபாஸிட்டருடைய அஜாக்ரதையினால் மேற்சொன்ன பிசகுகள் நடந்திருந்தால் பாங்கியானது நஷ்டத்துக்கு உத்தரவாதியாகாது."

**Madura-Ramnad Co-operative Bank.**

மதுரை ராமனாதபுரம் ஸெண்ட்ரல் கோவாபரேடிவ் பாங்க்.—இந்த பாங்கி 1912-ம்வருஷம் ஜூன்மாஸம் ரெஜிஸ்டர் செய்யப்பட்டது. அடுத்த ஜூலைமாஸம் தொழிலாரம்பித்தது. இதில் நபர் மெம்பர்கள், 68 பேர் இருக்கிறார்கள். 105 கோவாபரேடிவ் ஸங்கள்கள் இதில் சேர்ந்து பங்கு எடுத்துக் கொண்டிருக்கின்றன. எட்டு கோவாபரேடிவ் ஸங்கங்கள் தான் இன்னும் பங்கெடுத்துக்கொள்ளாமலிருக்கின்றன. சென்ற ஜூன்மாஸம் 30-உயோடு முடிவாகிற ஒரு வருஷத்தில், இந்த பாங்கி 3,95,850 ரூபாய் கோவாபரேடிவ் ஸங்கங்களுக்குக் கடன் கொடுத்தது. இதில் 54,090 ரூபாய் ஸங்கங்கள் திருப்பிச் செலுத்திவிட்டன. இந்த பாங்கிக்குச் சென்ற வருஷம் ரூ 3057-3-10 லாபம் கிடைத்தது. இதில் நாலில் ஒரு பாகம் ரிஸர்வுபண்டுக்கு சேர்க்கப்பட்டது. எட்டில் ஒரு பாகம் ஸெக்ரெடரிக்கு ஸன்மானமாகக் கொடுக்கப்பட்டது. பாக்கியில் ரூ 751-7-0ஐ பங்குக்காரர்களுக்கு நூற்றுக்கு வருஷத்துக்கு 9 -வீதம் டிவிடெண்டாகக் கொடுப்பார்கள்.

# INSURANCE.
# இன்ஷ்யூரென்ஸ்.

## Benefits of Life Insurance.

இன்ஷ்யூரென்ஸால் உண்டாகும் நன்மைகள்.—இன்ஷ்யூரென்ஸால் ஜனங்களுக்குப் பல விதங்களில் நன்மையுண்டாகிறது. இன்ஷ்யூரென்ஸ் செய்வதால் ஜனங்கள் தங்களுடைய செலவை ஒழுங்கு படுத்தி செட்டாக ஜீவிக்கிறார்கள். இப்படி ஜனங்கள் திருந்துவது ஜனஸமூகத்துக்கே ஒரு பெருத்தநன்மையாகும். மேலும், இன்ஷ்யூரென்ஸ் ஏற்பாட்டால் அநேக குடும்பங்கள் கஷ்டப்படாமலும் அதோகதியாய்ப் போகாமலும் காக்கப்படும். இதனால் இன்ஷ்யூரென்ஸ் ஒரு பரோபகாரமான ஏற்பாடாக இருக்கிறது என்று சொல்லலாம்.

## Length of Life.

ஆயுள் பரிமாணம்.—மனிதருடைய ஆயுள் பரிமாணத்தைப் பற்றி அமெரிக்காவில் கணக்குகள் சேகரித்திருக்கிறார்கள் அந்தக் கணக்குகளின்படி கல்யாண மாகாதவர்களைவிட கல்யாணமானவர்கள் அதிக காலம் ஜீவித்திருக்கிறார்கள் என்று தெரியவருகிறது. 20-வயது முதல் 30-வயது வரையில் சாவு விகிதம் கல்யாணமானவர்களில் 4.2-ஆகவும் கல்யாண மாகாதவர்களில் 6.6 ஆகவும் இருக்கிறது. 30-முதல் 40-வரையில், கல்யாணமானவர்களில் சாவு விகிதம் 6-க்கு குறைவாயும் ப்ரம்மசாரிகளில் 13-ஆகவும் இருக்கின்றன. 40-வது வயது முதல் 50-வது வயதுவரையில் கல்யாணமானவர்களில் சாவுவிகிதம் $9\frac{1}{2}$ ஆகவும் ப்ரும்மசாரிகளில் $19\frac{1}{2}$ஆகவும் இருக்கிறது. அதாவது ப்ரும்மசாரிகளில் சாவு விகிதம் 10-அதிகமாக இருக்கிறது. 50 முதல் 60-வது வயது வரையில் இந்த வித்யாஸம் 11-ஆகவும் 60-வது வயஸு முதல் 70-வது வயஸு வரையில் வித்யாஸம் 19 ஆகவும் இருக்கிறது. குடும்ப வாழ்க்கையில் எவ்வளவோ தொந்தரைகள் இருக்கக் கூடுமென்ற போதிலும் க்ரகஸ்தாச்ரமமே ஆயுள் வ்ருத்திக்கு ஸாதகமான தென்று சொல்லலாம்.

## Primary Purpose of Life Insurance

இன்ஷ்யூரன்ஸின் முக்ய நோக்கம்.—ஆயுள் இன்ஷ்யூரன்ஸின் முக்ய நோக்கம் பாதுகாப்பாகும். இது இன்ஷ்யூர் செய்தவருக்கும் அவரை நம்பியிருப்பவர்களுக்கும் ஒரு பாதுகாப்பாக இருப்பதால்தான் தற்காலத்தில் இது ஒவ்வொருவருக்கும் இன்றியமையாத தாகிறது. சில கேஸுகளில் போடும் பணத்துக்குத் தகுந்த லாபம் வந்தாலும் வரும்; வராவிட்டாலும் இல்லை. போட்ட பணத்துக்கு தகுந்த வட்டி கட்டுகிறதா என்பது அவ்வளவு முக்யமான விஷயமல்ல. இன்ஷ்யூரன்ஸ் ஏற்பாடு முதலில் ஏற்பட்டதற்குக் காரணமே பாதுகாப்பாகும். ஒருவர் இன்ஷ்யூர் செய்வதால் தமக்காவது அல்லது தம்மை நம்பியிருப்பவர்களுக்காவது பிற்காலத்தில் பணத்தட்டு ஏற்படாமல் ஸௌகர்யமாய்க் காலங்கழிக்க ஒரு பாதுகாப்பு த்ரவ்யம் ஏற்படுகிறது என்னும் இந்த முக்ய விஷயத்தைத் தகுந்தபடி எடுத்துச் சொல்லாததனால் தான் இன்ஷ்யூர் செய்யவேண்டியது ரொம்ப அவச்யமென்பதை அநேகர் அறியாமல் போகிறார்கள் என்று சொல்லலாம். அநேக ஏஜெண்டுகள் இன்ஷ்யூர் செய்வதென்றால் பணம் வட்டிக்கு விடுவதென்று சொல்லுவதால் இன்ஷ்யூரென்ஸால் அதிக லாபம் இல்லையென்று ஜனங்கள் எண்ணி இன்ஷ்யூர் செய்யாமலிருந்து விடுகிறார்கள். அப்படிக்கின்றி, மேற்சொன்ன காரணத்தைக் கொண்டு இன்ஷ்யூர் செய்ய மறுத்தவர்களிடம், இன்ஷ்யூரென்ஸ் என்பது பிற்காலத்துக்கு ஒரு பாதுகாப்பாகும் என்றும், அவர்கள் இன்ஷ்யூர் செய்யவேண்டியது அவச்யமென்றும், இவ்வளவு தொகைக்கு இன்ஷ்யூர் செய்யவேண்டும் என்றும் தக்க காரணங்களுடன் எடுத்துச் சொன்னால் எவரும் இன்ஷ்யூர் செய்ய விரும்பாமலிரார்.

## Cattle Insurance.

கால் நடைகளை இன்ஷுர் செய்தல்.—மனுஷருக்கு எப்படி இன்ஷுரன்ஸ் கம்பெனிகள் ஏற்பட்டிருக்கின்றனவோ அப்படியே கால்நடைகளுக்கும் சில ஐரோப்பிய தேசங்களில் இம்மாதிரிக் கம்பெனிகள் ஏற்பட்டிருக்கின்றன. அதாவது ஒரு விவஸாயி தன்னிடத்திலிருக்கும் ஒரு மாடு 50-ரூபாய் பெறுமானால் வருஷம் ஒன்றுக்கு 1-அல்லது $1\frac{1}{2}$ரூபாய் இம்மாதிரிக்கம்பெனிகளுக்குக் கொடுத்துவிட்டு அந்த மாடு எப்போது இறந்துபோனாலும் கம்பெனியிட மிருந்து அந்த 50 ரூபாயையும் பெறலாம். மாட்டுக்குத் தீர்க்காயுஸு இருந்து வெகுகாலம் ஜீவிக்குமானால் சாகிறவரையில் கொடுக்கப்படும் தவணைத்தொகைகளும் வட்டியும் சேர்ந்து கம்பெனிகளுக்கு லாபமுண்டாகும். சீக்ரம் மாடு இறந்துபோகுமானால் விவஸாயிக்கு அதன் க்ரயம் 50-ரூபாயும் வந்துவிடுமாகையால் அது விவஸாயிக்கு லாபம். பர்மாவில் இம்மாதிரி இன்ஷுரென்ஸ் கம்பெனிகள் 23-வரையில் இருக்கின்றனவாம்.—சுதேசமித்திரன்.

# EDUCATION.
## வித்யா விஷயம்.

### Open Air Schools.

திறந்த வெளியில் பள்ளிக்கூடங்கள்:—தேக அஸௌக்யத்தால் ஸாதாரண பாடசாலைகளுக்குப் போகமுடியாத சிறு பையன்களுக்கு இங்கிலண்டில் தனியாக திறந்த வெளியில் பள்ளிக்கூடங்கள் வைத்து நடத்துகிறார்களாம். அந்தப் பள்ளிக்கூடங்களில் அவர்களுடைய ஆகாரத்தைப்பற்றியும், அவர்கள் பகலிலும் இரவிலும் காலங்கழிக்கும் விதத்தைப்பற்றியும் ரொம்பவும் கவனித்து வருகிறார்களாம். அந்தப் பள்ளிக்கூடங்களில் வாசிக்கும் சிறுவர்கள் ரொம்ப நன்மையடைந்து காலக்ரமத்தில் ஸாதாரண பள்ளிக்கூடங்களில் போய் வாசிக்க சக்தியுள்ளவர்களாய்விடுகிறார்களாம்.

### Dr. Ghose's Gift.

டாக்டர் கோஷின் நன்கொடை.—சென்றமாஸம் டாக்டர் கோஷ் கல்கத்தா யூனிவர்ஸிட்டிக்கு 10-லக்ஷம் ரூபாய் நன்கொடை கொடுத்திருப்பதாகச் சொல்லியிருந்தோம். அப்படிக்கொடுப்பதில் 13-நிபந்தனைகள் ஏற்படுத்தியிருக்கிறார். சாஸ்த்ரீயகல்வியும், டெக்னிகல் கல்வியும் வ்ருத்தியடைவதற்காகவும், இந்தியர்களுக்குள், இந்தியர்களின் உதவியால், சாஸ்த்ரீய கல்வி பரவவேண்டும் என்ற எண்ணத்துடனும் இந்த நன்கொடை கொடுத்ததாக டாக்டர் கோஷ் சொல்லுகிறார்.

அந்த நிபந்தனைகளில் சில பின்வருமாறு:—தாம் கொடுத்த தொகையை நூற்றுக்கு 4-வட்டி வரக்கூடியதாய்வட்டிக்குவிட வேண்டும். நான்கு யூனிவர்ஸிடி போதகர்கள் நியமிக்கவேண்டும். அந்த போதகர்கள் எப்போதும் இந்தியர்களாகவே இருக்கவேண்டும். ஒவ்வொரு போதகருக்கும் வருஷச் சம்பளம் 6000 ரூபாயாக இருக்கவேண்டும். இந்தக்கொடை ஸம்பந்தமாக அவர் ஏற்படுத்தியிருக்கும் கமிட்டியார் இஷ்டப்பட்டால் ஒவ்வொரு போதகரும் உத்யோகத்தை வகிக்குமுன் ஐரோப்பா, அமெரிக்கா, ஜப்பான் முதலிய தேசங்களில் போய் சாஸ்த்ரீயப் பயிற்சி யடைய வேண்டும். 8-மாணவர்களுக்கு ஒவ்வொருவருக்கும் வருஷத்துக்கு 900ரூபாய் வீதம் உபகாரச் சம்பளம் கொடுக்கவேண்டும்.

### Indians and Technical Education.

இந்தியர்களும் டெக்னிகல் கல்வியும்.—கொஞ்சகாலத்துக்கு முன்னால் டெக்னிகல் கல்வியைப்பற்றி ஆராய்ச்சிசெய்து ரிபோர்ட் செய்யும்படி ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது. அந்தக் கமிட்டியார் டெக்னிகல் கல்வியைப்பற்றி ஆராய்ச்சிசெய்து ரிபோர்ட்டு எழுதி கவர்ன்மெண்டாருக்கு அனுப்பினார்கள்.

அந்த ரிபோர்ட்டில், இந்தியர்கள் தங்களை வேலைக்கு எடுத்துக்கொள்ளும் தொழிற்சாலையின் ஸொந்தக்காரர்களுடைய இஷ்டப்படி வேலை செய்யாமல் போனதற்கு பின் வருபவை காரணங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள்:—இந்தியாவிலுள்ள சில ஜாதி ஜனங்கள் இயற்கையிலேயே மற்ற ஜாதி ஜனங்களைவிட இந்தவித வேலைக்கு ரொம்பவும் ஏற்றவர்களாயிருக்கிறார்கள். இது விஷயமாக உள்ள பொதுஜன அபிப்ராயம் என்னவென்றால், சிலஜாதி ஜனங்கள் ஸாதாரணமாக டெக்னிகல் வேலைக்குத் தகுந்தவர்களல்ல என்பதே. அவர்களுடைய ஜாதிக்குரிய எண்ணங்களும், மத ஸம்பந்தமான அனுஷ்டானங்களும், தடையாயிருந்து வொர்க்ஷாப்பில் ரொம்ப கடுமையான நிபந்தனைகளுக்கு இணங்க வேலைசெய்ய முடியாமல் போகிறது. அவர்கள் கல்விபயிலும் டெக்னிகல் பாடசாலைகளில் தங்கள் கையால் வேலைசெய்ய இஷ்டப்பட்டாலும் வொர்க்ஷாப்பில் போய் வேலை செய்வதென்றால் இஷ்டப்படாமல் தாங்கள் மற்றவர்களின் வேலையை மேம்பார்வை செய்வதே தங்களுடைய கடமையென்று எண்ணுகிறார்கள்.

சில ஜாதி ஜனங்கள், ஏதாவது ஒரு யூனிவர்ஸிடி பரீக்ஷை தேறிவிட்டால், வொர்க்ஷாப்பில் வேலை செய்வதற்கு ஏற்றவர்கள் அல்லரென்றும், அவர்கள் வொர்க்ஷாப்பில் வேலைசெய்வது கௌரவக் குறைவென்று நினைக்கிறார்கள் என்றும், அவர்களை வேலையில் வைத்துக்கொண்டிருந்தவர்கள் சொல்லுகிறார்கள்.

ஆனால் பார்ஸிகள் இது விஷயத்தில் இப்படியிருக்கவில்லை. பி. ஏ. பரீக்ஷை தேறினபார்ஸிகள் தங்களுக்கு வேலையில் பயிற்சியும் அனுபோகமும் உண்டாகவேண்டுமென்று ஐரோப்பியர்களைப் போலவே எந்தத் தாழ்ந்த வேலை கொடுத்தாலும் செய்ய இஷ்டப்படுகிறார்கள். பி. ஏ. பாஸ்செய்த பார்ஸிகளில் அநேகர் நல்ல தேர்ந்த தொழிலாளிகளாகிறார்கள்.

# ECONOMIC PRODUCTS.
# விலையுள்ள பொருள்கள்.

## Lumite.

லூமைட்.—இந்தப்பெயருள்ள ஒரு கலப்பு உலோகம் ஒன்று புதிதாய்ச் செய்யப் பட்டிருக்கிறது. அது பார்வைக்கு அல்யூமினியத்தைப் போலிருக்கிறது. அல்யூமினியத்தைப் போலவே அதிக லேசானது. செம்பு, நாகம், மாங்கனீஸ், ஸிலிகன், இரும்பு ஆகிய இவைகள் அதில் சேரவில்லை. அதன் துண்டுகளை ஸுலபமாய் பற்றவைக்கலாம். அதை உருக்கி வார்த்து இஷ்டப்பட்ட ஸாமான்களாகச் செய்யலாம். அது த்ராவகங்களாலும், ஸமுத்ர ஜலத்தாலும் கெடுவதில்லை. அது குழாய்கள் செய்வதற்கும், வார்ப்பட ஸாமான்கள் செய்வதற்கும் உதவும். அதை நன்றாய் மெருகிடலாம். அது இஞ்சினியரிங் வேலைகளில் அதிகம் பயன்படும் என்று சொல்லுகிறார்கள்.

## Soap Pod.

சீயக்காய்.—சீயக்காய்ச் செடி வெகுவாய் காடுகளில் வளருகிறது. இது வெகு அடர்த்தியாய் வளரும். செடியில் முள்ளுண்டு. சீயக்காய் பட்டு, கம்பளி வஸ்த்ரங்களை சுத்தம் செய்வதில் ரொம்பவும் உபயோகப்படுகிறது. நூலுக்கு சாயம் போடுவதற்கு முன்னால் நூலை சீயக்காயினால் சுத்தம் செய்தால் சாயம் நன்றாய் ஏறுகிறது என்று சொல்லப்படுகிறது. எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்கையில் இதை ரொம்பவும் உபயோகிப்பது யாவரும் அறிந்த விஷயம். வெள்ளி தட்டங்கள், ஸாமான்கள் முதலியவைகளில் கரைபட்டிருந்தால் அவைகளை சுத்தம் செய்ய சீயக்காயை ரொம்பவும் உபயோகிக்கிறார்கள். வங்காளத்தின் வடபாகங்களில் மீனைக் கொல்வதற்கு இதை ஒரு விஷமாக உபயோகிக்கிறார்களாம்.

## Mineral Production in India.

இந்தியாவில் தாதுப்பொருள்களின் உற்பத்தி.—இந்தியாவிலுள்ள சுரங்கங்களிலிருந்து சென்ற வருஷம் சற்றேறக்குறைய பதினொன்கு கோடி ரூபாய் பெறுமான தாதுப்பொருள்கள் கிடைத்திருக்கின்றன. 1911-ம் வருஷத்தில் 12-கோடி ரூபாய் பெறுமான தாதுப்பொருள்கள் கிடைத்தன. சென்றவருஷம் கிடைத்த நிலக்கரியின் மதிப்பு 4 கோடியே 96 லக்ஷம் ரூபாயாகும். மொத்தம் நிலக்கரியின் நிறை 147 லக்ஷம் டன்னுக்குமேல் ஆகும். 1911-ம் வருஷம் 127 லக்ஷம் டன்தான் கிடைத்தது. 1911-ம் வருஷம் 8 லக்ஷத்து 60 ஆயிரம் டன் நிலக்கரியும், 1912-ம் வருஷம் 8 லக்ஷத்து 97-ஆயிரம் டன்னும் ஏற்றுமதியாயின. ஏற்றுமதி ரொம்பவும் அதிகரிக்காததால் சென்ற வருஷம் அதிகமாகக் கிடைத்த 20 லக்ஷம் டன் நிலக்கரியும் இந்தியாவிலேயே உபயோகமாகியிருக்கிறதென்று தெரிகிறது. இந்திய ரயில்வேக்கள் 5 லக்ஷம் டன் நிலக்கரி அதிகமாக உபயோகித்தன. பாக்கி 15 லக்ஷம் டன் நிலக்கரிவேறு கைத்தொழில்களுக்கு உபயோகிக்க பட்டிருக்கவேண்டும் என்று சொல்லப்படுகிறது. அப்படியானால் இது இந்திய கைத்தொழில்கள் வெகு துரிதமாய் அபிவ்ருத்தியாகி வருகின்றன என்பதற்கு ஒரு அறிகுறியாகும் என்றும் சொல்லப்படுகிறது.

சென்றவருஷம் 3 கோடியே 40 லக்ஷம்ரூபாய் மதிப்புள்ள தங்கம் இந்திய சுரங்கங்களிலிருந்து வெட்டியெடுக்கப்பட்டது. இதில் பர்மாவில் கிட்டத்தட்ட 3 லக்ஷம்ரூபாய் மதிப்புள்ள தங்கமும், நிஜாம் ராஜ்யத்தில் $9\frac{3}{4}$ லக்ஷம் ரூபாய் மதிப்புள்ள தங்கமும், மைஸூர் ராஜ்யத்தில் 3 கோடியே $23\frac{3}{4}$ லக்ஷம்ரூபாய் மதிப்புள்ள தங்கமும், சென்னை ராஜதானியில் $4\frac{1}{4}$ லக்ஷம் ரூபாய் மதிப்புள்ள தங்கமும் கிடைத்தது.

மைகாவின் உற்பத்தி 1911-ம் வருஷத்தையதைவிட 1912-ம் வருஷத்தில் ரொம்ப அதிகரித்திருக்கிறது. சென்னைராஜதானியில் 1911-ம் வருஷத்தில் 7462 அந்தர் மைகா கிடைத்திருக்க, 1912-ம் வருஷம் 13484 அந்தர் மைகா கிடைத்தன.

இந்தியாவில் அகப்படும் பெட்ரோலியம் பெரும்பாலும் பர்மாவில்தான் கிடைக்கிறது. சென்றவருஷம் கிடைத்த மொத்தம் பெட்ரோலியம் கிட்டத்தட்ட 24 கோடியே 90 லக்ஷம் காலன் ஆகும். 1911-ம் வருஷத்தில் 22 கோடியே 57 லக்ஷம்தான் கிடைத்தது. இந்த பெட்ரோலியம் பூமியில் வெட்டப்படும் கிணறுகளில் த்ரவரூபமாய்க்கிடைக்கிறது. இதை சுத்தி செய்து இதிலிருந்து கெரோஸின் முதலிய எண்ணெய்களும் பாரபின், வாஸலின் முதலிய மெழுகுகளும் எடுக்கிறார்கள். சென்றவருஷம் 15 லக்ஷம் டன் உப்பு உற்பத்தி செய்யப்பட்டது. இதன் மதிப்பு வரியைச் சேர்க்காமல் $76\frac{1}{4}$ லக்ஷம் ரூபாயாகும். இதல்லாமல் $5\frac{1}{2}$ லக்ஷம் டன் உப்பு அன்ய தேசங்களிலிருந்து நமது தேசத்துக்கு வந்திருக்கிறது.

# BUSINESS METHODS.
# வ்யாபார முறைகள்.

## Coloured Advertisements.

வர்ணமிட்ட விளம்பரங்கள்.—நாடகம், ஸர்க்கஸ் முதலியவைகளுக்கு வர்ணமிட்ட கடுதாசிகளில் ஸாதாரண கருப்பு மையாலும் மற்ற வர்ணமையாலும் அச்சிட்ட விளம்பரங்களை சுவர்களில் ஒட்டிவைப்பது நமது நேயர்கள் அறிந்த வழக்கம். எந்தவர்ணக்கடுதாசியில் எந்த வர்ணமையால் அச்சிட்டால் அந்த விளம்பரத்தை தூரத்திலிருந்து நன்ருய் வாசிக்க முடியுமென்பதைப்பற்றி சிலபரீக்ஷைகள் ஸமீபத்தில் நடந்தன. மஞ்சளின்மேல் கருப்புமையை அச்சிட்டால்தான் தூரத்திலிருந்து பார்ப்பவர்களுக்கு நன்ருய்த் தெரியும் என்று அந்தப்பரீக்ஷைகளால் தெரியவருகிறது. அதற்கு அடுத்தபடியாக வரும் வர்ணங்கள் பின்வருமாறு.

(2) வெள்ளையின்மேல் பச்சைவர்ணம். (3) வெள்ளையின்மேல் சிவப்பு. (4) வெள்ளையின்மேல் நீலம். (5) நீலத்தின்மேல் வெள்ளை. (6) வெள்ளையின்மேல் கருப்பு. (7) கருப்பின்மேல் மஞ்சள். (8) சிவப்பின்மேல் வெள்ளை. (9) பச்சையின்மேல் வெள்ளை. (10) கருப்பின்மேல் வெள்ளை. (11) மஞ்சளின்மேல் சிவப்பு. (12) சிவப்பின்மேல் பச்சை. (13) பச்சையின்மேல் சிவப்பு. ஸாதாரணமாய், வெள்ளைக்கடுதாசியில் கருப்புமையால் அச்சிடுவது ஆருவதாக இருக்கிறது என்பது கவனிக்கத்தக்கது.

## Ingenious Advertising.

ஸாமர்த்யமாய் விளம்பரங்கள் செய்தல்.—ப்ரான்ஸ் தேசத்தில் வ்யாபாரிகள் தங்களுடைய ஸாமான்களைப் பற்றிய பெரிய விளம்பரப்படங்களை ரெயில் ரோட்டுகளின் இருபுறங்களிலும் ரெயில் வண்டியில் போகிறவர்கள் பார்த்து வாசிக்கட்டும் என்று வைத்திருந்தார்கள். இப்படிச்செய்ததில் நாட்டின் இயற்கை யழகு குறைவதாயிற்று. அதனுல் இப்படி விளம்பரங்கள் செய்வது கூடாதென்று ஸமீபத்தில் சட்டம் ஏற்படுத்தினுர்கள். அதன்மேல் வ்யாபாரிகள் ரெயில் வண்டியின் இருபுறத்திலும் நிலங்கள் வாங்கி அவைகளில் அழகும் ப்ரகாசமுமான பூச்செடிகளை வளர்த்து தங்களுடைய ஸாமான்களின் பெயர் வண்டிகளில் ப்ரயாணம் செய்பவர்களுக்கு நன்ருய்த் தெரியும்படிக்கு ஸாமான்களின் பெயருக்குத் தகுந்தபடி ஷை புஷ்பச்செடிகளை வரிசையாக அமைத்து வ்ருத்தி செய்கிருர்களாம். இதனுல் ப்ரயாணிகள் புஷ்பச்செடிகள் என்ன வார்த்தைகள் தெரியும்படி அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதை வாசித்து இன்ன விளம்பரமென்பதை அறிந்து கொள்கிருர்கள்.

## Remember Your Customer's Names.

வாடிக்கைக்காரர்களின் பெயர்களை ஞாபகத்தில் வைத்துக்கோள்.—வ்யாபாரிகள் தங்கள் கடைகளுக்கு ஒரு தடவை வந்தவர்கள் திரும்பவும் வந்தால் அவர்களை அடையாளம் கண்டு பிடித்துக் கொள்ள வேண்டியது ரொம்ப அவச்யமானது. அதற்காக வ்யாபாரிகள் முகஸாமுத்ரிகா சாஸ்த்ரம் தெரிந்திருக்க வேண்டுமென்பதல்ல. தங்கள் கடைக்கு ஒரு தடவை வருபவர்கள் மறுபடியும் வந்தால் அவர்களின் முக அடையாளத்தையும் பெயர்களையும் கூடிய மட்டில் தெரிந்திருக்கப்பழகினுல் அவர்களுடைய வ்யாபாரம் நன்ருய் வ்ருத்தியடைய ஒரு பெரிய ஸாதனமாகும். சிலர் "நான் ஒருவரை ஒருதடவை பார்த்தால் அவரை மறுபடியும் நான் மறப்பதே யில்லை" என்று சொல்வதுண்டு. ஆனுல் அதெல்லாம் வீண்வார்த்தையும் பொய்யும் தவிர உண்மையாக மாட்டாது. எல்லாருடைய பெயரையும் முகத்தையும் மறக்காமல் ஞாபகத்தில் வைத்திருப்பதென்பது முடியாத காரியம். ஆனுல் எவ்வளவுமட்டில் வாடிக்கைக்காரர்களுடைய பெயரையும் முகத்தையும் மறக்காமல் ஞாபகத்தில் வைத்திருக்கலாமோ அவ்வளவும் நன்மை பயக்கக்கூடியதே.

வாடிக்கைக்காரரைப் பெயர் சொல்லியோ வேறு விதமாயோ அழைத்து "வாருங்கள் க்ஷேமமா?" என்று வ்யாபாரி சொன்னுல் வாடிக்கைக்காரர் வ்யாபாரி தம்மை மறக்கவில்லை யென்று ஸந்தோஷப்படுகிருர். வ்யாபாரி ரொம்ப புத்திகூர்மையானவரென்றும், வாடிக்கைக்காரரிடத்தில் ரொம்ப மரியாதை யுள்ளவரென்றும் அவர்களுடைய தேவைகளை ஸரிவர கவனிப்பவரென்றும் எண்ணுகிருர். தம்மை ஞாபகத்தில் வைத்திருப்பதால் தம்மிடம் அதிக கவனம் செலுத்துகிருர் என்றும் எண்ணுவார். இவற்ருல் அவருக்கு அந்தக் கடைமேல் ஒரு விருப்பம் உண்டாகிவிடும். அவர் அந்தக் கடைக்கே அடிக்கடி வர ஹேதுவாகும், பொதுவாய் ஜனங்கள் தங்களைப்பிறர் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள ப்ரியப்படுவார்கள். இது மனிதர்களின் ஒரு ஸ்வபாவமாகும். இதை வ்யாபாரி அறிந்து கொண்டு தனது வ்யாபாரத்துக்கு ஸாதகமாக உபயோகிப்பது நன்மையாகும்.

# SCIENCE, MACHINERY AND INVENTION.
## சாஸ்த்ரமும், யந்த்ரங்களும், நூதன கற்பிதமும்.

### Artificial Rice.

செயற்கை அரிசி.—ஜப்பானில் செயற்கையரிசி செய்கிறார்களாம். அது, கோதுமை, பார்லி, இயற்கை யரிசி ஆகிய இவைகளைவிட அதிக உணவுஸத்துக் கொண்டதாக இருக்கிறதாம். இதை சோளத்திலிருந்து செய்கிறார்கள். இயற்கை யரிசியின் விலையில் பாதிக்கு இந்த செயற்கை யரிசி விற்கப்படுகிறதாம். மிராசுதார்களுக்கு ஆபத்தா என்ன?

### Plants and Coolness of Atmosphere.

செடிகளும் ஆகாயத்தின் குளிர்மையும்.—புல் தரைகளும், படுகைகள் காடுகளும் இருப்பதனால் அவைகளுக்குப் பக்கத்திலுள்ள ஆகாயம் குளிர்ச்சி யடைந்து, அவைகளின் பக்கம் வஸிப்பவர்களுக்கு குளிர்ந்த காற்று கொடுக்கிறதென்பது பலரும் ஒப்புக் கொண்ட அபிப்ராயம். ஆயினும் அது அப்படியல்ல வென்று ஒரு ப்ரெஞ்ச் சாஸ்த்ரி சொல்லுகிறார். மிருகங்களைப் போலவே மரஞ் செடிகளும் உஷ்ணத்தை க்ரகித்துக்கொண்டு வெளியில் விடுகின்றன வென்று அவர் சொல்லுகிறார். அவரும் அவருடைய ஸகபாடி ஒருவருமாக சில பரீக்ஷைகள் செய்துபார்த்தார்களாம். அவைகளால் செடியிலுள்ள சாறானது அதனருகிலுள்ள ஆகாயத்தைவிட 2-டிக்ரி அதிக உஷ்ணமாயிருக்கிற தென்று தெரிய வந்ததாம். செடியின் தண்டுகளில் நுனியின் உஷ்ணம் காற்றின் உஷ்ணத்தை விட 4-டிக்ரி வரையில் அதிகமாயிருந்ததாம். எவர் என்ன சொன்னபோதிலும் கோடை காலத்தில் ஜனங்கள் தங்கள் வீட்டிலும் பங்களாவிலும் செடிகொடிகள் வளர்த்து அவைகளில் குடியிருக்காமலிருக்கப் போவதில்லை. ஏனென்றால் மேல் நாட்டு சாஸ்த்ரீகளில் ஒருவர் இன்று ஒரு விஷயம் வித்தாந்தம் செய்வதும் நாளை வேறொருவர் அது தவறென்று ஸாதிப்பது மாயிருக்கிறது.

### A New Method in Growing Shade Trees.

நிழல் மரங்கள் வளர்ப்பதில் ஒரு நவீனமுறை.—வெயில் காலத்தில் சாலைகளில் நடப்பவர்களுக்கு நிழல் தரும்படி மரங்கள் வளர்க்கிறார்கள். மரங்கள் பெரியவையாகி நிழல் கொடுக்க அநேக வருஷங்கள் செல்லுகின்றன. இப்போது கண்டு பிடிக்கப்பட்டிருக்கிற ஒருபுது முறையால் இரண்டு மூன்று வருஷகாலத்திலேயே 15,20 வருஷமான மரங்கள் தரும் நிழலைப் போல நல்ல நிழல் கொடுக்கும்படி மரங்கள் வளர்ந்து விடுகின்றனவாம். இதை ஒரு ரயில்வே கம்பெனியார் அனுஷ்டிக்கப் போகிறார்களாம். எல்ம் என்னும் ஒருவித மரத்தை சிறியதாயிருக்கும்போது பூமியிலிருந்து வேரோடு தோண்டியெடுத்து விடுகிறார்கள். பிறகு மரம் வைக்கவேண்டிய இடத்தில் குழி தோண்டி வேர்ப்பாகம் ஆகாயத்தில்மேல் நோக்கியும், இலை, கிளைகள் இருக்கும் பாகம் கீழ்நோக்கி பூமியிலுமாக நடுகிறார்களாம். பிறகு மரம்வளர ஆரம்பிக்கிறது. மேலே யுள்ள வேர்களில் இலை உண்டாகி கிளைகள் விட்டு நிழல் தருகின்றன. கீழே பூமியில் நடப்பட்ட கிளைகளும் இலையும் உள்ளபாகம் வேராகமாறிவிடுகிறது. இந்தமாதிரி தலைகீழாய் நட்டுப்பயிர்செய்யப்பட்ட மரங்கள் லண்டனில் கென்ஸிங்ஸ்டன் கார்டன்ஸில் (தோட்டங்களில்) இருக்கின்றனவாம்.

### An Egg Boiler.

முட்டை வேகவைக்கும் ஒரு கருவி:—முட்டைகளை வேகவைக்கவேண்டுமானால், முட்டைகளைக் கொதிக்கும் ஜலத்தில் ஒவ்வொன்றாய்ப்போட வேண்டியிருக்கிறது. இதனால் முட்டைகள் உடைந்து போகக்கூடும். மேலும் முட்டைகளைவெந்தபின் வெளியிலே எடுக்கும்போது ஒவ்வொன்றாய் எடுக்கவேண்டியிருப்பதால் ஒரு முட்டை அதிகம் வெந்தும் ஒரு முட்டை குறைவாய் வெந்தும் போய் ஒரே விதமாக இருப்பதில்லை. இந்தக் குறைகளை நீக்க இங்கிலண்டில் ஒருவர் ஒரு கருவி செய்திருக்கிறார்.

அதை நமது ஊர்களிலும் செய்து கொள்ளலாம். $5\frac{1}{2}$ அங்குலம் குறுக்களவுள்ளதும், 1 அங்குலம் ஆழமுள்ளதுமான ஒரு வட்டமான தட்டம், தகரத்தாலாவது, அலூமினியத்தாலாவது செய்துகொள்ளவேண்டும். அதில $1\frac{3}{8}$ (ஒன்றேகாலேயரைக்கால்) அங்குலம் குறுக்களவுள்ள 6 வட்டமான த்வாரங்களும் $\frac{1}{2}$ அங்குலம் குறுக்களவுள்ள வட்டமான பல த்வாரங்களுமை தட்டத்தில் செய்யவேண்டும். தட்டத்தின் நடுவில் பொருத்தப்பட்டதாக தூக்குவதற்கு ஒருபிடி அமைக்கவேண்டும். முட்டைகளின் குருகினபக்கத்தை பெரிய த்வாரங்களில்வைத்து அந்தத் தட்டத்தை அப்படியே வேறொரு பாத்ரத்தில் கொதித்துக் கொண்டிருக்கும் ஜலத்தில் வைத்து விடவேண்டும். நன்றாய் வெந்தவுடன் கைப்பிடியால் எடுத்தால் எல்லாம் ஒரேதடவையில்எடுக்கப்பட்டு விடுகிறது.

# LAW.
# சட்டம்.

## Re-marriage & First Husband's Property.

புனர் விவாகமும் முதல் புருஷனுடைய ஸொத்தும்.—ஒரு மறவ ஸ்த்ரீ தன் புருஷன் இறந்துபோனதும் அவன் சொத்துக்களுக்கெல்லாம் வார்ஸானுள்; புருஷனிறந்த கொஞ்சகாலத்துக்குப் பிறகு அவள் புனர் விவாகம் செய்து கொண்டாள். இவளுக்கு முதல் புருஷன் ஸொத்தின்மேல் பாத்ய முண்டா என்ற வ்யாஜ்யம் ஹைகோர்ட்டுக்கு ஸமீபத்தில் விசாரணைக்கு வந்தது. அவள் புனர் விவாகம் செய்துகொண்டதால் அந்த ஸொத்துகளின் மேலுள்ள பாத்யத்தை இழந்துவிட்டாளென்று தீர்மானிக்கப்பட்டது.

## Succession.

வார்ஸுக்ரமம்.—ஒருவனுடைய அத்தைபிள்ளையும், மாமாவும் அதாவது தாயாரின் ஸஹோதரனும், ஆத்ம பந்துக்களாவார்கள். இவர்களில் அத்தை பிள்ளைக்கு மாமாவைவிட ஸொத்துக்கு அதிகபாத்ய முண்டு. 1913. ம. வா. நோ. 202.

## Law Regulating Interest.

வட்டியைப் பற்றிய சட்டம்.—இந்தியாவிலுள்ள ஸ்வதேச ஸமஸ்தானங்கள் பலவற்றில் புதுக்கோட்டை ஒன்று. அதில் ப்ரிட்டிஷ் சட்டப்படி எல்லா வ்யவகாரங்களும் அனுஷ்டிக்கப்பட்டுவரினும், கடன்விஷயத்தில் மட்டும் அதைப் பின்பற்றவில்லை. ப்ரிட்டிஷ் ஜில்லாக்களில் ஒருவன் 100-ரூபாய் கடன் வாங்கினால் அதற்கு வட்டியுள்பட வ்யாஜ்ய காலத்தில் 300, 400 ரூபாய் ஆனாலும், அதற்குத் தீர்ப்பு செய்யப்படுகிறது. உதாரணமாக: கல்கத்தா ஸ்மால்காஸ்கோர்ட்டில் ஸமீபத்தில் ஒரு வ்யாஜ்யம் தீர்ப்புக்கு வந்தது. ஒருவர் 71 ரூ-கடன்வாங்கி ஒருவருஷத்துக்கு கொஞ்சம் மேலானதில் முதலும் வட்டியும் சேர்ந்து 515 ரூ ஆயிற்றும். ஜட்ஜவர்கள் கடன் கொடுத்தவரை அவருக்கு கிடைக்கவேண்டிய தொகையைக் கொஞ்சம் குறைக்கும்படி சொன்னார். கடன் கொடுத்தவர் ஒரே பிடி வாதமாய் 500 ரூ-க்கு குறைந்து வாங்கிக் கொள்ளமாட்டேனென்று சொல்லிவிட்டார். வட்டி சட்ட விஷயத்தில் கோர்ட் ஒன்றும் செய்யமுடியாத காரணத்தால் வேறொன்றும் தம் அதிகாரமில்லாததால் அவருக்கு ஒரு புத்திமதியைக் கற்பிப்பதற்காக் கோர்ட் செலவைத் தள்ளிவிட்டு, 500 ரூயை 8-வருஷங்களில் மாதத்துக்கு ரூ 5-3-4வீதம் ப்ரதிவாதி கொடுக்கும்படி ஜட்ஜ் தீர்மானம் சொன்னார்.

புதுக்கோட்டை ஸமஸ்தானத்திலோ அஸல் தொகை எவ்வளவோ அதற்குமேல் வட்டி எவ்வளவானாலும் அஸலும் வட்டியும் சேர்ந்து அஸல் தொகையின் இரட்டிப்பு மடங்குக்குத்தான் கோர்ட்டார் தீர்மானம் சொல்கிறார்கள்.

## A Defamation Suit.

ஒரு மான நஷ்ட ப்ராது.—கோடூர் என்பது கடப்பை ஜில்லாவிலுள்ள ஒரு ரயில்வே ஸ்டேஷன். இந்த ஊரிலிருந்து சரக்குகள் வெளியூர்களுக்கு அனுப்பப்படுவது வழக்கம். ப்ரத்யேகமாய்க் கூலிக்காரர்களை வைத்து ரயிலில் சரக்கை ஏற்றவோ இறக்கவோ வ்யாபாரிகள் ஸ்டேஷன் மாஸ்டருக்கு பணம் கொடுக்கும் வழக்கம் உண்டாம். சில வ்யாபாரிகள் தங்களிடமிருந்து ஸ்டேஷன் மாஸ்டர் லஞ்சம் வாங்கிக் கொண்டு தங்கள் சரக்குகளை அனுப்பவில்லை யென்று ட்ராபிக் மானேஜருக்கு பெடிஷன் எழுதினார்கள். இந்த ஸ்டேஷன் மாஸ்டர் முந்தியிருந்த ஸ்டேஷன் மாஸ்டர்களின் வழக்கப்படியும் மாமூல்படியும் விதிப்படியும் பணம் வாங்கினாரே தவிர, அதற்கு எதிரிடையாய் ஒன்றும் செய்யவில்லை யென்று ட்ராபிக் மனேஜர் பதில் சொல்லிவிட்டார். இந்த முடிவில் திருப்தி அடையாதவர்களாய் வ்யாபாரிகள் ஸிம்லாவிலிருக்கும் ரயில்வே போர்ட் டிரெக்டருக்கு முதல் கம்ப்ளெயிண்ட் காப்பியை அனுப்பினார்கள். ஆகவே ஸ்டேஷன் மாஸ்டா வ்யாபாரிகள் ஆதிமுதல் தன்னை அவமானப் படுத்த வேண்டுமென்று இப்படி செய்து வருவதால் மான நஷ்டம் அவர்கள் கொடுக்கவேண்டுமென்று சென்னை ப்ரஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் அவர்களை ப்ராஸி கூட் செய்தார்.

சரக்குகளை வண்டியில் ஏற்றவும் இறக்கவும் பணம் ஸ்டேஷன் மாஸ்டர் வாங்குவதை ரயில்வே கம்பனியார் ஒப்புக்கொண்டிருந்தால் அது மகாகெட்டவழக்கமென்று மாஜிஸ்ட்ரேட் அபிப்ராயப்பட்டார். இதுவே வ்யாபாரிகள் புகார் செய்யத்தகுந்த காரணமென்றார். வ்யாபாரிகள் ரயில்மேலதிகாரிகளுக்கு அனுப்பிய புகார் மனுவில் அடங்கியுள்ள வாக்யங்கள் இ. பி. கோ 499-வது பிரிவு 8-வது விலக்கு விதியால் ஆதரிக்கப்படுகின்றன என்றும், வ்யாபாரிகள் நல்ல எண்ணத்துடன் புகார்செய்திருக்கிறார்களென்றும் மாஜிஸ்ட்ரேட் அபிப்ராயப்பட்டு ஸ்டேஷன் மாஸ்டர் கேஸைத் தள்ளிவிட்டார்.

# MEDICINE.
## வைத்யம்.

### Paralysis Caused by Flies.

பார்சவாயு ஈக்களால் உண்டாகிறது.—யுனைடெட் ஸ்டேஸ் ஆப் அமெரிக்காவைச் சேர்ந்த பென்ஸில்வேனியா யுனிவர்ஸிடியைச் சேர்ந்த டாக்டர் மில் என்பவர் பார்சவாயு வீடுகளில் பறந்து கொண்டிருக்கும் ஈக்களால் உண்டாகிறதென்று கண்டு பிடித்திருக்கிறார். இதை வேறு ஒரு டாக்டரும் ஸரியென்கிறார்.

### Coal Smoke is also a Cure.

நிலக்கரிப் புகையும் ஒரு மருந்து.—நிலக்கரிப் புகை ஸுகாதாரத்துக்கு விரோதமென்று நாமெல்லாம் எண்ணிக்கொண்டிருக்கிறோம். ஆனால் லண்டன் ரயில்வே கம்பெனி ஒன்றில் இன்ஸ்பெக்ட்டராயிருந்த ஒருவர், தாம் 49-வருஷகாலமாக நாளெல்லாம் நிலக்கரிப்புகையை ச்வாஸித்ததாயும், அப்புகை மார்பு நோயை யுண்டாக்கும் ஸூக்ஷ்மமான விஷ ஜீவிகளைக் கொன்று விட்டபடியால் தமக்கிருந்த மார்புநோய் நீங்கினதென்று சொல்கிறார்.

### Health Hints.

தேகாரோக்யக் குறிப்புகள்.—ஜலதோஷம், ஜுரம்தலைநோய் ஆகிய நோய்கள் ஸர்வஸாதாரமானவை. இவைகளால் அடிக்கடி உபத்ரவப் படுகிறவர்கள் சற்றே ஜாக்ரதையாயிருப்பார்களானால் இவைகள் வராமலே தடுத்துவிடலாம். ஒரு அனுபோகஸ்தர் அடியில் கண்ட ஒன்பது குறிப்புகளை எல்லாரும் ஞாபகத்தில் வைத்து அவைகளின்படி நடந்தால் இந்த வ்யாதிகளின் உபத்ரவமில்லாமல் தேகஸுகமாய்வாழலாமென்று சொல்கிறார். அவைகளாவன: (1) நைட்ரோஜன் ஸத்து சேர்ந்த ஆகாரங்களைச் சாப்பிடுதல்; (2) நாம் சாப்பிடும், தங்கும், உறங்கும் அறைகளில் தாராளமாய்க் காற்று வரவும் போகவும் திறந்த ஜன்னல்களை வைத்தல்; (3) குளிர் காலத்தில் குளிரான ஊர்களில் வீடுகளை உஷ்ணமாக வைத்துக்கொள்ளுதல்; (4) பாலைக்காய்ச்சிக் குடித்தல்; (5) இரவில் 8 மணி நேரம் தூங்குதல், இது ஸௌகரிய மில்லாவிட்டால் இரவில் 7மணிநேரமும் பகலில் 1 மணிநேரமும் தூங்குதல்; (6) ஜீரணசக்தி குறைவாயிருந்தால் சாப்பிடுவதற்கு முன்னும்பின்னும் கால்மணி ஸாவகாசம் சாய்ந்து கொண்டு படுத்திருத்தல்; (7) இடுப்பில் கெட்டியாய் துணி சுட்டிக்கொள்ளக்கூடாது. ஏனெனில் ச்வாஸம் தடைபடும். ஆகையால் தளர்ச்சியாய் உடை உடுத்திக் கொள்தல்; (8) ப்ரதிதினமும் க்ரமமாய் திறந்த வெளியில் தேகப்பயிற்சி செய்தல்; (9) ஸௌகர்யமுண்டானால், காலநீதி ஸுகமாயிருக்கும் பொழுது மைதானத்தில் கூடாரம் அடித்து வஸித்தல்; அலுவலில்லாமலிருந்தால் மனதுக்கு ப்ரீதியாயுள்ள கார்யங்களேதாவதொன்றைச் செய்தல்.

### Milk Diet.

பால் ஆகாரம்.-பாலைப்போல திவ்யமான ஆகாரம் வேறொன்றில்லை. பாலைக்காய்ச்சியே சாப்பிடவேண்டும். சூடு தேகத்தில் ரொம்ப அதிகமாயிருந்தால் பசும்பாலைக் கறந்தவுடன் நுரையுடன் சாப்பிடுவது நல்லது என்றும், அதனால் சூடு சாந்தமாகுமென்றும் சொல்லிக்கொள்கிறார்கள். ஆனால் பச்சைப்பாலை சாப்பிடுகிறவர்கள் ஜீரணமாகாதகாரணத்தால் வாயுவதிகரித்து தொந்திரை யுண்டாவதாக முறையிடுவதையும் கேட்கிறோம். பாலிலிருக்கும் கேஸீன் என்னும் ஸத்தானது பாலைக்காய்ச்சிவிட்டால் ஸுலபமாய் ஜீரணசக்தியடையும் மாறுதலை யடைகிறது. இது காய்ச்சாத பாலில் திரிந்துபோவதால் குடலிலும் இரைப்பையிலும் கோளாறுகளுண்டாகின்றன. அஜீரணமும் அதனால் பல தொந்தரவுகளும் விளைகின்றன. இந்த விஷயத்தில் தாய்மார்கள் குழந்தைகளைப் பால் கொடுத்து போஷிப்பதில் மிகவும் கவனம் செலுத்த வேண்டும்.

### Leprosy.

குஷ்டரோகம்.—மேஜர் ராஸ்ட் என்பவர் குஷ்டரோகத்தைப்பற்றி லண்டனில் ஒரு ப்ரஸங்கம் செய்தார். அவர்தமது ப்ரஸங்கத்தில் குஷ்டரோகஸ்தர்களினுடைய துணிகளால்தான் ஷை வ்யாதி பெரும்பாலும் பரவுகிற தென்றும், வ்யாதிஸ்தர்களை மற்றவர்களுடன் சேராமல் பிரித்துவைத்தும், துணிகளிலுள்ள வ்யாதிக்ருமிகளை உஷ்ணத்தால் போக்கடித்தும், ஸரியானபடி துணிகளை வெளுத்தும் வ்யாதியைத்தடுக்கவேண்டும் என்றும் வற்புறுத்திக்கூறினார்.

# FUN AND ANECDOTE.
## வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

### The Motherly Affection.

தாயின் அபிமானம்.—பெற்றமனம் பித்து, பிள்ளைமனம் கல்லு - என்பதுஒரு பழமொழி. தாய் பிள்ளைமேல் அபிமானம் கொள்வது மனுஷ்ய ஜாதியில் மாத்ரமல்ல. கீழ்ஜாதிகளாகிய ம்ருகங்களிலும் தாய் அபிமானமாகிய பாசம் ரொம்ப பலமாயிருக்கிறது. ஸமீபத்தில் இங்க்லண்டில் ஒரு குடியானவன் பத்து மைல் தூரத்திலுள்ள ஒரு காட்டுக்கு விறகு வெட்டி வரப்போனான். அவனோடுகூட அவனது நாயும் சென்றது. விறகுவெட்டி வீட்டுக்குத் திரும்பிப் போகையில் சூலாயிருந்த அவனது நாய் மூன்று குட்டிகள் போட்டது. அவன் நாயைமாத்ரம் வண்டியில் ஏற்றிக்கொண்டு வீட்டுக்குத் திரும்பிவிட்டான். அன்றிரவு நாயானது காட்டுக்கு மூன்றுதடவை நடந்து ஒவ்வொரு தடவையிலும் ஒருகுட்டியாகக்கௌவிக்கொண்டு வந்து சேர்த்தது. இப்படி அந்த இரவில் 60 மைல்தூரம் ப்ரயாணம் செய்துவிட்டது. ஆனால், பாவம்! இவ்வளவுதூரம் அலைந்ததால் களைத்துப்போய் ஆடுமாடுகள் இருக்கும் பட்டியில், குட்டிகளினருகே படுத்துச் செத்துக் கிடந்தது. நாய்க்கும் தனது குட்டிகளின்மேல் அன்பு உண்டுஎன்பதை யறிந்து, குடியானவன் அவைகளையும் வண்டியில் போட்டுக்கொண்டு போயிருந்தால் நன்றாயிருந்திருக்கும்.

### A Repartee.

சமத்காரமான மறுமொழி.—ஒரு ஜெயிலில் கடியாரம் திருடினவனும், மாடுதிருடினவனும் சிக்ஷையடைந்திருந்தார்கள். ஒருவன் மேல் மற்றவனுக்கு க்ஷாத்ரம். ஒருநாள் மாட்டுத்திருடன் கடியாரத் திருடனை, "மணியென்ன இப்பொழுது?" என்று கேட்டதற்கு, கடியாரத்திருடன், "பால்கறக்கிற வேளை," என்று சமத்காரமாய் பதில் சொன்னான்.

### Cost of Study.

படிப்புச் செலவு.—தந்தை—படிப்புக்கு இவ்வளவு பணச்செலவாகு மென்று நான் நினைக்கவேயில்லை.

மாணவப்பிள்ளை.—ஆமாம்; ஆமாம்; நான் படித்தது எவ்வளவு கொஞ்சமென்பது உங்களுக்குத் தெரியாதல்லவா?

### Mischievous Chaps.

துஷ்டப் பிள்ளைகள்.—இருபிள்ளைகள் ஒருவனை ஒருவனடித்து சண்டை போட்டுக்கொண்டிருக்கையில், அவ்வழி சென்ற உபாத்யாயர் "கோவிந்தா! உன் கண்ணுக்கென்ன? ஒரு மாதிரியிருக்கே. இருக்கட்டும், நீயும் அவனும் இனி சண்டை போட்டுக் கொண்டால், இருவரையும் நன்றாய் அடிப்பேன்" என்று மிரட்டினார். கோவிந்தன், "ஐயா! தங்களுக்கு அவ்வளவு ச்ரமம் வேண்டாம். கோபாலனுக்கு போதுமான அளவு கிடைத்து விட்டது." என்று தைரியமாய்ச் சொன்னான்.

### Long Life.

தீர்க்காயுஸு. கோபாலன்.—என் பாட்டனார் 94 வருஷம் இருந்தார்.

ராமன்.—இதென்ன? என் பாட்டி சாகிறபொழுது 103 வயது. இன்னும் சாகாதவர் பலர் எங்கள் குடும்பத்திலிருக்கிறார்கள்.

### Two Big Liars.

இரண்டு ஜகப்புரட்டர்கள்.—ராமேச்வர யாத்ரி:—நான் மார்க்கத்தில் பெரிய பெரிய அரைக்கீரைக் காம்புகளைப் பார்த்தேன். ஒவ்வொன்று ஐப்பது கஜம் சுற்றளவுள்ளது. உயரத்தில் பனைமரம் அதற்கு முளைபோலக் காணப்படும்.

காசியாத்ரி.—நான் பானைகளைப் பார்த்தேன். அப்பா, அவைகள் எவ்வளவு பெரியன என்று சொல்வேன்! ஒவ்வொன்றின் அடிச்சுற்றளவு அறுபது மயிலுக்கு குறைந்திராது.

ரா. யா.—அவ்வளவு பெரிய பானைகள் எதற்காக?

கா. யா.—ஒரு வேளை தாங்கள் பார்த்து வந்ததாகச் சொன்ன அரைக்கீரைக் காம்புகளைச் சமைக்கவோ, என்னவோ?

### No Great Loss.

ப்ரமாத நஷ்ட மொன்றுமில்லை:—ஒரு கனவான் பத்ரிகை விற்போனிடமிருந்து ஒரு பத்ரிகையை வாங்கிக்கொண்டு ரூபாய்க்கு சில்லரை கேட்டார். அப்பத்ரிகை விற்கிறவனிடம் சில்லறையில்லையாதலால் அவன் கனவானைப் பார்த்து, "ஐயா! என்னிடம் சில்லறையில்லை. நாளை கொடுத்தால் வாங்கிக்கொள்கிறேன்." என்று சொல்ல, அக்கனவான், "நாளைக்குள் நான் இறந்து போய்விட்டால்?" என்றார். "அதனால் ப்ரமாத நஷ்டமொன்றும் உண்டாய் விடாது." என்று பத்ரிகை விற்போன்சொன்னான்,

# CURIOSITIES.
## விநோதங்கள்.

### A Man's Curious Diary.

ஒரு மனிதனின் விநோதமான டையரி:—ஜர்மனி தேசத்தாரொருவர் ஸமீப காலத்தில் தமது 73-வது வயதில் இறந்து போனார். அவருடைய தினஸரிக் குறிப்புப் புஸ்தகத்தில் (டையரி) சில விநோதமான விஷயங்கள் காணப்படுகின்றன. அவர் சுருட்டுப் பிடிக்க ஆரம்பித்த 52 வருஷகாலத்தில் 6,28,715 ஸிகெரெட்டுகள் பிடித்திருக்கிறாராம். இதில் 49,692 ஸிகெரெட்டுகள் ஸ்னேகிதர்கள் இனாமாகக்கொடுத்தவையாம். பாக்கி ஸிகெரெட்டுகள் அவர் 32, 850 ரூ. கொடுத்து வாங்கிப் பிடித்ததாம். அதே 52 வருஷத்துக்குள்ளாக அவர் 6,41,873 க்ளாஸ் சாரயம் குடித்திருப்பதற்கு ஒன்றரைலக்ஷம் ரூபாய் செலவ யிருக்கிறதாம். "நான் பார்த்ததும் அனந்தம்; செய்ய ஆரம்பித்ததும் அனந்தம். ஆனால், நான் செய்துமுடித்தது மட்டும் ஒன்று கூடயில்லை." என்று டைரியின் கடைசியில் அவர் எழுதி யிருக்கிறாராம்.

### A Gluttonous Snake.

ஒரு பெருந்தீனிப்பாம்பு.—பம்பாய் மாகாணத்திலுள்ள அமதாபாத் ஜில்லாவைச்சேர்ந்த ஒரு க்ராமத்தில் ஒரு ஐ. ஸி. எஸ் உத்யோகஸ்தர் வேட்டைக்குப் போயிருந்தபொழுது ஒரு பெரும் பாம்பைச் சுட்டாராம். அது 8 அடி நீளமிருந்ததாம். இரையெடுத்துப் படுத்திருந்ததாம். குண்டு பட்டுத்துளைத்துக் கொண்டுபோன காயத்தில் ஒரு சிறகு தெரிய, வேலையாட்கள் பாம்பின் வயிற்றிலிருந்து ஒன்றன் பின் ஒன்றாய் 6 வாத்துகளை எடுத்தார்களாம். அவைகளையெல்லாம் பாம்பு விழுங்கி அதிக காலமாக வில்லையாதலால், அவைகள் உயிரோடிருந்தனவாம்.

### Playing Cards.

ஆடும் சீட்டு.—சீட்டு விளையாட்டு அல்லது கடுதாசி ஆட்டம் அனேகருக்கு ஸர்வஸகஜமான பொழுது போக்காக விருக்கிறது. சக்ரவர்த்தி முதல் ஸாதாரண கூலியாள் வரையில் இவ்வாட்டத்தில் ப்ரியப்படாதவர்கள் அபூர்வம். இந்த ஆட்டத்தில் உட்கார்ந்து விட்டால் உலகமே மறந்து போகும். இந்த ஆட்டம் தெரியாதவர்கள் ஸபைக்குதவாதவர்களென்று கூட இவ்வாட்ட ப்ரியர்கள் பரிஹஸித்துச்சொல்வது வழக்கம். பொழுது போக்காக ஆடுவதில் தோஷமில்லை. பந்தயம் வைத்தாடுவது சட்டவிரோதம். புத்தி தீக்ஷணயமும், ஞாபக சக்தியும், கணிதத்தில் திறமையும் இவ்வாட்டக்காரர்களுக்கு எவ்வளவு இருந்தாலும் அனுகூலமே. சிலர் இந்த ஆட்டத்தில் உட்கார்ந்து விட்டார்களானால் ஊண் உறக்கமொன்றையும் கவனியார்கள். இதில் சிலருக்கு பெரும் பைத்யம். சிற்க, ஜர்மன் சக்ரவர்த்தி புதிய மாதிரி உருவங்கள் போட்டு சீட்டு செய்து அதை விளையாட உபயோகித்து வருகிறார். சீட்டில் ராஜா, ராணி, ஜாகி ஆஸ், இவை வகைக்கு நான்கு சீட்டுகளுண்டு. சக்ரவர்த்தி அவர்கள்ஆடும் சீட்டுக்கட்டில், இங்க்லண்ட் ஜார்ஜ், இட்டலி விக்டர், ருஷியா ஸார், ஜர்மன் கெய்ஸர் ஆகிய 4 அரசர்களின் உருவம் 4 ராஜா சீட்டுகளிலும்; மேரி, எலீனா, கெய்சரினா, ஸாரினா ஆகிய 4 ராணிகளின் உருவங்கள் 4 ராணிச்சீட்டுகளிலும்; விசேஷ ப்ரக்யாதியுள்ள 4 ராஜ தந்த்ரிகளின் உருவங்கள் 4 ஜாகி சீட்டுகளிலும்; ஐரோப்பாவிலுள்ள அதி ரூபலாவண்ய 4 நாடகக்காரிகளின் உருவம் 4 ஆஸ்சீட்டுகளிலும் அச்சடிக்கப்பட்டிருக்கின்றனவாம். ஸர்வ ஸாதாரணமானவர்கள் ஆடும் சீட்டிற்கும் சக்ரவர்த்தி ஆடும் சீட்டிற்கும் வித்யாஸமேதாவது வேண்டாமா? இந்த சீட்டுகள் நம்முடைய கடைகளுக்கு வந்திருக்கின்றனவோ? விசாரியுங்கள், விசாரியுங்கள்.

### A Curious Custom.

ஒருவிநோத வழக்கம்.— ஆப்ரிக்கர்கள் தும்முவதேயில்லையாம். அவர்களுக்குப்பிறந்தவர்கள் இதரதேசங்களில் போய்ஸ்திரமாய்க்குடியேறினாலுங்கூட தும்முவதில்லையாம். ஆப்ரிக்கா மஹா உஷ்ணமாயிருப்பதால் அங்கேயிருப்பவர்களுக்கு ஜலதோஷம்பிடிப்பதில்லை. ஜலதோஷ மில்லாவிட்டால் தும்முவதுமில்லை. ஆப்ரிக்காவில் தும்மாதவர்கள் வேறெங்கு சென்றாலும் தும்முவதில்லையென்பது விநோதமாயிருக்கிறது.

### The Heaviest Book.

மிக்க பளுவுள்ள புஸ்தகம்:—சைனாவிலுள்ள வைத்ய ஸங்கத்தார் 7 நீளமும் $3\frac{1}{2}$ அடி உயரமுமுள்ள ஒரு புஸ்தகம் செய்திருக்கிறார்கள். இது 1203 ராத்தல் நிறையிருக்கிறது. உலகத்திலுள்ள புஸ்தகங்களில் இதைக்காட்டிலும் பளுவுள்ள புஸ்தகமில்லை.

# HINTS AND RECIPES.
## யுக்திகளும் முறைகளும்.

### To Cleanse Gilded Picture-frames.

படங்களின் கில்ட் சட்டங்களை சுத்தம்செய்தல். ஜின் என்னும் சாராயத்தில் பஞ்சை ஒத்தி படங்களின் கில்ட் சட்டங்களைத் துடைத்து உடனே காயவைத்தால் அவைகள் சுத்தமாகும்.

### Preserving Cut Flowers.

பறித்த புஷ்பங்களைச் சேமித்தல்.—சில ஊர்களில் சிலபுஷ்பங்கள் உண்டாவதில்லை. வெளியூர்களிலிருந்து வரும் புஷ்பங்கள் பறித்து நேரமாக நேரமாக வாடிப்போகின்றன; மணமும் குறைகிறது. பறித்த புஷ்பங்களைக் கொத்தோடு, ஜலம் நிறைந்த கண்ணாடி டம்ளரில் போட்டு, அந்த டம்ளரை ஒரு ஆழமில்லாத தட்டுமேல் வைத்து கண்ணாடிப் பழஜாடியைக் கவிழ்த்து உள்ளிருக்கும் டம்ளரைச் சுற்றி ஜலம் தேக்கி வைப்போமானால், புஷ்பங்கள் சிலகாலம் வாடாமலிருக்கின்றன; வாஸனையும்மாறுமலிருக்கிறது. விவாக ஸமயங்களில் வெளியூர்களிலிருந்து புஷ்பம் வரவழைக்கிறவர்களும், புஷ்ப வ்யாபாரிகளும் இம்முறையை அனுஷ்டிக்கலாம்.

### Removing Grease Stains.

கொழுப்புக்கறையைப் போக்க.—கையிலுள்ள கொழுப்பு அல்லது தைலப்பசையைப் போக்கவேண்டுமானால் புதிய எலுமிச்சம்பழத்தின் ஒருதுண்டைக் கையில் தேய்த்து ஸோப்பால் சுத்தம் செய்யவும். கொழுப்புப்பசை போய்விடுவதோடு கை நல்ல வாஸனையாகவும் இருக்கும்.

### Typewriting Ink.

டைப்ரைடிங் இங்க்.—டைப்ரைடிங் மையானது லினன் துணிகளில் பட்டு அதனால் கறை யுண்டாகிவிட்டால், மைபட்ட பாகத்தை டர்பண்டைன் எண்ணெயில் 24 மணிநேரம் ஊறவைத்து, பிறகு அந்த பாகத்தில் கொதித்துக் கொண்டிருக்கும் ஸோடாஜலத்தை ஊற்றிப் பிறகு ஜலத்தில் அலசிப் பிழிந்து காயவைக்கவும்; கறை முற்றிலும் விட்டுப் போகும்.

### Baths During Cold.

ஜலதோஷம் பிடித்திருக்கையில் ஸ்நானம்.—ஜலதோஷம் பிடித்திருக்கும்போது குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்யக்கூடாது. காலையில் வெதுவெதுப்பான ஜலத்திலும், ஸாயந்தரம் வெந்நீரிலும் ஸ்நானம் செய்வது நல்லது. ஜலதோஷம் விட்டபிறகு காலையில் குளிர்ந்தஜலத்தில் ஸ்நானம் செய்யலாம். இதனால் ஜலதோஷம் பிடிப்பது குறையும்.

### Washing Woollen Socks.

கம்பளி ஸாக்ஸ்களை சுத்தம் செய்தல்.—கம்பளி ஸாக்ஸ்களை சுத்தம் செய்யவேண்டுமானால் இளஞ்சூடுள்ள ஜலத்தில் ஸோப்பைக் கரைத்து நுரையுண்டாக்கி அதில் ஸாக்ஸ்களைப் போட்டு அலசி எடுத்துப் பிழியவேண்டும். ஸாக்ஸை அதிகநேரம் ஊறவிடக்கூடாது. ரொம்ப அழுக்காக இருந்தால் கொஞ்சம் வெண்காரத்தை ஜலத்தில் சேர்த்துக்கொள்ளவும். அழுக்கு சீக்ரம் விட்டுப்போகும். அவைகளை சூடு இன்னம் சற்றுக்குறைவான ஜலத்தில் அலசிப் பிழிந்து எடுத்து உலர்த்திவிடவும்.

### Drinking at Meals.

சாப்பிடும்போது தீர்த்தம் குடித்தல்.—திடசரீரமுள்ளவர்கள் சாப்பிடும்போது வேண்டிய அளவு தீர்த்தம் குடிக்கலாம் என்றும், சாப்பிடும் ஆகாரம் ஜீர்ணமாவதற்கு உதவியாக இருக்கும்படி அதிக உஷ்ணமும் குளிர்ச்சியும் இல்லாத தீர்த்தம் அவர்கள் குடித்தல் நல்லதென்றும் ஒருபத்ரிகை சொல்லுகிறது. பனிக்கட்டிபோல் ஜில்லென்று குளிர்ந்திருக்கும் தீர்த்தம் குடிப்பது கூடாதாம். சில ஸந்தர்ப்பங்களில் அதிகதீர்த்தம் குடிப்பது அவ்வளவு நல்லதல்ல என்று சொல்லலாம். ஆனால் இதுவரையில் செய்தபரீக்ஷைகளால் திடசரீரமுள்ளவர்கள் சாப்பிடும்போது தீர்த்தம் குடிப்பது கெடுதல் அல்லவென்று தெரிய வருகிறதாம்.

### To Fit a Cork in a Bottle.

பாட்டிலில் கார்க்கைப் போட்டு மூட.—பாட்டிலில் அதாவது வீஸாவில் கார்க்கைப்போட்டு மூடுகையில் கார்க்கு சற்று பெரியதாக இருந்தால் அதைக் கொதிக்கும் ஜலத்தில் சற்றுநேரம் அமிழ்த்திவைக்கவும். பிறகு அது ம்ருதுவாகி பாட்டிலின் வாயில் ஸுலபமாய் நுழையும்.

### The Boot Pinch.

ஜோடு கடித்தல்.—பூட்ஸ் அல்லது செருப்புப் போட்டுக்கொள்ளும்போது சிலஸமயம் அவைகள் காலைக் கடித்து விடுகின்றன. ரொம்பசுடச்சுட இருக்கும் ஜலத்தில் துணியொன்றை நனைத்து, பூட்ஸானது காலில் படும் பாகத்தின்மேல் வைத்தால், தோல் அகன்று போய் கடிக்காமல் இருக்கும்.

# TAMIL LITERATURE.
# தமிழ்க் கல்வி.

**Chandrakanthi.**

சந்திரகாந்தி.—'சந்திரகாந்தி அல்லது தெய்வ சங்கற்பம்' என்னும் பெயருள்ள புஸ்தகம் ரங்கூன் மிஸ்டர் ஜே. ஸ்ரீநிவாஸன் அவர்களால் எழுதப்பட்டது. இது ஸுமார் 300 பக்கம் கொண்டது. கதை வாசிக்க இனிமையாயிருக்கிறது. கதையில் பல நீதிகள் விளக்கப்பட்டிருக்கின்றன. இதன் விலை ரூ 1-8-0. வேண்டுவோர், எஸ். ஸாமுவேல் அண்ட் ஸன்ஸ், 49, பார் தெரு, ரங்கூன், என்று எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

**A. N. Pharmacy.**

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்.—இந்த மருந்து வர்த்தகர்களுடைய தலைமை ஆபீஸ், ப்ராஞ்சுகள் ஸிப்பந்திகள், ஆகிய இவர்களின் படங்கள் கொண்ட ஆல்பம் ஒன்று அனுப்பப் பெற்றோம். படங்கள் உள்ள, அல்லது படங்கள் வைக்கக்கூடிய புஸ்தகத்துக்கு ஆல்பம் என்று பெயர். இந்த ஆல்பத்தில் நமது சக்ரவர்த்தி, சக்ரவர்த்தினி, க்ரிகெட் ஸாமர்த்யமாய் விளையாடுபவர் என்று பெயர் பெற்றுள்ள ஜாம்நகரத்து எச். எச். மஹாராஜா ரஞ்சித்ஸிங்க், இந்த வைத்ய சாலையை முதலில் ஸ்தாபித்த மணிசங்கர கோவிந்தஜீ, ஆகிய இவர்களுடைய படங்களும் இருக்கின்றன.

**Tamil Shorthand.**

தமிழ் ஷார்ட்ஹாண்டு.—இங்க்லீஷுக்கு இருப்பதுபோல தமிழுக்கும் ஷார்ட்ஹாண்டு சில காலத்துக்கு முன்னால் கண்டுபிடிக்கப்பட்டு பலர் அதைக் கற்று வருகிறார்கள். வேலூரில் போலீஸ் உத்யோகஸ்தர் இதில் பயிற்சிபெறுகிறார்கள். ஒரு நிமிஷத்திற்கு 80- வார்த்தைகள் வீதம் எடுக்கும் திறமையுள்ள போலீஸ் உத்யோகஸ்தருக்கு மாதம் 10-ரூ உபகாரச் சம்பள் மாகத்தரும்படி 15-பேருக்கு ஸாங்க்ஷனாயிருக்கிறது. ஸபைகளில் பேசிக்கொண்டிருக்கையில் பேச்சு முழுவதையும் இந்த ஷார்ட் ஹாண்டென்னும் சுருக்கெழுத்தால் பதிந்துகொண்டுவிடலாம்.

**Ananda Krishnan.**

ஆனந்த கிருஷ்ணன்.—இது மிஸ்டர் ஜே. ஆர். ரங்கராஜு அவர்களால் இயற்றப்பட்ட ஒரு துப்பறியும் தமிழ் நாவல். வாசிக்க இனிமையாயிருக்கிறது. இது நாடகம் பார்க்கப்போய் நாடகத்தில் சேர்ந்து கெட்டுப்போன ஸ்த்ரீ கடைசியில் கொலையுண்டதைப்பற்றியும், நாடகத்தில் சேர்ந்து மனம் மாறுபடாமல் இருந்த ஒரு ஸ்த்ரீயைப்பற்றியும் சொல்லும் ஒரு கதை. ஸ்திரீகள் புருஷர்களுக்கு மருந்திடுதல், ஸ்த்ரீகள் பொதுவாய் நாடகம் பார்க்கப்போவதால் நேரிடக்கூடிய கெடுதிகள்முதலிய விஷயங்களைப்பற்றிச் சொல்லியிருக்கிறது. சித்ர ஸகிதமானது. இதன் விலை 0-12-0. வேண்டுவோர் மெஸ்ஸர்ஸ் ரங்கராஜு அண்டு ப்ரதர்ஸ் 5-மௌண்ட் ரோட், மதராஸ் என்று எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

**Vidya Bhushani.**

வித்யா பூஷணி.—இது ஒரு மாதாந்தப் பத்ரிகை. இதன் பத்ராசிரியர் சதாவதானம் தெ. க்ருஷ்ணஸ்வாமிப் பாவலர். ஸெப்டம்பர் மாஸத்து ஸஞ்சிகையில் பெண்களுக்குக் கல்வி அவச்யம், நன்றி மறத்தல் நன்றன்று, ஸ்நானம்செய்யும் முறை, மந்த்ரவித்தை ஆகிய விஷயங்கள் நன்றாய் எழுதப்பட்டிருக்கின்றன. இதன் வருஷ சந்தா ரூ 2. பத்ரிகை வேண்டுவோர் பத்ராசிரியர், சித்தாந்த்ரிப்பேட்டை, மதராஸ் என்றெழுதவும்.

**Kandapurana Vachana Churukkam.**

கந்த புராண வசனச்சுருக்கம்.—இது மதுராந்தகம் சடப்பேரி மிஸ்டர் எஸ். சுப்பரமண்ய சிவாசாரியாரால் எழுதப்பெற்று, கும்பகோணம் 'மங்களவிலாஸ புஸ்தகசாலை' சொந்தக்காரரும், 'லோகானுகூலன்' பத்ராதிபருமாகிய மிஸ்டர் வி.எஸ். ராதாக்ருஷ்ணய்யரால் ப்ரசுரிக்கப்பட்டிருக்கிறது. 123 பக்கங்கள் கொண்டது. விலை அணா 8. ஸ்கந்தபுராணம் பதினெட்டு புராணங்களிலொன்று. இந்தப் புராணத்தில் ஸுப்ரமண்ய ஸ்வாமியினுடைய பிறப்பு, வளர்ப்பு, பராக்ரமங்கள் ஆகிய இவைகள் விரிவாய்க் கூறப்பட்டுள்ளன. இந்தப் புராணத்தை காஞ்சீபுரம் கச்சியப்ப சிவாசாரியார் என்ற புலவர் பாடலாகப் பாடினார். பாடலாயிருப்பதை ஸாமான்யப் படிப்புள்ளவர்கள் படித்தறியக்கூடாமையா யிருக்கிற காரணத்தால் ஸர்வத்ராளுக்கும் பயன்படும்படி மிஸ்டர் ஸுப்ரமண்ய சிவாசாரியார் இனிமையும் ஸுலபமுமான வசன நடையில் எழுதியுள்ளது மிகவும் நன்றாயிருக்கிறது. யாவரும் இந்தப் புஸ்தகத்தை வாசித்துப் பயனடையலாம். வேண்டுவோர் கும்பகோணம் மங்களவிலாஸ புக்டெபோவுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

# DIARY OF THE MONTH.
## மாஸ வர்த்தமானம்.

1913ஞு ஸெப்டம்பர்மீ 1-தேதி.

கூச் பீஹார் மஹாராஜா.—கூச்பிஹார் மஹாராஜா அவர்கள் இன்று லண்டனில் இறந்துபோனார்.

சீனாவில் கலகம்.—வட ஸைன்யத்தார் நான்கிங்கைப் பிடித்துவிட்டார்கள்.

மிஸ்டர் ரஸூல்.—கல்கத்தா யுனிவர்ஸிடி மீது பாரிஸ்டர் ரஸூல் தம்மை லெக்சரர் ஸ்தானத்திலிருந்து நீக்கியதைப்பற்றி கல்கத்தா ஹைகோர்ட்டில் வ்யாஜ்யம் செய்திருந்தார். இதை விசாரித்த மிஸ்டர் ஜஸ்டிஸ் சௌத்ரி, யுனிவர்ஸிடியாரால் தாங்கள் இவ்வளவு காலம் உத்யோகத்தில் வைத்துக்கொள்வதென்று குறிக்கப்பட்ட ஆர்டர் மிஸ்டர் ரஸூலுக்குக் கொடுக்கப்படாதிருப்பதால் யுனிவர்ஸிடி மீது கேஸ் செல்லாது என்று அவர் கொடுத்த மனுவைத் தள்ளிவிட்டார்.

ஸ்த்ரீகள் பொருட்காட்சி—பங்காள ஸ்த்ரீகளின் முயற்சியால் நடைபெறும் ஸ்வதேசியபொருட்காட்சி இன்று கல்கத்தாவில் ஆனரபிள் மிஸ்டர் ஸுரேந்த்ரநாத் பனர்ஜியால் திறந்து வைக்கப்பட்டது. இந்தப் பொருட் காட்சியை ஆரம்பித்து நடத்துகிறவர்களெல்லாரும் ஸ்த்ரீகள்.

2-தேதி.—

பால்கன் நிலைமை.—மாரிட்ஸா நதிக்கு மேற்பக்கத்தில் துருக்கியர்கள் தங்குவதால், பல்கேரியர்கள் தென்த்ரேஸில் தங்களுக்கு விடப்பட்டுள்ள இடங்களை வசப்படுத்திக்கொள்ளக் கூடாமலிருக்கிறது. தென் த்ரேஸிலிருக்கும் சிறிய பல்கேரிய ஸைன்யத்தின் நிலைமையும் கஷ்ட மாயிருக்கிறது.

மூன்று ஜில்லா கான்பரேன்ஸ்.—மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மூன்று ஜில்லாக்களின் ப்ரதிநிதிக ளடங்கிய ஒரு கான்பரென்ஸை மதுரையில் அடுத்த அக்டோபர்மீ 18,19-ந்தேதிகளில் கூட்டவேண்டுமென்பதைப் பற்றி யோசிக்க இன்று மதுரையில் ஒரு மீட்டிங் கூட்டப்பட்டு தீர்மானங்கள் செய்யப்பட்டன.

துருக்கி.—துருக்கியர்கள் அட்ரியானோபிளிலிருந்து ரோமாபுரிக்கு டெபுடேஷனுப்போய் இடலியின் அந்ய மந்த்ரியைக் கண்டுகொண்டார்கள். துருக்கிக்கும் பல்கேரியாவுக்கும் ஸமாதானத்தை உண்டாக்கத் தம்மால் கூடியதைச் செய்வதாக மந்த்ரி பதில் சொன்னார்.

3-தேதி.—

பால்கன் நிலைமை.—அட்ரியானோபிள் விஷயமாகவும், மற்றும் துருக்கிக்கும் பல்கேரியாவுக்கும் உள்ள தகரார்கள் விஷயமாகவும் ஸமாதானம் பேசி முடிக்கும் நோக்கத்துடன் ஜெனரல் ஸேவாப்பும், எம். டோகெப்பும் இரண்டு மிலிட்டரி உத்யோகஸ்தர்களும் கான்ஸ்டாண்டிநோபிளுக்குப் போயிருக்கிறார்கள்.

நமது கவர்னர்.—நமது கவர்னரும் அவர் பெருமாட்டியும் ஸிம்லாவில் 14 வயதும் அதற்குக் கீழ்பட்டுமுள்ள குழந்தைகள் சேர்ந்து நடத்திய ஒரு நாடகத்துக்கு விஜயம் செய்திருந்தார்கள்.

4-தேதி.—

தாதாபாய் நௌரோஜி.—மிஸ்டர் தாதாபாய் நௌரோஜியின் 89-வது பிறந்ததினம் இன்று இந்தியாவின் பல பாகங்களில் கொண்டாடப் பட்டது. சென்னை மஹாஜன ஸபையாரும் கூட்டம் கூடி மிஸ்டர் நௌரௌஜிக்கு ஒரு ஸந்தோஷசேதி தெரிவித்தார்கள். பம்பாயில் எல்லா ஜாதி ஸ்த்ரீகளின் ப்ரதி நிதிகளும் நௌரோஜியிடம் போய் அவரைக் கண்டுகொண்டார்கள்.

5-தேதி.—

ஸ்வதேசி மேளா.—ஸ்வதேசி மேளா என்ற ஸ்வதேச கைத்தொழில் பொருட் காட்சி சென்ற மூன்று வருஷகாலமாக வங்காளத்தில் நடந்து வருகிறது. இன்று கல்கத்தா கவர்னராகிய லார்ட் கார்மிக்கேல் இந்த மேளாவைத்திறந்து வைத்த ஸமயத்தில் ஸ்வதேசிய முயற்சி தேசாபிமானத்தின் ஒரு அம்சமாகும் என்றும், இந்த முயற்சி பலப்பட அவச்யமாயுள்ள மூலதனம் வங்காளத்திலிருந்தே வஸூலாக வேண்டுமென்றும் சொன்னார். இன்னும் சில புத்திமதிகளையும் சொன்னார்.

6-தேதி.—

இங்கிலண்டுக்கு டெபுடேஷன்.—இந்தியாவிலுள்ள மகம்மதியர்களின் நன்மையைக் கருதிய விஷயங்களை மந்த்ரிகள், பார்லிமெண்ட் மெம்பர்கள் முதலானவர்களுக்கு இங்கிலீஷ் பத்ரிகைகள் மூலமாயும்,

நேரிலேயும் தெரிவிப்பதற்காக, "ஆல் இந்தியா முஸ்லிம் லீக்" கினுடைய சார்யதரிசி யாகிய மிஸ்டர் ஸையத் வாஸீர் ஹாஸானும், 'காம்ரேட்' பத்ரா்திபராகிய மிஸ்டர் மகமத் ஆலியும் பம்பாயிலிருந்து இங்லண்டுக்கு இன்று ப்ரயாணமானார்கள்.

பம்பாயில் மீட்டிங்.—பம்பாய் ப்ரஸிடென்ஸி அஸோஸியேஷனுடைய முயற்சியால் இன்று பம்பாய் ஜனங்கள் ஒரு பொதுக்கூட்டம் கூடி நீதி நிர்வாக அதிகாரங்களின் பிரிவினை, தென்னுப்பிரிக்கா இந்தியர்களுடைய நிலைமை ஆகிய விஷயங்களைப் பற்றி முக்யமான தீர்மானங்கள் செய்தார்கள். ஸர் பிரோஸ்ஷா மேடா அக்ராஸனம் வகித்தார்.

7-தேதி.—

ஒரு மகமதிய கான்பரேன்ஸ்.—தஞ்சாவூர் ஜில்லா மகம்மதியக் கல்விக் கான்பரென்ஸ் இன்று காலை தஞ்சாவூர் மார்ஷ் ஹாலில் கூடிற்று. ப்ரஸிடெண்டாயிருந்த மிஸ்டர் ஏ. ஹமீத் ஹாஸன் மகம்மதியர்கள் இங்க்லீஷ்க் கல்வி கற்றுக்கொள்ள வேண்டியதின் அவச்யத்தைப் பற்றியும், ஸ்கூல்களில் உர்து பாஷை சொல்லிக் கொடுக்கப்பட வேண்டுமென்பதைப்பற்றியும் பேசினார்.

பால்கன் நிலைமை.—பால்கன் சச்சரவுகள் விஷயத்தில் வல்லரசுகள் நடுநிலைமையிலிருக்கிறார்களென்றும் துருக்கிக்கும் பல்கேரியாவுக்கும் சிறிதுகூட மனஸ்தாபங்கள் இல்லாமல் செய்துவிடவேண்டுமென்பது அவர்களின் நோக்கமென்றும் சொல்லப்படுகிறது. துருக்கி ப்ரதிநிதிகளும் பல்கேரிய ப்ரதிநிதிகளும் கான்ஸ்டான்டி நோபிளில் ஸமாதனம் பேசத் தொடங்கி விட்டார்கள்.

கோவாபரேடிவ் கான்பரேன்ஸ்.—சாத்தூர் டிவிஷன் கோவாபரெடிவ் கான்பரென்ஸ் இன்று கூடிற்று. திவான் பஹதூர் எம். ஆதிநாராயணய்யா அக்ராஸனம் வகித்தார். க்ராமாந்தரங்களின் ஸுகாதாரத்தைப்பற்றிச் செய்யப் பட்டிருக்கும் ஒழுங்குகளை மேற்பார்வை பார்ப்பதற்காக கோவாபரெடிவ் ஸங்கங்களுக்கு கவர்ன்மெண்டார் க்ராண்ட் கொடுக்க ஸம்மதித்திருக்கிறதற்காக வந்தனம் கூறப்பட்டது.

8-தேதி.—

பால்கன் நிலைமை.—கிர்க் கிலிஸேயைத் துருக்கிக்கு விட்டுக்கொடுக்கக் கூடாதென்று பல்கேரியா ப்ரதிநிதிகள் சொல்லியும், துருக்கிக்கு ஸாதகமாகப் பேசி முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

9-தேதி.—

தென்னுப்பிரிக்கா இந்தியர்கள்:—டர்பானில் நேடால் இந்தியன் காங்க்ரெஸின் ஆதீனத்தில் ஒரு ஸபைகூடிற்று. இதில் 1913 வருஷத்து இம்மிக்ரெண்ட்ஸ் ரெகுலேஷன் ஆக்ட்டால் ஆப்ரிக்காவில் ஸ்திரமாய் தங்கியிருக்கும் இந்தியர்களுக்கு கஷ்டநிஷ்டுரங்கள் இருக்கிறபடியால் அந்த சட்டத்தை ஒரு வருஷத்துக்குள் ரத்து செய்யும்படி அரசரைக் கேட்டுக்கொள்ளவேண்டுமென்று இம்பீரியல் கவர்ன்மெண்டையும் இந்தியா கவர்ன்மெண்டையும் ப்ரார்த்தித்துக் கொள்வதென்று தீர்மானித்தார்கள்.

11-தேதி.—

ஒரு உபந்யாஸம்.—ஆனரபிள் மிஸ்டர் வி. எஸ் ஸ்ரீனிவாஸ சாஸ்த்ரியார் மதுரை ஸௌராஷ்ட்ர ஹைஸ்கூலில் இந்திய ஊழிய ஸங்கத்தைப்பற்றித் தமிழில் ஒரு உபந்யாஸம் செய்தார். ஸங்கத்தின் நோக்கத்தை விரிவாயும் தெளிவாயும் எடுத்துச் சொன்னார்.

ஒரு மரணம்—தர்பங்கா மஹாராஜாவின் தாயார் இன்று மாங்கீரில் இறந்துபோனார். இறக்கும்போது இவருக்கு 80 வயது.

13-தேதி.—

தியஸாபிகல் கான்பரேன்ஸ்.—இன்று பாலக்காட்டில் கேரள தியாஸிபிகல் கான்பரென்ஸ் கூடிற்று. மிஸ்டர் பி. பி. வாடியா அக்ராஸனம் வகித்தார்.

பால்கன் நிலைமை.—துருக்கி பல்கேரியா ப்ரதிநிதிகள் இன்றையதினம் கான்ஸ்டாண்டிநோபிளில் கான்பரென்ஸ் கூடினார்கள். இரு கக்ஷியாருக்கும் த்ருப்தியாகவே ஸமாதானமாகுமென்று தெரியவருகிறது.

14-தேதி.—

ஒரு ஸங்கீத பாடசாலை.—ஸ்ரீராமவர்ம ஸங்கீத ஸ்கூல் இன்று கொச்சி ராஜாவால் அவரது 60-வது பிறந்த நாளின் ஞாபகார்த்தமாகத் திறந்து வைக்கப் பட்டது.

15-தேதி.

மத்யமாகாண கோவாபரேடிவ் கான்பரேன்ஸ்.—மத்யமாகாண ஐக்ய நாணயக் கான்பரென்ஸ் இரண்டாவது முறையாக இன்று ஜப்பல்பூரில் கூடிற்று. சீப் கமிஷணர் ஆனரபிள் ஸர். பெஞ்சமின் ராபர்ட்ஸன் கான்பரன்ஸைத் திறந்துவைத்தார்.

லார்ட் பெண்ட்லண்ட்.—லார்ட் பெண்ட்லண்டும் அவர் மனைவியும் கிர்க்கியிலுள்ள மிலிடெரி டெய்ரியையும் பூனாவிலுள்ள விதவாச்ரமத்தையும் போய்ப் பார்த்தார்கள்.

சென்னை தாழ்ந்தவகுப்பார் ஸங்கம்.—இந்த ஸங்கத்தின் 3 வது வருஷோத்ஸவம் ஆண்டர்ஸன் ஹாலில் இன்றுமாலை கூடிற்று. ஆனரபிள் மிஸ்டர் ஜஸ்டிஸ் எல். வி. மில்லர் அக்ராஸனம் வகித்தார்.

பால்கன்நிலைமை.—எல்லைவிஷயமான தகரார் விஷயத்தில் ப்ரதிநிதிகள் ஏகோபித்த அபிப்ராயமுள்ளவர்களா யிருக்கிறார்கள். அட்ரியானோபிள், டெமோடிகா ஆகிய இவைபோன்ற முக்யமான தகரார்களைப்பற்றி, துருக்கிசொல்வதை பல்கேரியா ஒப்புக்கொண்டு விட்டது. குமுல்ஜினா ஜில்லாவில் இப்போது கலகக்குழப்ப மிருந்து வருகிறது. இதையடக்க பல்கேரியாவுக்கு துருக்கியினுடைய ஸஹாயம் அவச்யம். இதனால் துருக்கிக்கு பல்கேரியா இணங்கியிருக்கிறது.

17-தேதி.

லார்ட் பெண்ட்லண்ட்.—நமது கவர்னரும் தம்பதியும் பூனாமார்க்கமாய் இன்று சென்னைக்கு வந்து சேர்ந்தார்கள்.

பால்கன்நிலைமை.—இன்றுஸமாதான கான்பரென்ஸில் பல்கேரிய துருக்கி ப்ரதிநிதிகள் டெம்ஸ்டிகா என்ற பட்டணம் யாரைச் சேரவேண்டுமென்ற விஷயமாகப் பேசினார்கள். இராஜ்யங்களின் விஸ்தீரண வரம்புகளைப்ரதிநிதிகள் போய்ப்பார்ப்பார்களாம், இவர்களுடைய உடன்படிக்கையை அபிப்ராயத்துக்கு ஹேக்கிலுள்ள ஸர்வதேச கோர்ட்டுக்கு அனுப்புவார்களாம்.

சட்ட ஸபை மீட்டிங்.—இன்று கூடிய ராஜப்ரதிநிதி சட்ட ஸபை மீட்டிங் இந்த ஸெஷனில் கடைசி மீட்டிங்காகும். இந்த ஸமயத்தில் லார்ட்ஹார்டிஞ்; ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டானது துருக்கி பெர்ஷியா ஆகிய இரண்டு மகம்மதிய தேசங்களுடைய ஸாவதானத்தையும் கௌரவத்தையும் காக்க விருப்பம் கொண்டதாயிருக்கிறது; ஆகையால் இந்திய மகம்மதியர்கள கவலைப்படக் காரணமில்லை யென்று சொன்னார். கீழ்தரப்படிப்பைப்போல் உயர்தரப் படிப்பையும் மத்தியதரப்படிப்பையும் வ்ருத்திசெய்து இங்க்லீஷ் சிறுவர்கள் இங்க்லீஷ் பள்ளிக்கூடங்களில் பெறும் உயர்ந்த பயிற்சியைப்போல் இந்தியசிறுவர்களும் பெற வேண்டுமென்பது தமது உண்மையான விருப்பமென்றார். தென்னாப்பிரிக்கா இந்தியர்கள்படும் கஷ்டங்களில் இந்தியருக்கு எவ்வளவு உணர்ச்சியும் அனுதாபமும் இருக்கிறதோ, அவ்வளவு இந்தியா கவர்ன்மெண்டுக்கும் பூரணமாயிருக்கிறதென்றார். இந்தியா கவர்ன்மெண்ட் இந்தியரின் க்ஷேமத்தைக்காக்கச் செய்ய வேண்டிய முயற்சிகளில் ஒரு நிமிஷமேனும் தளரமாட்டாதென்று சொன்னார். கடைசியாக ஸ்கூல் பிள்ளைகளின் புத்திப்பயிற்சியிலும் ஒழுக்கத்திலும் தமக்குள்ள வாஞ்சையைக் காட்டிப் பேசினார்.

19-தேதி.—

ஐக்ய நாணயக்கான்பரென்ஸ்.—இன்று பம்பாய் கவர்னர் லார்ட் வில்லிங்டன் பம்பாய் மாகாண. ஐக்ய நாணயக் கான்பரென்ஸைத் திறந்து வைத்தபொழுது, இந்த முயற்சி பம்பாயில் விசேஷ அபிவ்ருத்தியடைந்திருக்கிற தென்றும், அநேகர் இந்த முயற்சியை முற்படுத்த உழைக்கிறார்களென்றும், கவர்ன்மெண்ட் உதவியில்லாமலே இந்த முயற்சி நிலைபெறத் தலைப்பட்டிருக்கிறதென்றும் ஸந்தோஷங்காட்டிப் பேசினார்.

லாகூர் பீபிள்ஸ் பாங்கியின் முறிவு.—ஸ்வதேச பாங்கியில் பெரியதும் இந்தியாவின் பலபாகங்களில் ஸுமார் 70 ப்ராஞ்சுகளுள்ளதுமான லாகூர் பீபிள்ஸ் பாங்கி முறிந்து போயிற்று. 29-தேதி பங்குக்காரர்கள் கூட்டம் நடந்த பின்பு மேல் நடக்கவேண்டிய விஷயங்கள் தெரியும். இந்த பாங்கியை ஸ்தாபித்தவர் தேசாபிமனியும்லாகூர் பாரிஸ்டருமாகிய லாலா ஹரிக்ருஷ்ணலால். சென்றமாதம்தான் இவர் மானேஜிங் டிரெக்டர் ஸ்தானத்திலிருந்து விலகிக் கொண்டார். இந்த பாங்கி முறிவால் அனேக ஸ்வதேச ஸ்தாபனங்கள் நஷ்டமடையும்.

20-தேதி.—

அம்ரிட்ஸர் பாங்கி முறிவு.—இந்த ஸ்வதேசி பாங்கி பணம் பட்வாடா செய்வதை நிறுத்திவிட்டது. பங்குக்காரர்களின் மீட்டிங் அக்டோபர் 1-தேதிக்கு வைக்கப்பட்டிருக்கிறது. அந்த மீட்டிங்கில் பாங்கியை ஒழுங்குபடுத்துவதோ கலைத்து விடுவதோ என்ற விஷயம் முடிவு செய்யப்படும்.

21-தேதி.—

நிலஸெஸ் மீட்டிங்.—நிலஸெஸ்ஸை உயர்த்து

வது அனுவச்யமென்றும், குடிகளுக்கு அதிகக் கஷ்டம் உண்டுபண்ணுமென்றும் சென்னிமலையில் ஜனங்கள் ஸபைகூடித் தீர்மானித்தார்கள்.

22-தேதி.—

துருக்கி விஷயம்.—சிறிய விஷயங்களில் துருக்கிக்கும் பல்கேரியாவுக்கும் அபிப்ராய பேத மிருப்பதால் ஸமாதான உடன்படிக்கை நிறைவேறுவது தாமஸமாகிறது.

23-தேதி.—

நிலஸெஸ்ஸைப்பற்றி மீட்டிங்குகள்.-தஞ்சாவூர் டிஸ்டிரிக்ட் போர்டார் 6-தேதி கூடிய மீட்டிங்கில் நிலஸெஸ்ஸை அதிகப்படுத்தலாமென்று தீர்மானித்திருப்பதை, தஞ்சை ஜில்லா ஜனங்களுடைய அபிப்ராயத்தை டிஸ்ட்ரிக்ட் போர்ட் ப்ரஸிடெண்ட் விசாரித்து அறிந்து கொள்ளும் வரையில் அமுலுக்குக் கொண்டுவரக் கூடாதென்று கவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கொள்வதற்காக கும்பகோணம் போர்டர் டவுன் ஹாலில் ஒரு பொதுஜன மீட்டிங் நடந்தது. தீர்மானங்கள் அப்படியே செய்யப்பட்டன.

நிலஸெஸ் விஷயமாய் சேலம் டவுன் ஹாலில் ஜனங்கள் மீட்டிங் கூடினார்கள். முனிஸிபல் சேர்மன் மிஸ்டர் ராமஸ்வாமி ஐயர், ஆனரபிள் மிஸ்டர் நரஸிம்மஐயர் முதலானவர்கள் பேசினார்கள்.

நிலஸெஸ்ஸை உயர்த்துவது விரும்பத்தக்க தல்லவென்றும், ஸகிக்கக் கூடியதல்லவென்றும் ஜனங்களிடத்தில் மஹஜர் வாங்கி கவர்ன்மெண்டுக்கு அனுப்பவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

24-தேதி.—

பீபிள்ஸ்பாங்கி முறிவு.—பாங்கியை ஒழித்து விடப்பார்க்கக்கூடாதென்றும், பாங்கியைத் திரும்ப ஸரியாய் அமைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய ஸாமர்தயமுடையவரான லாலா ஹரிக்ருஷ்ணலாலைத் திரும்ப வேலையில் சேரும்படி கேட்டுக்கொள்ளவேண்டுமென்றும் பம்பாயிலுள்ள இந்த பாங்கியின் பங்குக்காரர்களும் டிபாஸிட்டர்களும் பம்பாயில் ஒருமீட்டிங் கூடி தங்கள் அபிப்ராயத்தைத் தெரிவித்தார்கள்.

நிலஸெஸ் மீட்டிங்.—மாயவரம் தாலுக்கா கோனேரி ராஜபுரம் யூனியன் அஸோஸியேஷன் மெம்பர்களும் இன்னும் பலரும் ஒருகூட்டம் கூடி நிலஸெஸ்ஸை உயர்த்தக்கூடாதென்று கவர்ன்மெண்டைக் கேட்டுக்கொள்வதென்று தீர்மானித்தார்கள்.

26-தேதி.

துருக்கிவிஷயம்.—ஸமாதான விஷயமாகப்பேச ஓர்தினத்தைக் குறிக்கவேண்டுமென்று க்ரீஸ்துருக்கியைக் கேட்டது. அதற்கு துருக்கியானது பல்கேரியாவுக்கும் தனக்கும் ஸமாதானம் முடிவானபின் குறிப்பிடுவதாகச் சொல்லியிருக்கிறது.

பீபிள்ஸ்பாங்கிவிஷயம்.—இந்தபாங்கியை மூடிவிடவேண்டுமென்ற ப்ரேரணையை ஆக்ஷேபித்து, எவ்விதத்திலாவது பாங்கியைச் சீர்படுத்தி மீண்டும் தொழில் நடதத வேண்டுமென்பது தங்கள் அபிப்ராயமென்று கல்கத்தாவிலுள்ள இந்தபாங்கி பங்குக்காரர்களும் டிபாஸிட்டர்களும் ஒரு கூட்டம் கூடித் தீர்மானித்து அந்தத்தீர்மானத்தை லாகூருக்கு அனுப்பினார்கள்.

27-தேதி.

ஒரு ஸ்த்ரீ மீட்டிங்.—ஹிந்து மதுவிலக்கு ஸங்கத்தின் ஆதரணையில் இன்று தொண்டை மண்டலம் ஹைஸ்கூல் ஹாலில் இந்திய ஸ்த்ரீகள்வந்து கூடினார்கள். பாட்டுக்கச்சேரி நடந்தது. மதுபானம் செய்வதினாலுண்டாகும் தீங்குகளைப்பற்றி மிஸ்ஸஸ் பெஸண்ட்பேசினார். மதுபானவிலக்கு விஷயமாய் ஸ்த்ரீகள் எந்த விதத்தில் உபயோகமுள்ளவர்களா யிருக்கலாமென்பதைப்பற்றி மிஸ்ஸஸ் அலர் மேல்மங்கை தமிழில் ஒரு உபந்யாஸம்செய்தார்.

நிலஸெஸ்மீட்டிங்.—திருச்சினாப்பள்ளி டௌன் ஹாலில் பொதுஜனமீட்டிங் ஒன்று நடந்தது. ஆனரபிள் ராவ்பஹதூர் வி. கே. ராமாநுஜாசாரியார் அக்ராஸனாதிபதியாயிருந்து நிலஸெஸ் விஷயமாகவும், மைஸூர் கவர்ன்மெண்டார் காவிரியாற்றில் அணைகட்டுவதாக யோசிக்கும் விஷயமாகவும், தென்னாப்பிரிக்கா இந்தியர்கள் விஷயமாகவும் பேசினார். நிலஸெஸ்ஸை உயர்த்துவதை ஆக்ஷேபித்தும், திருச்சி தஞ்சை ஜில்லாக்களின் நன்மைகளை எடுத்து கவர்ன்மெண்டாருக்குச் சொல்வதற்காக பொதுவாக ஒரு டெபுடேஷனை அனுப்பவேண்டுமென்றும் தீர்மானங்கள் செய்யப்பட்டன. திருச்சிஜில்லா வாஸிகள் விழித்துக்கொண்டு சுறுசுறுப்புக் காட்டி வருகிறவிஷயத்தில் அவர்களை ச்லாகித்து மிஸ்டர் ராமாநுஜாசாரியார் பேசினார்.

28-தேதி.

பிறந்த தினக்கொண்டாட்டம்.—தஞ்சாவூர் கான்பரென்ஸ் கமிட்டியாரால் காலஞ்சென்ற மிஸ்டர் கோபாலராவின் 82வது பிறந்ததினக் கொண்டாட்டம் கும்பகோணம் போர்ட்டர் டௌன்ஹாலில் ஆனரபிள் ஜஸ்டிஸ் மிஸ்டர் ஸதாசிவஐயர் அக்ராஸனத்தில் விமர்சையாய் நடந்தது. கோபால்ராயரவர்களின் சரித்ரம் மாணவர்களும் உபாத்யாயர்களும் வாசிக்கத்தகுந்தது என்ற மைஸூர்மாஜிதிவான் வி. பி. மாதவராவ்ஸுபக்கு எழுதியிருந்த கடிதத்தை வாசித்தார்கள். நல்லொழுக்கப்பயிற்சி என்னும் விதையைத் தென்னிந்தியாவில் விதைத்து அதன்பலனை பலரும் அனுபவிக்கச்செய்த மஹான்களில் கோபால்ராவ் ஒருவர்என்று ஸதாசிவஐயர் சொன்னர்.

29-தேதி.—

வருஷாந்தக் கொண்டாட்டம்.—கும்பகோணம் நேஷனல் இந்தியன் அஸோஸியேஷனுடைய வருஷாந்தக் கொண்டாட்டம் இன்று நடைபெற ஆனரபிள் மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸதாசிவஐயர் அக்ராஸனதிபதியாயிருந்தார். ரிபோர்ட்டை சிக்ரிடரிவாசித்தார். அடுத்தவருஷத்துக்கு நிர்வாக உத்யோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டார்கள். டிப்டிகலெக்ட்டர் மெம்பர்களுக்குத் தோட்டக்கச்சேரியை சிறப்பாய் செய்தார். மிஸ்டர் சாதாசிவஐயர் பலஸ்தீகள் ஒன்றுசேர்ந்து உழைக்காவிட்டால் இப்பொழுது இருக்கும் ஆசாரதிருத்த நிலைமையானது சீக்ரத்தில் அபிவ்ருத்தி ஆகாது என்று வற்புறுத்திப் பேசினர்.

30-தேதி.

பாங்கி விஷயம்.—கராச்சியிலுள்ள இந்துஸ்தான் பாங்கி இன்று பணம் பத்துவரவு செய்வதை நிறுத்திவிட்டது.

மதராஸ் பாங்கி.—மதராஸ் பாங்கி டிரக்டர்கள் இன்றுமீட்டிங் கூடி வட்டிவிகிதத்தை நூற்றுக்கு 5 ஆயிருந்ததை 6 ஆக உயர்த்தினர்கள்.

---

## SEASON.

## கால ஸ்திதி.

### Rainfall.

மழை.—1913ஷு ஏப்ரல்மீ 1உயிலிருந்து 1913ஷு ஸெப்டம்பர்மீ 30உவரையில் பெய்த மழையின் அளவும், இந்தக் காலத்தில் ஸராஸரியில் பெய்திருக்கவேண்டிய மழையின் அளவும், கீழே அங்குலம் ஸெண்டுகளாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன.

| மழை பெய்த ஊரின் பெயர். | பெய்த மழை அங்குலம். | பெய்திருக்க வேண்டிய மழை அங்குலம். |
|---|---|---|
| கோபால்பூர் | 28·19 | 30·94 |
| வால்டேர் | 19·36 | 24·49 |
| காக்கினடா | 21·60 | 23·96 |
| மசூலிப்பட்டணம் | 15·25 | 25·14 |
| நெல்லூர் | 9·73 | 13·10 |
| மதராஸ் | 9·13 | 17·76 |
| கூடலூர் | 18·49 | 17·54 |
| நாகபட்டணம் | 11·76 | 13·20 |
| பாம்பன் | 3·13 | 5·32 |
| கொழும்பு | 34·24 | 41·85 |
| திருவநந்தபுரம் | 34·90 | 41·44 |
| கொச்சி | 82·63 | 88·41 |
| கள்ளிக்கோட்டை | 87·90 | 100·30 |
| மங்களூர் | 91·82 | 116·70 |
| மெர்க்காரா | 98·70 | 113·60 |
| ஐதராபாத் | 17·25 | 2·97 |
| பல்லாரி | 9·71 | 13·54 |
| கர்நூல் | 11 13 | 21·69 |
| கடப்பை | 10·10 | 21·69 |
| ஹாஸ்ஸான் | 22·31 | 25·02 |
| பெங்களூர் | 19·58 | 25·00 |
| கொடைக்கானல் | 27·40 | 33·02 |
| உதகமண்டலம் | 30·38 | 37·79 |
| கோயம்புத்தூர் | 6·21 | 9·73 |
| வேலூர் | 14·34 | 27·37 |
| சேலம் | 21·40 | 27·72 |
| திருச்சினப்பள்ளி | 13·69 | 16·42 |
| புதுக்கோட்டை | 15·73 | 19·24 |
| மதுரை | 8·28 | 17·87 |
| திருநெல்வேலி | 5·69 | 7·20 |

# Calendar—பஞ்சாங்கம்.

| அம்ருதாதி யோகம். | லக்னபாக்கி நா வி | அகசு நா வி | துலு உ | இங் உ | தமி உ | வா | 47-ப்ரமாதீசஹு ஐப்பசிமீ தக்ஷிணயனம்-சரத்ருது } கொல்லம்-1089 பஸலி-1323 \| இங்கிலீஷ்-1913ஹு அக்டோபர்மீ-நவம்பர் \| ஹிஜரி-1331 ஷவ்வால்-ஜுல்காத் |
|---|---|---|---|---|---|---|---|
| அசி | 5 16 | 29 27 | 15 | 16 | 1 | வி | பர 19-1, அசு 26-9, வஜ் 56-29, தை 51-14, தி 15-9, ரா 22-59, துலாரவி [25-44, அதிதி, விஷுவத்புண்யகால, ஆசுவினபகுள, இஷ்டி, அசூன்யசயனவிரு, சூன்யார்க்கம் |
| சி | 6 | 25 | 16 | 17 | 2 | வெ | த்வி 23-13, பர 31-35, விஷ்த் 56-38, வணி 54-55, துலாத்விதியாதி |
| அ | 4 55 | 24 | 17 | 18 | 3 | ச | த்ரி 26-23, கிரு 36-0, விய 55-59, பவ 57-34, தி 3-55, வியசிரா, சங்கடசதுர்த்தீ, கரகசதுர்த்தி கிருத்திகை |
| சி | 45 | 23 | 18 | 19 | 4 | ஞா | சது 28-28, ரோ 39-21, வரீ 54-25, கவு 59-2, தி 18-22, ரா 24-35, |
| அசி | 35 | 21 | 19 | 20 | 5 | தி | பஞ் 29-20, மிரு 41-31, பரி 51-55, கர 59-17, |
| மசி | 24 | 19 | 20 | 21 | 6 | செ | ஷஷ 28-55, திரு 42-25, சிவ 48-22, பத் 58-12, தி 2-59, கரிநாள் |
| சி | 14 | 18 | 21 | 22 | 7 | பு | ஸப் 27-10, புன 41-59, சித் 43-46, பால 55-47, தி 12-11, காலாஷ்டமீ |
| அசி | 3 | 17 | 22 | 23 | 8 | வி | அஷ் 24-4, பூச 40-15, சாத் 31-6, தை 52-1, தி 1-33, விருச்சிகாயன 59-38, அஷ்டமீதி, ராதாஜயந்தி |
| ம | 3 53 | 15 | 23 | 24 | 9 | வெ | நவ 19-38, ஆயி 37-13, சுப் 31-22, வணி 46-56, தி 10-47, திதிதுவய, இராமா |
| அசி | 43 | 14 | 24 | 25 | 10 | ச | தச 13-57, மக 32-58, சுப் 23-37, பவ 40-42, தி 5-13, ரா 22-5, ஏகாதசீதி, ஸ்மார்த்த ஏகா, திவாமா, |
| சிஅ | 32 | 13 | 25 | 26 | 11 | ஞா | ஏகா 7-11, உப 52-23, பூர27-43, பிரா15-2, கவு 33-28,ரா 14-47,வைஷ்ணவஏகா,கோவத்ஸத்வாத்தசீ,அவமஸ்நானம், யமதீபம், கோத்ரிராத்ர விருதாரம்பம் |
| சி | 22 | 11 | 26 | 27 | 12 | தி | த்ர 51-24, உத் 21-45, மா 5-47, உப 50-18, கர 25-33, ரா 11-39, வைசிரா, பிரதோஷ, இரவு தீபாவளி |
| சி | 11 | 10 | 27 | 28 | 13 | செ | சசி 42-59, ஹஸ் 15-18, விஷ் 46-13, பத் 17-12,ரா 3-57, மாஸசிவரா,கிருஷ்ங்காரகசதுர்த்தசீ, யமதர்ப்பணம் |
| சி | 1 | 9 | 28 | 29 | 14 | பு | ● 34-44, சித் 8-49, பிரீ 36-31, சது 8-49, தி21-20,ஸர்வஅமா,அலப்யம்,கேதாரீ,உல்காதானம்,பிண்டபிதிரு |
| அசிசி | 2 51 | 7 | 29 | 30 | 15 | வி | ப்ர 27-2, சுவா 2-40, உப 54-39, ஆயு 27-15, கிம் 0-47, உப 53-32, தி 15-20, பிரதமாதி, கார்த்திகசுத்த, இஷ்டி,பலிபூஜை,சந்திராஸ்தம்-30-45,ஆதலால் சந்திரதர்சனமின்றில்லைஇம்மீ போதாயனஅமாவுமில்லை |
| சிம | 40 | 5 | 30 | 31 | 16 | வெ | த்வி 20-20, அனு 53-10, ஸவு 18-48, தை 47-26, தி 6-32, திதிதுவய, யமத்விதியா, சந்திரதர்சனம் |
| சி | 30 | 4 | 1 | 1 | 17 | ச | த்ரி 14-57, கேட் 50-35, சோ 11-27, வணி 42-55, தி 6-25 சதுர்த்தீ, சதுர்த்தீவிரு |
| அசி | 19 | 3 | 2 | 2 | 18 | ஞா | சது 11-21, மூல 49-55, அதி 5-29, பவ 40-18, தி 10-9, ரா 16-50 |
| உ | 9 | 1 | 3 | 3 | 19 | தி | பஞ் 9-45, பூரா 51-19, சுக 1-5, உப 57-16, கவு 39-45, தி 14-14, ஷஷ்டியுபவா, ஸ்கந்தஷஷ்டீ |
| பிசி | 1 59 | 29 0 | 4 | 4 | 20 | செ | ஷஷ் 10-17, உரா 54-44, சூல 57-13, கர 41-21, தி 12-15, வன்னிஷஷ்டீ கரிநாள் |
| சிபி | 48 | 28 59 | 5 | 5 | 21 | பு | ஸப் 12-53, திருவோ 59-58, கண் 57-32, பத் 44-53, தி 5-30, அஷ்டமீதி, புதரஷ்டமீ, சிரவணஉப |
| சி | 38 | 57 | 6 | 6 | 22 | வி | அஷ் 17-19, அவி 60-0, விரு 9-0, பால 50-4, தி 11-0, அதிதி, கோபாஷ்டமீ |
| சி | 27 | 56 | 7 | 7 | 23 | வெ | நவ 23-7, அவி 6-40, துரு 60-0, தை 56-22, தி 27-53, நவமீதி, கிருதயுகாதி |
| அம | 17 | 55 | 8 | 8 | 24 | ச | தச 29-45, சத 14-16. துரு 1-14, கர 29-45, ரா 4-28, |
| சிஅ | 7 | 54 | 9 | 9 | 25 | ஞா | ஏகா 36-31, பூட் 22-10, வியா 3-46, வணி 3-8, ரா 20-22, ஸர்வஏகா, பீஷ்மபஞ்சகவிருதாரம்ப |
| சி | 0 56 | 52 | 10 | 10 | 26 | தி | த்வா 42-56, உட் 29-48, ஹர் 6-14, பவ 9-48, மன்வாதி, துளஸீவிவாஹம், பிரபோதோத்ஸவ, சாதுர்மாஸ்யவிருதபூர்த்தி, இராமா |
| சி | 46 | 51 | 11 | 11 | 27 | செ | த்ர 48-30, ரே 36-44, வஜ் 8-14, கவு 15-50, தி 3-9, பிரதோஷம், திவாமா |
| மசி | 35 | 50 | 12 | 12 | 28 | பு | சசி 53-1. அசு 42-40, விஷ்த் 9-33, கர 20-54, ரா 2-54, வியசிரா, வைகுண்டசதுர்த்தசீ |
| சிம | 25 | 49 | 13 | 13 | 29 | வி | ○ 56-19, பர 47-25, விய 9-59, பத் 24-50, தி 8-42, மன்வாதி, ஆகமாவை அன்னபிஷேக, உல்காதான |
| சிம | 0 15 | 28 48 | 14 | 14 | 30 | வெ | ப்ர 58-26, கிரு 51-4, வரீ 9-30, பால 27-31, தி 19-23, கார்த்திகபகுளம், இஷ்டி, கிருத்திகை துலாப்ரதமாதி, பத்மகயோகம் |

| | | | |
|---|---|---|---|
| | | ச | செ |
| ரா | 9-விரு-பு<br>24-துலா-சு<br>25கட-செ | | கே |
| குரு | | ர பு | சு |

# சாஸ்திரீய உரங்கள்.

---

### எங்கள் ராணிப்பேட்டை உரக்கிடங்கு.

## விசேஷ உரங்களின் சில நற்சாட்சிப் பத்திரங்கள்.

சென்ற மூன்று வருஷங்களாக பிரஸிடென்ஸி மானியூர் வொர்க்ஸ் ஏஜண்டுகளாகிய மெஸ்ஸர்ஸ் பாரி கம்பெனியார் எனக்குக் கொஞ்ச தினுசு உரங்கள் உத்தரவாத சோதனைக்கு உட்பட்டு அனுப்பி யிருக்கிறார்கள். எனக்கு அவர்களிடத்திலிருந்து வந்த சரக்கெல்லாம் எப்பொழுதும் நிறை சரியாகவும் கோணிகள் கொஞ்சங்கூடப் பழுது படாமலும் உரங்கள் புதியனவாயும் இருந்தன என்றும், அவ்வுரங்களால் எனக்கு நல்ல பலன்கள் கிடைத்தன என்றும் சொல்வதில் எனக்குச் சந்தோஷம். இந்தக் கம்பெனியார் உத்தரவாத சோதனைக்த உட்பட்டு உரங்களை அனுப்புகிறபடியால், தென் இந்தியாவில் காபி முதலிய செடிகள் வைத்துத் தோட்டப்பயிர் செய்பவர்களெல்லாரும் இவர்களை ஊக்கத்தோடு ஆதரிக்கவேண்டுமென்பது என்னுடைய அபிப்பிராயம்.

ஆர்க்கேடியா, நாகலூர்போஸ்டு,<br>ஷேவராய்ஸ்.<br>1908, ஆகஸ்டு 8உ.

சார்ல்ஸ் டிக்கின்ஸ்.

தங்களுடைய கம்பெனியிலிருந்து நான் வாங்கிய உரங்கள் நாணயமான சரக்காயும் தென் இந்தியாவில் நான் மற்ற இடங்களில் வாங்கக் கூடியதைவிட கோணி வீதத்திற்த விலை சரசமாகவும் இருந்தன என்று சொல்வதில் எனக்கு சந்தோஷம்.

ஸித்ர புன்னா,<br>கொப்பா, மைசூர் ராஜ்யம்.<br>1908, ஆகஸ்டு 10உ.

தங்கள் விசுவாச முள்ள,<br>எப். ஜே. பார்ட்டன்.

(இன்னும் வரும்.)

**The Presidency Manure Works, Ltd.,**<br>**Ranipet.**

***Managing Agents: Parry & Co., Madras***

**இராஜதானி ரஸாயன உரக்கிடங்கு, இராணிப்பேட்டை.**

மானேஜிங் ஏஜண்டுகள்:—

**பாரி அண்டு கம்பெனி,**<br>மதராஸ்.

# KHADER AND YOUSUFF BROS

## Watch Dealers, P. L., MADRAS, E. C.

### "ஸிர்தார்"



இது மேல் சாவியுள்ளதும், கனத்த கண்ணுடியால் மூடிபோட்டதும் மிகவும் சரியான காலத்தைக் காட்டக் கூடியதும்வெகு நாளைக்கு ஒடக்கூடியதுமான வெகு நேர்த்தியான கை கடியாரம். தென் இந்தியா ரயில்வே உத்தியோகஸ்தர்களுக்கு ஸப்ளை செய்யப்படுகிறது. மிகவும் சிறந்த "லீவர்" கடியாரம்.

விலை ரூ. 12.

### "உத்தியோகஸ்தர்"

இது உத்யோகஸ்தர்களுக்குஸ்பெஷலாக செய்யப்பட்ட கடியாரம். மேல்சாவியுள்ளது. ஒருபக்கம் கனத்த கண்ணுடியால் மூடியுள்ளது. சரியான காலம் காட்டும். முரட்டுத்தனமாயுபயோகித்தாலும்கெட்டுப்போகாது. கொஞ்சம் சிறிய சயிஸ். அழகாயும் திருப்திகரமாயு மிருக்கும்.



தபாற்கூலியுள்பட விலை ரூ. 10

## கோல்ட் மெடல் "ய்ாங்கீ" ஸிர்க்யூட் கட்டில்.



இது மிகவும் சிறந்த அமெரிக்கன் மரத்தினுல் செய்யப்பட்டு, வெளியே போகிறவர்களுக்கு மிகவும் உபயோகமானது. இது $6\frac{1}{2}$ அடி நீளம் $2\frac{1}{2}$ அடி அகலம் $1\frac{1}{2}$ அடி உயரம். அதனுடைய கிறை 15 பவுண்டுதான். 1000 பவுண்டு எடை தாங்கும். கோடை காலத்தில் கிலா வெளிச்சத்தில் மிகவும் லகுவாய்த் தூக்கிச்கொண்டுபோய், வேண்டுமான இடத்தில் போட்டுக்கொண்டு தூங்கலாம். கொசுவலை யுள்பட ரூ. 20 இதற்கு எழுதும்போது, சமீபத்திலுள்ளரயில் ஸ்டேஷனை எழுதுவதுடன் ரூ.5 அட்வான்ஸ் அனுப்பவேணும்.

## காதர் அண்டு யூஸப் பிரதர்ஸ்,

கடியார வர்த்தகர்கள், கவர்மேண்டு ஸப்ளையர்கள்,

பி. எல். சென்னை, E. C.


MADRAS: Printed by Thompson & Co. at the Minerva Press